www.padippakam.com

அச்சம் தவிர்

அகநாடு

மாதஇதழ் பிப்ரவரி 2001

தனிச்சுற்றுக்கு மட்டும் நன்கொடை ரூ. 15/-

படிப்பகம்

www.padippakam.com

With best compliments from

JJSR

JAI JAI

SAI RAM FILMS

Film Distributers

28, Meeran Sahib Street, 2nd Floor
Mount Road, Chennai - 600 002
Phone : 859 3518 Res : 375 0818

படிப்பகம்

www.padippakam.com

வாழ்த்து

வாழ்க! வாழ்க!

-கவிஞர். முத்துலிங்கம்

கட்டுரை

காலத்தின் கேள்வியில் உறைக்கூ

-மு. முருகேஷ்

2000 தமிழ்த் திரைப்படங்கள்.
- ஒரு கண்ணோட்டம்

- நிலவன்

சிறுகதை

செவ்வந்தியாரம்

-எஸ். கிஷோர்குமார்

மழைத்துளி

-ப. பாலமுருகன்

பார்த்தாவுக்கு எழுதாத கடிதம்

- ஜி. சரவணன்

கவிதை

சென்று தேய்ந்து இறுதல்

- விக்ரமாதித்யன்

மனிதாபிமானம்

-கவிதா இரவீந்தர்

எல்லாவற்றையும் மறந்து

-முரளி கனகசபை

மொழிபெயர்ப்பு

பன்றியை உடைத்தல்
(ஹீப்ரு சிறுகதை - எட்கர் கெரேட்)

- சா. தேவதாஸ்

குறுநாவல்

டினோசர் முதல்வர்

-அஜயன் பாலா

தமிழின் அகற்சி வேண்டி -
புலம்பெயர் தமிழர் வாழ்வு

- தெ. மதுசூதனன்

படிப்பகம்

www.padippakam.com

அகநாடு

இதழ் 1

பிப்ரவரி 2001

ஆசிரியர்

ச. சண்முகநாதன்.

துணை ஆசிரியர்

சு. முரளிகனகசபை

உதவி ஆசிரியர்

ப. பாலமுருகன்

வடிவமைப்பு

கோ. செந்தில்

நன்கொடை ரூ.15/-

பதிப்பாளர்

சி.எஸ். மணிமாறன், எஸ் முத்து

முன் அட்டை ஓவியம்

சா. முத்துக்கிருஷ்ணன்

தொடர்பு முகவரி

அகநாடு

3/4. புதிய போஸ்டல் காலனி

தி.நகர்.சென்னை-600 017.

தொலைபேசி-4323089

படிப்பகம்

www.padippakam.com

வாழ்க! வாழ்க!

மொழி வாழ்க! இனம் வாழ்க! தன்னாட்டை முன்னேற்ற
முனைகின்ற தலைவர் வாழ்க!
தொழில் வாழ்க! கலைவாழ்க! தொடர்கல்வி அறிவியல்
துறைகள் பெருகி வாழ்க!
எழில் வாழ்வு பிறர் வாழ, எழில்தேய உழைக்கின்ற
இனிய தொழிலாளர் வாழ்க!
மழைபோலப் பிறர்க்காக வாழ்கின்ற சான்றோர்கள்
மகிழ்வோடு வாழ்க வாழ்க!

தாய்நாட்டைக் காக்கின்ற தன்மானப் போர்வீரர்
சந்ததி தழைத்து வாழ்க!
சாய்த்தாலும் சாயாத தஞ்சாவூர் பொம்மைபோல்
தகுதியில் நிமிர்ந்தோர் வாழ்க!
வாய்க்காத பதவிகள் வாய்த்தாலும் கையூட்டு
வாங்காத நல்லோர் வாழ்க!
தாய்போலப் பிறர்பெண்ணைச் சந்ததம் நினைக்கின்ற
சான்றோர்கள் வாழ்க! வாழ்க!

படிப்பகம்

www.padippakam.com

இனம் மொழி உணர்வுடன் செயல்படும் பண்பாளர்
என்றென்றும் வாழ்க! வாழ்க!
தனம் வந்த போதிலும் உயர்குணம் மாறாத
தரங்கொண்ட மனிதர் வாழ்க!
கனம் கொண்ட புகழ் வந்தும் நெற்கதிர்ப் பணிவுகள்
காட்டிடும் தூயோர் வாழ்க!
வனம் கொண்ட புலிப்பண்பை செந்தமிழ்ப் பகைவர்மேல்
வைப்போர்கள் வாழ்க! வாழ்க!

கவிஞர்.முத்துலிங்கம்

அகநாடு திங்களிதழ் அறிவியலை இலக்கியத்தை
அனைவர்க்கும் தந்து வாழ்க!
தகவோடு சான்றோர்கள் ஆன்றோர்கள் பாராட்ட
தகுதியில் சிறந்து வாழ்க!
நகம் போல அவசியம் இவ்விதழ் தேவையென
நாட்டோர்கள் நவில வாழ்க!
பகல்போலப் புகழ்ஒளி பரப்பியே அகநாடு
பல்லாண்டு வாழ்க! வாழ்க!

படிப்பகம்

www.padippakam.com

காலத்தின் கேள்வியில் ஹைக்கூ...

-மு. முருகேஷ்

இந்திய மொழிகளில் பரவலாய் அறியப்பட்டும் கவனிக்கத்தக்க வரவேற்பைப்பெற்றுள்ள கவிதை வடிவம்... ஹைக்கூ (Haiku)

ஹைக்கூ... ஜப்பானிய கவிதை வடிவம் என்பது பலரும் அறிந்ததே. ஆயினும் நாம் எழுதுவதைப் போல மூன்று அடி கொண்ட புதுக் கவிதையல்ல ஹைக்கூ. அது ஜப்பானின் மரபுக் கவிதையாகும்.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் "வாகா" (waka) என்கிற கவிதை வடிவம் ஜப்பானில் பிரசித்திப் பெற்றிருந்தது. அது தமிழின் மரபுக்கவிதையாய் செல்வந்தர் களின் ஆதரவுடன் செழித்து நிற்க எளிய வடிவமாகவும், - சுதந்திர வடிவமாகவுமான "ரெங்கா" எனும் இணைப்பு கவிதை. உழைக்கும் மக்கள் இணைந்து பாடும் பாடலாகத் தோற்றம் கண்டது.

கி.பி. 14ஆம் நூற்றாண்டு முதல் 16ஆம் நூற்றாண்டு வரை ரெங்கா கவிதை வடிவம் சிறப்புப் பெற்றி -ருந்ததை ஜப்பானிய கவிதை வரலாறு வழி அறிய முடிகிறது.

கி.பி. 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட புதிய கவிதா தாகமும், மரபை மீறுதலுக்கான தவிப்புமே ஹைக்கூ கவிதைகள் வேர்விடக் காரணமாயிற்று. "தான்கா (TANKA) கவிதையின் நீட்சியாக 5-7-5 என்கிற 17 அசைவுகளை உடைய கவிதை வடிவமாக, கூட்டு கவியுருவாக்கத்தின் துண்டித்த பின் கவிதையாக... ஹைக்கூ நிலை பெறலாயிற்று.

பௌத்த குருமார்கள் மதக் கோட்பாட்டை மக்களிடம் கொண்டு

படிப்பகம்

www.padippakam.com

செல்ல முயன்றனர். கவிதைகளில் மிகச்சிறப்பான இடத்தைப் பெற்றிருந்த ஹைக்கூ கவிதை வழியே "ஜென் பௌத்தத்" தத்துவத்தை பதிவு செய்வதில் ஆர்வம் காட்டினர்.

ஜென் பௌத்தத் தத்துவம், "மனித வாழ்நிலை மாறக்கூடியது. மாறும் மனித வாழ்வை விடுத்து என்றும் மாறா இயற்கைக்குத் திரும்பு -வோம்..." என்றழைத்தது.

தமிழில் ஹைக்கூ கவிதை பற்றிய முதல் அறிமுகத்தைத் தந்ததே மகாகவி பாரதி சுதேச மித்திரன் இதழில் எழுதிய "ஜப்பானியக் கவிதை" என்கிற ஒருபக்க சிறுகட்டுரைதான். (நாள்- 16.10.1916)

"இயற்கையோடு இணைந்து இயங்குபனே கவிஞன்" என்று கூறும் பாரதி ஜப்பானிய கவிதையின் சிறப்பைக் குறிப்பிட்டு பாராட்டுகின்றார்.

"கருங்கச் சொல்லி விளங்க வைத்தல் ஜப்பானிய கவிதையின் விசேஷத் தன்மை", என்று நோகுச்சிப் புலவர் சொன்ன -தையே திரும்பக் கூறி, சிலாகித்துப் போகிறார்.

பாரதியின் இக்கட்டுரை வெளியான 60 ஆண்டுகளுக்குப் பிறகு, 1966 -ஜனவரியில் "கணையாழி" இதழில் சில ஹைக்கூ கவிதைகளை சுஜாதா மொழி பெயர்த்தார். "நடை" (அக். 1968) இதழில் சி. மணி (பழனிசாமி) ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளை ஆங்கிலம் வழி மொழிபெயர்த்து வெளியிட்ட போதும் தமிழ்க் கவிஞர்கள் பலரின் கவனத்தை குள்ள வடிவ ஹைக்கூ ஈர்த்தது.

இந்திய மொழிகளில் ஹைக்கூ வடிவத்தை அறிமுகப் படுத்தியப் பெருமைக் குரியவர்கள் ஆங்கிலப் பேராசிரியர்கள் பி. லால், நீலமணிப் புக்கான், விஷ்ணு நாராயணன், சி. மணி ஆகியோர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அறுபதுகளின் இறுதியிலும், எழுபதுகளின் துவக்கத்திலுமே இந்திய மொழிகளில் ஹைக்கூ பற்றிய அறிமுகமும் வரவேற்பும் கிடைக்கலாயிற்று.

ஆயினும், 1970-க்குப் பின்னரே மொழி பெயர்ப்பில்லாத தமிழ் ஹைக்கூ கவிதைகளை எழுதத் தொடங்கினர்.

அப்துல் ரகுமானின் "பால்வீதி" கவிதை நூலில் இடம் பெற்றுள்ள "சிந்தர்" எனும் தலைப்பிலமைந்த மூன்று வரிபாக்களே... தமிழின் முதல் ஹைக்கூ கவிதைகள் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தமிழ் ஹைக்கூ கவிதைகள் ஜப்பானியக் கவிதையின் அளவுகோல் கொண்டு எழுதப்படுவதில்லை. அதற்கான அவசியமும் இல்லையென்றே சொல்லலாம். ஆனாலும், தமிழில் எழுதப்படுகிற ஹைக்கூ கவிதைகள்

படிப்பகம்

www.padippakam.com

சில பொதுவான விதிகளைக் கொண்டு இருக்கின்றன என்பதையும் மறுப்பதற்கு இல்லை.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால்... மூன்று வரிகளையுடையதாய் தமிழ் ஹைக்கூ உள்ளது. (ஜப்பானிய ஹைக்கூ கவிதைகள் 6,7 வரிகளைக் கூட கொண்டுள்ளன)

* சுண்டக் காய்ச்சிய இறுகிய மொழிநடை

* மனசின் பதிவுகளைக் காட்சிப்படுத்துதல்

* மூன்றாவது வரி மின்தாக்கு

-இவைகளும் தமிழ் ஹைக்கூவின் அடி நீரோட்டமாக ஓடுகின்றன.

"மூன்று வரிகளில் ஒரு கவிதையா?" என முகஞ்சுளிப்போரும் இன்று நம்மில் உண்டு. ஹைக்கூ வெறும் காட்சிப் பதிவுதான். அதில் வாழ்வின் பிரச்சினைகளை சொல்லவேக் கூடாது. அதிலும் குறிப்பாக, காதல், சமூகம், கவிஞனின் தன் கூற்றாக எதுவும் சொல்லக் கூடாது..." என்கின்றனர் ஹைக்கூ ஆய்வாளர்கள்.

தமிழில் உள்ள குறள், சிந்தடி, அம்மானை போன்ற மரபு வகைகள் வடிவ அளவில் "ஹைக்கூ"வை ஒத்திருந்தாலும், வெறுமனே அவைகள் மூன்று வரிகளை கொண்டிருப்பதால் அவை "ஹைக்கூ"வாகி விடுவதில்லை.

ஹைக்கூ... ஒரு சுகமான அனுபவத்தைத் தரக்கூடியது. ஆராய்ச்சியாளர்கள் R.H, பினித் கூறுவது போல்..."ஹைக்கூ பாதியாய் திறக்கப்பட்ட கதவு"தான். படைப்பாளி கவிதையின் ஒருபக்கக் கதவைத் திறக்க, இன்னொரு கதவை திறக்கும் பொறுப்பு வாசகனுக்குப் போகிறது. இவ்வகையில் வாசகனும் கூட்டுப் படைப்பாளியாய் படைப்போடு கலக்கின்றான்.

முதலிரண்டு வரிகளில் ஒரு எதிர்பார்ப்பையும் மூன்றாம் வரியில் ஒரு எதிர்பாராத இன்ப அதிர்வையும் நல்ல ஹைக்கூ கொண்டிருக்கும்.

"ஹைக்கூவின் தந்தை" என்று அழைக்ககப்படும் பாஷோவின் கவிதையொன்றினைப் பார்க்கலாம்.

"பழைய குளம்
தவளை குதிக்க
நீரின் ஒலி" - என்கிற கவிதை பொழிப்புரை எதுவுமின்றியே மனக்குளத்தில் சலனங்களை எழுப்பிப் போகிறது.

பாஷோ, இசா, பூசன், ஷிகி... ஜப்பானிய "ஹைக்கூ நால்வர்" என அழைக்கப்படுகின்றனர்.

இது இசாவின் ஹைக்கூ.

"அரிசியைத் தூவினேன்

படிப்பகம்

www.padippakam.com

இதுவும் ஒரு பாவம் தான்
கோழிகளுக்குள் சண்டை"

மனப்பரப்பில் காட்சிகளை தீட்டாத ஓவியங்களாக எழுப்பிப் போகும் தன்மையிலானவை பூசனின் ஹைக்கூ.

"பாலமில்லை
கதிரவன் மறையத் தயார்
வசந்த கால மழை நீர்"

பருவ கால மாறுதலோடு இணைந்து நின்று வாழ்நிலை பற்றியும் பேசுகிறது ஷிகியின் இந்த ஹைக்கூ.

"ஒரே சத்திரத்தில்
விலை மகளிரோடு கூடவே
நிலவும் மலர்களும்".

-இந்நால்வர்களின் ஹைக்கூ வெளிப்பாடுகள் ஜப்பானிய மண்ணில் ஹைக்கூ கவிதைக்கான நிலைத்த புகழைச் சேர்த்தன.

"தமிழின் முதல் ஹைக்கூ நூல்" என்கிற அறிவிப்போடு 1984 ஆகஸ்ட்டில் அமுதபாரதியின் 'புள்ளிப் பூக்கள்' ஹைக்கூ நூல் வெளியானது.

அதனைத் தொடர்ந்து 2000-நவம்பர் வரை சுமார் 80 ஹைக்கூ கவிதை நூல்கள் தமிழில் வெளியாகி உள்ளன.

இரண்டாயிரமாண்டு கவிதை வரலாற்றில் இடம் பிடிக்க புதுக்கவிதை முப்பதாண்டுகளுக்கும் மேல் போராட வேண்டி வந்தது. ஆனால், ஹைக்கூ கவிதையே மிக குறுகிய காலத்தில் தனக்கான இருப்பை உறுதி செய்து கொண்டுள்ளது.

ஆய்வரங்கத் தலைப்பாகவும், பல்கலைக் கழக பாடத்திட்டத்திலும் இன்று ஹைக்கூ இடம் பிடித்-துள்ளது. 'ஹைக்கூ' குறித்த கருத்தரங்கமும், விவாதமும் பரவலாக நடைபெறத் துவங்கி-யுள்ளன.

ஹைக்கூ குறித்த வாதப்பிரதி வாதங்கள் இன்னும் ஓய்ந்துவிட-வில்லை தான்.

வெகுஜன இதழ்களில் மூன்றுவரி துணுக்குகளையும் விடுகதை-களையும் போட்டு 'ஹைக்கூ' என மலினமாய் அடையாளப்படுத்தும் போக்கும் மிகுந்துள்ளது. (மூன்று வரி டிசைன் போட்ட புடவைக்கு ஹைக்கூ புடவையென்றும், மூன்று வரி செய்திக்கு "ஹைக்கூ நியூஸ்" என்றும் பெயர் வைக்கிற ரசனைப் போக்கை என்ன வென்பது!)

தமிழ் ஹைக்கூ கவிதைகளில் விடுகதை உத்தி பயன்படுத்தப்-பட்டு வருவதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

'தமிழில் யாருமே இதுவரை ஹைக்கூ எழுதவில்லை' என்ற குரலும் சமீப காலமாக எழுப்பப் பட்டு வருகிறது.

தமிழ் ஹைக்கூ கவிதைகளும், ஜென் புத்தமதத் தத்துவத்தின் பார்வையில் நின்று பருவகால மாறுதல்களை மட்டுமே படம்

படிப்பகம்

www.padippakam.com

பிடிக்க வேண்டுமென யாராலும் கட்டளையிட முடியாது.

'ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டாலும் உள்ளடக்கத்தினால் தமிழ் படுத்துவதன் மூலம் தமிழ்ப்பண்பாடு அல்லது தமிழர் வாழ்வியலோடு ஒத்தியைந்த வெளிப்பாடாகப பிறக்கும் போது மட்டுமே தமிழ் ஹைக்கூ நிலைபெறும்'. (தமிழில் ஹைக்கூ, நெல்லை சு. முத்து, பக்கம் 190) என்கிற எதார்த்தத்தை உள்வாங்கிக் கொள்ளும் போது தான் தமிழில் வெளியாகும் ஹைக்கூ கவிதைகளைத் தழுவிக் கொள்ளத் தோன்றும்.

எங்கும் சிந்திக்கிடக்கும் இயற்கையின் அழகியலையும், மனித வாழ்வியலையும் தமிழ் ஹைக்கூ இன்றும் சகல பரிமாணங்களோடும் பதிவு செய்ய வேண்டும்.

2000 நவம்பர் வரை தமிழில் 80க்கும் மேற்பட்ட ஹைக்கூ கவிதை நூல்கள் வெளிவந்-துள்ளன.

ஹைக்கூ குறித்த ஆக்கப் பூர்வமான செயல்பாடுகளில், சென்னை - ஆசியவியல் நிறுவனம் 29,30,31. 03. 99 ஆகிய தேதிகளில் நடத்திய ஹைக்கூ குறித்த தேசிய கருத்தரங்கம் குறிப்பிடத்தக்கது.

தமிழ், கன்னடம், மலையாளம், ஒரியா, தெலுங்கு, இந்தி, வங்காளி, பஞ்சாபி, குஜராத்தி ஆகிய ஒன்பது மொழிகளிலிருந்தும் ஹைக்கூ கவிதை குறித்த கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இக்கருத்தரங்கின் விளைவாக, இதுவரை தமிழில் தான் ஹைக்கூ கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன என்பதை அறிய முடிந்தது.

இதுவரை வெளிவந்துள்ள ஹைக்கூ நூல்கள் குறித்து ஒட்டுமொத்தமான ஆய்வு ஒன்று செய்யப்பட வேண்டும்.

தமிழ்க்கவிதையின் போக்கில் ஹைக்கூவின்வரவு செறிவூட்டி யிருக்கிறதா? அல்லது நீர்த்துப் போகச் செய்திருக்கிறதா? என்பது திறனாய்வாளர்களும், காலமும் மட்டுமே முடிவு செய்ய வேண்டிய விஷயமாக உள்ளது.

இந்த நேரத்தில் கவிஞர். கல்யாண்ஜியின் கவிதை ஒன்று தான் நினைவுக்கு வருகிறது.

'நீ கவிதையென்று
எழுதுவதற்கு முன்னால்,
அந்த வார்த்தைகள்
தமிழில் இருந்தன...'

படிப்பகம்

www.padippakam.com

2000-தமிழ்த்திரைப்படங்கள்! ஒரு கண்ணோட்டம்

- நிலவன்

இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டான 2000ல் திரைக்கு வந்த தமிழ்த் திரைப்படங்களைப் பற்றிய ஒரு சராசரி கலைஞனின் பார்வை இது! வியாபாரப் பத்திரிகையோ, மசாலாப் 'பத்திரிகையோ அல்லாத 'அகநாடு' இதழில் எழுதுவதால், எண்ண ஓட்டத்திற்குக் கடிவாளமிடாமல், காகிதத் தெருக்களில் எழுத்துக்களின் ஊர்வலத்தைத் தொடர முடிவதில் ஒரு நிறைவு.

'ஜேம்ஸ்பாண்டு'- 'டபுள்ஸ்' - 'குட்லக்' போன்ற தமிங்கிலீஷ் தலைப்பிலும், 'குஷி' - 'ரிதம்' - 'குரோதம்' - சிநேகிதியே போன்ற தமிஸ்திருதத் தலைப்புகளுடனும் கூட படங்கள் வந்திருந்தன. என்ன செய்வது? 'தங்கமே தமிழுக்கில்லை தட்டுப்பாடு! என்ற பாடல் இடம் பெற்ற படம் 'டூயட்' அல்லவா? வாழ்க தமிழ்.

ஆங்கிலப் பட வாசனையில் 'சபாஷு'ம், 'குரோதமு'ம் ஓரளவு ஓடின. 'கந்தா கடம்பா கதிர்வேலா' - 'என்னம்மா கண்ணு' - 'உன்னைக் கண்தேடுதே' - 'பட்ஜெட் பத்மநாபன்' படங்கள் - அரைத்தமாவுடன் கிச்சுகிச்சு மூட்டியதால் முதலுக்கு மோசமின்றி ஓடின. 'ஏழையின் சிரிப்பில்' - 'சுதந்திரம்' -

படிப்பகம்

www.padippakam.com

'தை பொறந்தாச்சு -காக்கைச் சிறகினிலே' - 'சந்தித்த வேளை' - 'வல்லரசு' 'கண்ணன் வருவான்' - 'குபேரன்' - 'மனுநீதி' படங்களின் 'சென்டிமெண்ட்' படங்களின். 'சென்டிமெண்ட்' 'டச்'சில் உருகிய மக்கள், சில தவிர பிறவற்றை வெற்றிபெற வைத்தனர்.

இந்த வரையுடன் பழமையும், மூட நம்பிக்கைகளும் நிறைந்த எதார்த்தமற்ற கதைகளுடன் 'திருநெல்வேலி' - 'கரிசக்காட்டுப் பூவே' - 'சிம்மாசனம்' -'மாயி' படங்கள் வெளியாகிக் கொடுமை புரிந்தன.

அடிப்படையில் 'மாயி' சொன்னால் தான் மக்கள் ஓட்டுப்போட்டு எம்.எல்,ஏ. ஆக்குவார்களாம், அவர் தனது வாக்குறுதிகளை 5 ஆண்டுகளாக நிறைவேற்றாதது குறித்து, 5வது ஆண்டுதான் அறிந்து, மாயி கொடுமையான தண்டனை தருவாராம். அதோடு, மாயியின் 5ம் வயதிலேயே தாயார் தொழுநோயால் இறந்துவிட, மறுமணம் செய்யாத தந்தை, வேறொரு பெண்ணுடன் பல ஆண்டுகள் குடும்பம் நடத்துவதை 18 ஆண்டுகள் கழித்து அறியும் மாயி அரிவாளை எடுப்பாராம்! இதை எதிர்பார்த்த தந்தை தற்கொலை செய்து கொள்வாராம். ஆனாலும், சரத்குமாரின் தோற்றத்தாலும், சிறந்த நடிப்பாலும் வேறு போட்டிப் படங்கள் இல்லாததாலும் வெற்றி பெற்றது.

அரைத்த மாவிலும் புளித்த மாவு 'சீனு', 'வண்ணத்தமிழ்ப்பாட்டு' படங்கள் தோல்வியடைந்தன. 'அன்புடன்' - 'இளையவன்' படங்கள் பழைய கருவை புதிதாய்ச் சொல்ல முயன்று தோல்வியடைந்தன. வென்றிருந்தால், போட்டிக்கு இன்னுமிரண்டு நாயகன்கள் கிடைத்திருப்பர்.

'சின்னச்சின்னக்கண்ணிலே' - 'நினைவெல்லாம் நீ' - 'என் சகியே' - 'நீஎந்தன் வானம்' - 'புதிரா புனிதமா' - 'பெண்கள்' - 'அவள் பாவம்' என்று குறைந்த பொருட்செலவில் படங்கள் வெளியானது வரவேற்கத்தக்கது, அதே சமயம் மக்களைக் கவரு -மளவு கதை - விளம்பரத்தில் கவனம் காட்டுதல் தேவை. சின்னி -ஜெயந்தின் 'உனக்காக மட்டும்' பெற்ற வெற்றி சிறு - முதலீட்டுப் படங்கள் மீது நம்பிக்கை வைக்கத்தூண்டியுள்ளது. சென்ற ஆண்டு, ஐந்து பக்திப் படங்கள் வந்து திரையரங்குகளில் பெண்களை 'சாமியாட' வைத்தன. வாசனைப் படமென்று அரங்குகளில் 'சென்ட்' வீசிய 'நாகலிங்கம்' - 'ராஜகாளி -யம்மன்'-உண்டியலில் தவறி விழுந்த குழந்தை தன் சொந்தமென்று பக்தையிடம் பத்தாண்டுகளாக வாதிட்டு அலையும் 'பாளையத் -தம்மன்' - (இந்தக்கருத்தை ஏற்றுக் கொண்டால், தொட்டில் குழந்தை -களுக்குப் பதிலாக உண்டியல் குழந்தைகள் பெருகலாமே! அனாதைக் குழந்தைகளைக் கோயில் உண்டியலில் - போட்டுவிட்டால்

படிப்பகம்

www.padippakam.com

அம்மனே வளர்த்துவிடுவாரல்லவா? இதில், இயக்குனர் திராவிடப் பாரம்பரியம் மிக்கவர் வேறு!) 'கண்திறந்துபாரம்மா' - கூடுவிட்டு கூடு பாயும் 'பொட்டுஅம்மன்' என்று பெரியாரே வந்து வேப்பிலை அடித்தாலும், மூடநம்பிக்கைகளிலிருந்து தமிழனை மீள விடமாட்டோமென்று கண்டபடி பக்தியைக் காசாக்கும் கூட்டம், அறிவியல் அறிவின் வளர்ச்சி, பகுத்தறிவைத் தூண்டுமென்று பார்த்தால், 'கிராபிக்ஸ்' உத்திகளோடு முடை நாற்றம் வீசும் மூடநம்பிக்கைகள் நமது நீடுதுயில் நீக்கப் பாடுபட அறிவியக்கப் பேரவைகள் அவசியமல்லவா?

குறிப்பிடத்தக்க படங்கள் பற்றிச் சுருக்கமாகச்சில :

<u>சிநேகிதியே</u> - முழுவதும் பெண்கள் படமாம். பெண்களின் பிரச்சினைகளை அலசாமல், கொலை, போலீஸ் என்று திசைமாறிய விறுவிறுப்பான மசாலாப் படம்.

<u>கண்ணுக்குள்நிலவு</u> நல்ல நடிப்பிருந்தும் திரைக்கதைக் கோளாறால் எடுபடவில்லை.

<u>டபுள்ஸ்</u> பாண்டியராஜனுக்குக் 'கேரக்டரைசேஷன்' தெரியவில்லை என்று நிரூபனமானது.

<u>'உன்னைக்கொடுஎன்னைத்தருவேன்'</u> திருமணம், நாட்டுப்பற்று, கற்பு போன்ற கருத்துகளில் நமது சமூக மதிப்பீடுகள்மீது கேள்விக்கணைகள் எழுப்பியிருக்க வேண்டிய படம் இது. ஆனால், சரியானபடி திரைக்கதை அமைக்காமல், உணர்ச்சிமயக் காட்சிகளில் கூடச் சொதப்பியிருந்ததால் கேலிக்குள்ளானது.

<u>அப்பு</u> மாறுபட்ட கதையமைப்பில் புதுமையிருந்தாலும் கூட, இயந்தித்திரத் தனத்தை மாற்றாததால் தோல்வி.

திரைகடலோடித் திரவியம் தேட இருப்பதை இழக்கும் இளைஞர்கள் கதை

<u>வெற்றிக்கொடிகட்டு</u> 'வெறுங்கை என்பது மூடத்தனம், விரல்கள் பத்தும்' என்று தன்னம்பிக்கையூட்டிய படம். தேவையற்ற காட்சிகளிருந்தாலும், பாராட்டவேண்டிய வெற்றிப் படம்.

<u>குஷி</u> ஆண் பெண் மோதலில் 'யார் பெரிதெ'ன்ற ஈகோவை, விறுவிறுப்பான நிகழ்ச்சிக் கோர்வையில் சொன்னால் எப்போதும் வெற்றிபெறும் 'அன்பேவா' விலிருந்து குஷி வரை இது உண்மை.

<u>உயிரிலேகலந்தது</u> தோல்விப்படமென்றாலும், குறிப்பிட்டாக வேண்டும். நாம், நமது குழந்தைகளை வளர்க்கும் முறையை மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று சுட்டிக் காட்டியபடம். இடைவேளைக்குப் பின் நாயகன் சூர்யாவைக் காணாமல் போக விடாமல் திரைக்கதை அமைத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

<u>வானவில்</u> எளிய இனிய வெற்றிப்படம்.

படிப்பகம்

www.padippakam.com

பண்ணின் மனதைத் தொட்டு
ற்கனவே வந்த கதை என்றாலும் சான்ன முறையிலும், கிராபிக்ஸ் + வேக் நகைச்சுவை சிறப்பாக ருந்ததால் வெற்றிபெற்றது.

டிவாழ்ந்தால் கோடி நன்மை

சேகர் படம் வழக்கத்துக்கு மாறாக சயற்கைத்தனம் அதிகம். வெற்றி பற்றிருந்தாலும் அடுத்த படத்தில் கவும் கவனம். தேவை.

ண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்

இன்றைய நவநாகரிகச் சூழலில் ஓர் ழகான குடும்பக் கதை. கனவு ளையும், நடைமுறையையும் ஒப்பிட்ட ல்ல படம்.

ானத்தைப்போல எல்லோருமே, ல்லோருக்காகவும், எல்லோரையும் சித்து வாழும் ('Positive Thinking') நகிழ வைத்தபடம்.

ார்த்தேன் ரசித்தேன் அடுத்து, இன்றைய ளம் பெண்களிடம் காணப்படும், ணங்களை இரண்டு பெண் தாபாத்திரங்களை காட்டி, தோழிக்கும், ாதலுக்கும் வேறுபாடுகண்டு அமைதி ாக அணுகும் நாயகனையும் காட்டி, தாழிக்கும், காதலுக்கும் வேறுபாடுகண்டு அமைதியாக அணுகும் நாயகனையும் ாட்டி, அமர்க்களப்படுத்தியிருந்தார் சரண்!

முகவரி திரைஇசைக் கலைஞனாக வர றமையும் ஆர்வமும் மிக்க ளைஞனின் இன்னல்களை, அவனை ஆதரிக்கும் குடும்பத்தாரின் சூழுலை விவரித்தபடம். அவனைப் புரிந்து கொண்ட அவனது காதலி, அவனைப் பிரிவது கூட புரிதலால்தான் என்பது அழகிய அமைப்பு. முடிவு நம்பிக்கை -யூட்டுவதாக இல்லை என்பதைத் தவிர வேறுநெருடல் இல்லை.

ஹேராம் பிரமாண்டம் என்றால் பணத்தையும், மூளையையும், இப்படிச் செலவு செய்யுங்கள், என்று காட்டிய கமலின் கணக்குத் தவறியது எங்கே? உயிருடன் வாழ்ந்த ஒரு கதாபாத்திரத்தை மையப் படுத்தினால் பிரச்சினை வரலாமென்று . கற்பனையில் சாகேதராமைப் படைத்திருந்ததால், எல்லோரையும் ரசித்து ஒன்றமுடியாமல் செய்து விட்டது. மிகச் சரியாகத் தவறு செய்த தேவைப்படக் கூடிய தோல்விப் படம். அதிலிருந்து மாறி, காமடிகளம் புகுந்ததால் வந்தது.

தெனாலி. ஸ்லாப்ஸ்டிக் காமெடியை இவ்வளவு அழகாக இதற்கு முன் எவரும் தமிழில் சொன்னதில்லை. இன்றைய இளம் நாயகர்களுக்குச் சவாலாய் கமல் ஆடிப்பாடியதும், சிங்களத் தமிழ்ப் பேச்சும், இரசிக்க வைத்தன. ஆனால், கமல் சார் இன்னும் கொஞ்சம் யோசியுங்களேன்.

அலைபாயுதே திருமணத்தின் பின்தான் ஒரு பெண்ணுக்கும், ஆணுக்குமிடையே காதல் தேவையென்று நெஞ்சைக் கவரும் திரைக்கதையமைத்திருந்தார் மணிரத்னம். ஷாலினி, மாதவனுக்கும் பாராட்டுக்கள்.

படிப்பகம்

www.padippakam.com

பெண்கள், அவள்பாவம் படங்களைப் பார்க்க நினைக்குமுன் ஓடிவிட்டன.

மல்லி திரைப்படத்தை ஏதாவது திரைவிழாக்களில் பார்த்துப் பாராட்டலாம்.

புரட்சிக்காரன் 'ஏ தாழ்ந்த தமிழகமே!' என்றழைத்து மூடநம்பிக்கை ஒழிப்பு, எளியோரின் இயலாமை, அடிமைத்-தனம், கடவுள் மறுப்பு, போலிச் சாமியார்கள், என்று 'ஓவர்டோசாக' இருந்தாலும் 'கலைநயம்' தொழில் நுட்பம் என்று பார்க்காதீர்கள் பிரச்சாரமே என் நோக்கம்!' என்று இயக்குனர் வேலு பிரபாகரனே சொல்லிவிட்டபடியால், மக்களும் இதை வெற்றிப்படமாக்கிவிட்டபடியால், விமர்சனமின்றிப் பாராட்டலாம்.

பாரதி அந்த முறுக்கு மீசை கொண்ட முண்டாசுக் கவிஞனின் வரலாற்றை இரசிக்கும்படி படமாக்கிய ஞான. ராஜசேகரன், பாரதியாய்த் தோன்றிய ஷாயாஜி ஷிண்டே, செல்லம்மாவாக தேவயானி, பாரதிக்குக் குரல்தந்த ராஜீவ் எல்லோரையும் பாராட்டலாம்! பாரதியின் பணிகளால் விடுதலை வீறு பரவியது எப்படி என்பதைத் தெளிவுபடுத்தாத குறை தவிர வேறில்லை!

பிரியமானவளே! நாகரிக மோகத்தையும், கட்டுப்பெட்டித் தனத்தையும் மோதவிட்டு, சென்டிமென்டால் வென்ற படம்! இயக்குனர் 'ரிஸ்க்' எடுக்க விரும்பாததால், விவாதங்களிலும், கருத்து மோதல்களிலும் கூர்மையில்லை.

போகும் பாதை தூரம் பயணம் போகப்போக நீளும்.

பிரமாண்டம், கார் உடைப்பு, வெளிநாட்டுப் படப்பிடிப்பு என்று லட்சக்கணக்கில் செலவு செய்தால்தான் தமிழ்ப்படம் தயாரிக்க முடியும் என்ற எண்ணத்தைத் தகர்த்து, எல்லோரும் கதையைத் தேடத் தொடங்கியிருப்பதும் நம்பிக்கையைத் தருகின்றன.

நம்பிக்கையோடு நடை போடுவோம்!

- நிலவன்

படிப்பகம்

www.padippakam.com

"செவ்வந்தியாரம்"

– எஸ். கிஷோர் குமார்

"நடராச சாமி ஊருக்கே இவரு பெரிய தலைப்பா, இவரு மாதிரி, ஒரு பக்திமானை பார்க்க முடியாதுப்பா.. இவரு உசுறு காப்பாத்துப்பா-அபபடின்னு அவரு சொந்தகாரங்களும், ஊர்காரங்களும் எம்.ஜி.ஆருக்கு பிரார்த்தனை செஞ்சமாதிரி செஞ்சிக்கிட்டு இருந்தாங்க.

ஊர் என்னமோ சின்ன ஊர்தான். .. அந்த ஊர்ல ஒரு பெரிய நடராச சாமி கோவில். மார்கழி மாசம் வந்ததுன்னா ஒரே பூசையும் திருவிழாவாகவும் இருக்கும் அதுவும் நடராசசாமிக்கு திருவாதிரை வரும். திருவாதிரைக்கு முன்னாலே 10 நாளும் தினமும் சாயங்காலம் பூசை வைப்பாங்க... பூசை ஆரம்பிக்கும் முன்னால கோயில் அய்யர் முதலியாருக்கு பட்டு அங்கவஸ் -திரத்துல தலையில, தலைப்பா மாதிரி கட்டி மரியாத செஞ்சி சாமி கழுத்துல இருந்து "செவ்வந்தி பூ" ஆரம் எடுத்து முதலியாருக்குப் போட்டு மரியாத செய்வாரு.. முதலியாரு "மைக்"கே இல்லாம திருவாசகத்தை" நடராச சாமிக்கு முன்னால சொல்லுவாரு....

ஏத்த இறக்கமாராகத்தோட அழகா அச்சு புரளாம கணீருன்னு அவரு சொல்ற அழகுக்காக ஊர் சனங்க பூரா கோவிலுக்கு வருவாங்க. ஆறடி உசரம் கருப்பு

ஜி.ஆர். பிரைவேட் மருத்துவ மனையில் இரண்டாவது மாடியில் 4வது அறையில், இரண்டு கிட்னி இழந்து எதிர்கால வாழ்க்கைக்காக போராடிக் கொண்டிருக்கும்,

ஒரு உசுறு, ஆறடி உசரத்துல கருப்பு நிறத்துல நெத்தியில விபூதி குங்குமத்தோட சொந்தகாரங்களும், ஊர்காரங்களும் சுத்தி நிக்க கட்டில்ல படுத்திருந்துச்சு...

படிப்பகம்

www.padippakam.com

-நிறம், சட்டை போடாத உடம்பு, சந்தனம் பூசன நெஞ்சு, கழுத்துல "செவ்வந்தி பூ" ஆரம். தலையில கட்டுன முதல் மரியாதை தலைப்பா. இதுதான் முதலியார்.

"தென்னாடுடைய சிவனே போற்றி" அப்படின்னு முதலியார் கத்தி சொன்னதும் கூடி இருந்த சனங்க எல்லாம். சனங்க யெல்லாம்ன்னா.. அந்த ஊர்ல இருக்கிற நாயக்கமாருக, நாடாக்கமாருக, முதலியாருக, செட்டிமாருக, கொஞ்சமா தேவமாருக, இவுக எல்லாஞ்சேந்து, கையை மேலதூக்கி கும்புட்டுக் கிட்டே.....

"என்னாட்டவருக்கும் இறைவா போற்றி"ன்னு கத்தி சொல்லு வாக....

கோவிலுக்கு வெளியே, அதே நேரத்துல இருட்டுல ஒரு உருவம் மட்டும் நின்னுகிட்டு இருக்கும். அதே ஆறடி உசரம் சட்டையையே பார்க்காத உடம்பு கறுப்பு உருவம் எண்ணெய் தடவாத தலை கக்கத்துல ஒரு துண்டு...

இவருதான் அந்த ஊரு "சக்கிலி கிழவன்". பயபக்தியோட முதலியாரு பாடுற "திருவாச -கத்தை" மெய்மறந்து கேட்டு நின்னுகிட்டு இருப்பாரு. பூசை முடிஞ்சி பிரசாதம் எல்லாம் கொடுத்ததுக்கு அப்புறமா, முதலியாரு அவரு கழுத்துல போட்டிருந்த "செவ்வந்தி பூ" ஆரத்தை வாங்கறதுக்கு சின்ன பொம்பள புள்ளைகளும், ஆம்பள புள்ளைகளும் முதலியாருக்கு பின்னாலயே ஓடுவாங்க... இன்னிக்கு முதலியாரு நமக்கு மாலையை கொடுக்க மாட்டாரான்னு போட்டி போட்டுக்கிட்டு. "முதலியாரே எனக்கு", "முதலியாரே எனக்கு"ன்னு அவருக்கு பின்னாலேயே ஓடுவாங்க. ஆனா முதலியாரு தினமும் கழுத்துல போட்ட மாலையோடையே, வெளியே போவாரு. அங்க போயி கோவிலுக்கு வெளியே இருட்டை பார்த்து "ஏலேய்! சக்கிலி கிழவா" அப்படின்னு கத்துவாரு. எல்லா புள்ளைகளும் இருட்டையே பார்க்கும்.

"என்னசாமியோவ்" அப்படின்னு ஓடிவந்து முதலியாருக்கு முன்னால கூனிகுறுகி பவ்யத்தோட நிப்பாரு. "இந்தாடா" என்று தன் கழுத்தில கிடந்த மாலையை எல்லா புள்ளைகளும் தனக்கு கிடைக்கா -தான்னு ஆவலா எதிர்பார்த்த அந்த "செவ்வந்திப்பூ" ஆரத்தை

படிப்பகம்

www.padippakam.com

முதலியார் கழட்டி "சக்கிலிகிழவன்" கைக்குதூக்கி போடுவாரு. "சக்கிலிகிழவன்" அதை பயபக்தி யோடவும், மரியாதையோடவும், பிடித்து கண்ணுல ஒத்திக்குவாரு.

"ஏலேய்! மாலையை உன் பொஞ்சாதி கறுப்பிகிட்டே கொடுடா" நடராச சாமிகிட்ட நல்லபடியா வேண்டிகிடா. அது கண்கண்ட சாமிடா. அது எல்லோருடைய வேண்டுதல் -களையும் நிறைவேத்துண்டா! என்ன? என்று சொல்லி விட்டு முதலியாரு போயிருவாரு. முதலியாருக்கும், சக்கிலி கிழவ -னுக்கும் ஐம்பது வருட பழக்கம்.

என்ன நினைச்சாரோ! என் உசுறு போறதுக்குள்ள இத்தன வருசமாக சாமிகிட்ட நான் வேண்டிகிட்டதை உங்கிட்ட சொன்னாதான், எனக்கு என் நெஞ்சுபாரம் குறையும் புள்ள என்றார்" அவர்.

மேலும் "ஏய்! புள்ள நாம வேண்டிகிட்டதை எல்லாம் நடராச சாமி கொடுப்பாருன்னு சொல் றாங்க. நானும் வெவரம் தெரிஞ்சி பல வருசமா, சாமிகிட்ட வேண்டிக் கிட்டுதான் இருக்கேன். "சாமி அடுத்த சென்மத்திலியாவது நான் கோவிலுக்குள்ள வரணும் சாமி, அப்படியே நான் உசந்த சாதியில பொறக்காட்டியும், அவுங்க உடுத்துற வேட்டியேயாவது ஆகணும் இல்ல, அவங்க. உடம்புல பூசுற சந்தனம், குங்குமம், திருநீறாவாவது ஆகணும் சாமி. இல்லாட்டி முதலியார் சாமி, தலையில வைக்கிற முதல் மரியாதை பட்டு தலைப்பாயில இருக்கிற ஒரு பட்டு நூலாவாவது ஆகணும். அப்படியே என்னைய ஆக்காட்டாலும அவங்க உடம்புல ஏதாவது ஒரு உறுப்பாவாவது என்னை ஆக்குடா சாமின்னு, நான் வேண்டிகிட்டேம்மா என்று கறுப்பியின் மடியில் முகம் வைத்து அழுதாரு..

ஜி.ஆர் பிரைவேட் மருத்துவ மனையில் "டாக்டர்! ரொம்ப தேங்ஸ் டாக்டர்" எப்படியோ சரியான நேரத்துல எங்க அப்பா உயிர நீங்க காப்பாத்திட்டீங்க டாக்டர்" என்று முதலியாரின் ஒரே மகன் நடராசன், டாக்டரின் கையை பிடித்து குலுக்கினார்.

"ஒரு நோயாளியின் உயிரை காப்பாத்துறதுக்காக என்ன வேணாலும் ஒரு டாக்டர் செய்யணும். அதைதான் நானும் செஞ்சேன். அதுவும் உங்க அப்பா எவ்வளவு பெரிய மனுசன், எவ்வளவு பெரிய பக்திமான்., அவர காப்பாத்துறதுக்கு இது கூட நான் செய்யலைன்னா, எங்க அப்பா என்னைய டாக்டருக்கு படிக்க வைச்சதுல என்ன பிரயோசனம். அதுவும் நான் இந்தியாவிலேயே, "கிட்னி" ஆபரேசன் பண்றதுல "எக்ஸ்பர்ட்" ன்னு பேருவாங்கி என்ன பிரயோசனம்" என்று கூறி முதலியாரின் மகன் நடராசனின் கையை பிடித்து குலுக்கினார்.

"நீங்களும் எங்கெங்கேயோ, போயி பார்த்தீங்க உங்க சொந்தகாரங்க,

படிப்பகம்

www.padippakam.com

கிட்டவெல்லாம் கேட்டுப் பார்த்தீங்க. நீங்க செய்ற முயற்சியை பார்த்து எனக்கே பரிதாபமாக இருந்திச்சி. நான் என்ன செய்ய? நல்ல வேளை உங்க அப்பாவுடைய பிளட் குரூப்பும் .. என்று அடுத்து என்னவோ சொல்ல டாக்டர் தயங்கினார். முதலியார் மகன் "பரவாயில்லை டாக்டர் சொல்லுங்க" என்று சொன்னதும் உடனே டாக்டர் "இல்ல எங்க அப்பா" அப்படின்னு ஒரு நிமிடம் தன்னை இந்த அளவுக்கு டாக்டருக்கு படிக்க வைத்த தன் அப்பா" 'சக்கிலி கிழவனை' நினைத்து கலங்கிய பிறகு தொடர்ந்தார்.

"எங்க அப்பாவுடைய பிளட் குரூப்பும் ஒண்ணா இருந்துச்சு அதுவும் உங்க அப்பாவுக்கு இரண்டு கிட்னியும் ஃபெயிலியர். ஆனா எங்க அப்பாவுக்கு இரண்டும் நல்ல நிலமையில இருந்ததுனால ஒண்ணை எடுத்து உங்க அப்பாவுக்கு வைச்சி ஆபரேசனை சக்ஸஸ் பண்ணி விட்டேன்" என்றார்.

"ஆனா ஒரு விசயம் டாக்டர்! என்னதான் இருந்தாலும், உங்க அப்பாதான் எங்க அப்பாவுக்கு கிட்னி கொடுத்தாரு, அப்படிங்கிற விஷயத்தை உங்க அப்பாவுக்கு தெரியாமலேயே நீங்க மறைச்சதும், அதை நான் யாருகிட்டேயும் வெளியே சொல்லக்கூடாதுன்னு எங்கிட்ட நீங்க சத்தியம் வாங்கிட்டதை நெனச்சா" என்று முதலியார் மகன் சொல்லி கண் கலங்க சக்கிலி கிழவனின் மகன் டாக்டரின் கண் பார்வை ஜன்னலுக்கு வெளியே தெரிந்த எல்லையே இல்லாத வானத்தை நோக்கி நிலைக் குத்தியிருந்தது.

அடுத்தவருச திருவாதிரையில நடராசசாமி கோவில்ல, நடராச சாமிக்கு முன்னாலே எல்லாரும் கூடி நிற்க அங்க சக்கிலி கிழவரின் கிட்னியின் உதவியால் உயிர் வாழும் முதலியார்-அடித்தொண்டையில் இருந்து 'திருவாசகத்தை' சொல்லி கிட்டு இருந்தார். பூசை முடிஞ்சி முதலியார் கையால கொடுக்கிற "செவ்வந்திப்பூ" ஆரத்துக்காக சின்னப் புள்ளைங்க எல்லாரும் அவருக்கு பின்னாலேயே ஓடுனாங்க. ஆனா, கோயிலுக்கு வெளியே சக்கிலி கிழவரு முதலியார் கையால கொடுக்கிற "செவ்வந்திப்பூ" ஆரத்துக்-காக இருட்டுல காத்துகிட்டு நின்னுகிட்டு இருந்தாரு. அங்க டவுன்ல முதலியார் மகனும், சக்கிலி கிழவர்மகன் டாக்டரும் கை குலுக்கிக் கிட்டாங்க.

படிப்பகம்

www.padippakam.com

மழைத்துளி...

ப. பாலமுருஹன்

வானம் கண்விழிக்கும் நேரம். பூக்கள் பன்னீர் துளிகளாக, பனித்துளி-களை முத்தமிடும் ஈரக்காற்று, சேவல் சூரியன் முகம் பார்க்க, வாத்துகளுடன் ஆற்றங்கரையில் கைக்கட்டி காத்துக் கொண்டிருந்தது.

மலலிகை தோட்டத்து கோரிக்கையை ஏற்று, சூரியன் கண் விழித்தான். மீன் குஞ்சுகளுக்கு கண்கள் கூசும் என்று மேகம் குடைப்பிடித்தது.

பாலா...

கற்பனையில் குளித்து நிஜத்தில் தன்னை துவட்டிக் கொண்டான். "இதோ! அம்மா தேனீர் கொண்டு வருகிறாள்." என்று கூவிக்கொண்டே உள்ளே நுழைந்தது "தினதந்தி" பத்திரிக்கை, தேனீரும், தினநாளேடும், அன்றைய செய்தி-களை சுடச் சுட பேசிக் கொண்டி-ருந்தன.

பாலா கண்விழித்தான்...

வானம் இருண்டது. தூறல் சிறு சிறு பனிக்கட்டியாக பூமியை முத்தமிட்டது.

பாலா எழுந்தான், குளித்தான், உண்டான், அலுவலகம் செல்ல பேருந்து நிலையம் புறப்பட்டான். வழியில் மழைநீரில் தேங்கிய குட்டையில் தலையை எட்டி பார்த்தபடி தவளை காலை வணக்கம் சொன்னது.

படிப்பகம்

www.padippakam.com

பேருந்து வந்தது. நின்றது. ஏறினான் அவன் நிறுத்தம், இறங்கினான். அலுவலகம் சென்றான். தன் அறையில் அமர்ந்தான். நேற்று இவன் கையொப்பத்திற்கு கண்ணீரோடு காத்திருந்த கோப்புகள் கைகூப்பி காலை வணக்கம் சொன்னது. நேற்று நள்ளிரவு மரணமுற்ற தேதியை இன்று அடக்கம் செய்தான்.

தொலைபேசி அழைத்தது...

எடுத்தான். "ஹலோ" என்றான். எதிர் முனையில் "பிரியா" என்ற குரல். மௌனத்தில் அவன் உடம்பு வேர்த்தது..

மதிய உணவு வேளை...

"பிரியா" வந்தாள். பார்த்தாள். பார்த்தான். நான்கு விழிகளும் பனிக்குளத்தில் மீன் குஞ்சுகள் போல நீச்சல் அடித்துக் கொண்டன.

இப்படியே மூன்று வருடங்கள் காற்றில் காணாமல் போனது...

அலுவலக விடுமுறை.

"பிரியா" கடற்கரை சென்றாள். கண்ணகியின் சிலை கீழ் "விலைமாதர்கள்" பொதுக் கூட்டம்.

காந்தி சிலை கீழ் "இந்தி" எதிர்ப்பு போராட்டம்.

பாரதி சிலை கீழே பிராமணர் "தீண்டாமை" பொதுக் கூட்டம்.

படிப்பகம்

www.padippakam.com

பெரியார் சிலைக்கு கீழே தெய்வங்கள் போட்டோ விற்கும் ஒரு ஏழையின் கடை.

அண்ணாவின் சிலை கீழ் இந்திராகாந்தி பிறந்தநாள் விழா.

சலித்துக் கொண்டாள்.

அலையின் சாரல் அவள் இதழோரம் தீண்டியது.

மரங்களில் காகித பூக்கள். பட்டமாக காற்றின் மடியில் தலைச் சாய்த்து கொண்டு "அழகு மங்கையரை" ரசித்துக் கொண்டிருந்தது.

பிரியா... மணற்பரப்பில் அமர்ந்தாள்.

சுண்டல் விற்கும் பத்து வயது சிறுவன் ஓரக்கண்ணால் பார்த்தான்... சிரித்தாள். கலங்கிய அவளது விழிகளை தென்றல் வருடி விட்டது. நடந்தாள். காற்றோடு மௌன வார்த்தை பேசியது அவளது கூந்தல். வீட்டிற்கு புறப்பட்டாள். நட்சத்திரங்களை எண்ணியபடி, கூடவே துணைக்கு நிலவு, வீடு வந்தாள்.

உண்டாள்... உறங்கினாள்.

மறுநாள்...

அவள் அலுவலகம்... தன் திருமண பத்திரிக்கையுடன் வந்தாள். அவள் அப்பாவின் கட்டாய திருமணம். பாலாவிடம் தன் நிலை சொல்ல தேடினாள்: காணவில்லை. காரணம் கேட்டாள்.

அவன் அம்மா மரணம்.

அவன் முகம் தெரியும் முகவரி இல்லை.

பிரியா, மணமேடை செல்ல மூன்று தினங்களே. அவனை தேடி இவள் தொலைந்தாள். கண் கலங்கினாள் விழித்திரை கரைப் போட்டது.

கசக்கிப் போட்ட மேகத்துண்டு போல் பூமியில் புரண்டாள். புற்களில் புரண்டோடும் பனித்துளிகளோடு அவளது கண்ணீர்த்துளிகளை பூக்களுக்கு சமர்ப்பித்தாள்.

பாலா தன் காதலை அவளிடம், சொல்ல நினைக்கும்போது அவன் "நாக்கு" தடுத்து விட்டது. அவள் சொல்ல எண்ணும்போது "பெண்மை" தடுத்து விட்டது.

பிரியா வீட்டில் திருமண ஏற்பாடு படுஅமர்க்களம். தொலைந்த அவள் உயிர் பெற்றாள். பாலாவின் விலாசம் கேட்டறிந்து. அவன் முகம் பார்க்க, விடியலுக்குக் காத்திருக்கும் "மல்லிகை" போல பூத்துக் குலுங்கினாள், அவன் வீடு தேடி, காற்றோடு கைக்கோத்து நடந்தாள்.

பாலா வீடு...

படிப்பகம்

www.padippakam.com

பாலா... முகத்தில் கள்ளிச் செடி முட்கள் பூக்களாக பூத்திருந்தது.

பிரியா வந்தாள்...

அவன் வீடு முன், பூத்திருந்த புற்களும், முட்களும், பூக்களும் வரவேற்றது.

வீட்டினுள் சென்றாள். அவனது அம்மா புகைப்படம் உயிரற்று வரவேற்றது.

பிரியாவை மண்டபத்தில் எல்லோரும் தேடினர்...

பிரியா பாலாவிடம் திருமணம் தன் நிலை சொல்ல தன்னை திடப்படுத்திக்கொண்டாள். அவன் அறை சென்றாள். படுக்கையில் கண் மூடி இருந்தான். அவனை எழுப்பாமல் அடுப்படி சென்றாள். தேனீர் போட்டாள். எடுத்து வந்தாள். வைத்தாள். அவனருகே தின நாளேடு உணர்ச்சி இல்லாமல் நுழைந்தது. வீடு பெருக்கி, கோலம் போட, வாசல் சென்றாள். கோலம் போட்டாள். வந்தாள். அவள் வைத்த தேனீர் கோப்பை உள்ளே ஈக்கள் நீச்சலடித்துக் கொண்டிருந்தது. அவள் கூந்தல் பூக்களில் தேனீக்கள் மொய்த்தன.

நாற்காலி தொட்டிலில் தின நாளேடு அவனுடன். உறக்கத் -தோடு.

பிரியாவை அவள் அப்பா, அம்மா தேடினர். கடலில் விழுந்த கடுகு போல், எண்ணெயில் விழுந்த நீர்த்துளிபோல் பிரியா எங்கே என்று மாப்பிள்ளை பொரிந்தான்.

மண்டபம் காலியானது. வந்தவர்கள் உண்டு விட்டு சென்றனர்.

பிரியா, பாலா அருகே சென்றாள்.

தொட்டாள். உதிர்ந்தான்.

காரணம், இவள் நிலை (திருமண ஏற்பாடு) முன்னரே இவன் அறிவான். நாய் வெளியே ஊளையிட்டது.

வானம் இருண்டது. அவன் நித்திரை எந்த ஜென்மத்தில் கண் விழிப்போ? காற்று வாழை மரத்தை வேரோடு பிடுங்கி எறிந்தது. ஈக்கள் போட்ட துளையோடு அவன் உடம்பு...

அவன் மார்பில் தன் முகம் பதித்தாள். அவன் விண்ணில் மறைந்த செய்தி காற்று அவளிடம் மௌனமாக சொன்னது.

கத்தினாள். கதறினாள். துவண்டாள் அவன் நிலை கண்டு. வானம் கண்ணீர் விட்டது. அவன் மரணம் கேட்டு. அவள் சிந்திய கண்ணீரில் "மழைத்துளி"யும் கைக்கோர்த்துக் கொண்டது. சிறுசிறு துளிகளாக கரைந்த மழையில் அவளும் கரைந்து போனாள்.

படிப்பகம்

www.padippakam.com

சென்று தேய்ந்து இறுதல்

-விக்ரமாதித்யன்

இது
என்ன இது
என்னது
இது
குகை மனிதனொப்ப
வேட்டையாடித் திரிவது

ஆதிவாசிக்கும் நமக்கும்
என்ன பெரிய வித்யாசம்

இரை தேடித் தின்பது
தூங்குவது
புணர்வது
கேளிக்கையும்
கொண்டாட்டமுமாய்
காலம் கழிப்பது
பிறகு சலித்துக்
கொள்வது

எவ்வளவு
இனிய உலகம் இது
கவிதை சங்கீதம்
பாட்டு நாட்டியம்



படிப்பகம்

www.padippakam.com

வானம் பறவைகள்
காற்று மழை
தொன்மக் கதைகள்
சிரிப்பை
சிந்திக் கொண்டிருக்கும்
பெண்கள்
எதிலும் முழுசாய்
லயிக்க முடியாமல்
எப்பொழுதும்
இரை தேடிக்கொண்டும்
இருப்புபற்றி யோசித்த
படியே
என்ன இது இது என்னது

இந்தக் கவிதையை
இப்படி முடித்துவிடலாம்
அம்மாவைப்
பார்க்கையில்தான்
அர்த்தமிருப்பதாக
தோற்றுகிறது

வழமையான
முத்தாய்ப்பென்று
விமர்சிப்போர்க்கு இப்படி
இருநூற்றி நாற்பத்தி ஏழு
எழுத்துகள்

கலைத்துப் போட்டாற்கால்
கண்டமேனிக்கும்
சொற்கள்

விளையாட்டாய்
எனில்
வினையாயும்
வேறொரு முடிப்பு

தேவதைகளின் வசீகரம்
தெய்வத்தின்
அனுக்கிரகம்

பிச்சிப்பூ வாசம்
பேரியற்கை ரகசியம்

பேய்களின் உதரம்
பிணங்களின் நிணம்
பிசாசுகளின் கொட்டம்
பாவத்தின் சம்பளம்
தாயம் விழச்செய்யும்
மாயம் எங்கே
படித்துக்கொண்டாய்
ராஜா மகள் ராணியே
ரகசியக் காதல்
நாயகியே.

படிப்பகம்

www.padippakam.com

மனிதாபிமானம்

அபிமானம்
எங்கும் அபிமானம்
ஆடல்மேல் அபிமானம்
பாடல்மேல் அபிமானம்
ஆடைமேல் அபிமானம்
அணிகலன்மேல்
அபிமானம்
ஏன் இல்லை
மனிதாபிமானம்?

மனித வெடிகுண்டு
விமானக் கடத்தல்
வழிநெடுகக் கூக்குரல்
விழிதோறும் கண்ணீர்!
கொடிகளைக் காப்பாற்ற
தேசத்தைக்
தீயிலிடுகிறார்!
நிதி கொண்டு
விலைபேசி
நீதியை
குப்பையிலிடுகிறார்!
ஜனநாயகம் மறந்து
ஜனங்களை
எரிக்கிறார்!
கவிதை
சில நேரங்களில்
பொய் சொல்வதுண்டு.
கவிதா நான
நிஜம் சொல்கிறேன் !
இருப்போர்
சிலர் உண்டு !
இல்லார்
பலர் உண்டு!
இருப்பாரும் இல்லாரும்
இணைவாரே இங்கு!
புத்தாண்டும்
தமிழர் திருநாளும்!!

- கவிதா ரவீந்தர் -

எல்லாவற்றையும் மறந்து

சற்றுக்கு முன்
எழுதப்பட்ட
முதல் வரிக்கும்
கடைசி வரிக்கும்
இடையில்
என்ன நிகழ்ந்திருக்கும்

ஒரு சிசு
தாயின்
காம்புகளைப் பற்றி
சுவைத்திருக்கும்

ஒரு போர்வீரன்
மரணத்திருப்பான்

ஒரு நட்பு
கைகுலுக்கப்பட்டிருக்கும்

ஒரு பெண்
வேசியாகியிருப்பாள்

எல்லாவற்றையும்
மறந்து

நீயும் நானும்
மதுக்கிண்ணத்தில்
பிராந்தியோ விஸ்கியோ
நிரப்பி
சிரித்து மகிழ்ந்திருப்போம்

- முரளிகனகசபை

படிப்பகம்

www.padippakam.com

மொழிபெயர்ப்பு - ஹீப்ரு சிறுகதை

பன்றியை உடைத்தல்.

-சா. தேவதாஸ்-

ஒரு சிறுவ்னின் மனநிலையை விவரிக்கும் எளிய கதையாகத் தோன்றும். இதில், சில ஆழமான அம்சங்களை காண முடிகிறது. இப்போதைய வாசிப்பில் யூதர்களுக்கும் இஸ்லாமியரைப் போல பன்றி என்றால் ஆகாது. அது ஒரு அறுவறுப்பான பிராணி.

ஆனால், கிரேக்கரின் தெய்வமான ஜூபிடர், மென் மடியால் பாலூட்டி வளர்க்கப்பட்டார். மானுடனுக்கு மண்ணைக் கிளறும் உத்தியை கற்றுக் கொடுத்தது பன்றி என்பதால் தெய்வங்களுக்கு பலியிடக்கூடிய அளவு புனிதமாய் கருதப்பட்டது.

இக்கலாச்சார இழைகளை தொட்டு காட்டுவதாய் இருப்பது, "பன்றிகளுக்கு பூமி மீது எப்போதும் உற்சாகமே" என்னும் வாசகம்.

பார்ட் சிம்ப்சன் பொம்மை வாங்கித் தராததற்காக கோபம் கொண்டிருந்த சிறுவன், இப்போது பன்றி பொம்மையை உடைக்கச் சொல்லுவதற்காக கோபம் கொள்கிறான்.

பன்றியை யூதர் அருவருப்பதற்காகவும் தான் அவனது கோபம்.

Not Just Milk and Honey: An Anthology of Hebrew Short Stories/ Ed by Haya Hoffman, NBT, NewDelhi, 1998.

தொகுப்பிலிருந்து தமிழ் வடிவம் சா. தேவதாஸ்

- எட்கர் கெரெட்

அப்பா எனக்கொரு 'பார்ட் சிம்ப்சன்' பொம்மை வாங்கித் தரமாட்டார். அம்மா சரியென்றாள், அப்பா முடியாதென்று கூறிவிட்டார், நான் செல்லம் கொடுக்கப்பட்டு

படிப்பகம்

www.padippakam.com

விட்டேன் என்றான். "நாம் ஏன் அவனுக்கு வாங்கித் தரவேண்டும்? நாம் ஏன் வாங்க வேண்டும்? அவன் 'ஊம்' என்றால் நீ குதித்து விடுகிறாய்" என்றார் அம்மாவிடம். எனக்கு பணத்தின் அருமை தெரியவில்லை, இளமையில் இதனை நான் கற்றுக் கொள்ள -வில்லையெனில் எப்போது கற்றுக் கொள்ளப் போகிறேன்? 'கேட்ட மாத்திரத்தில் 'பார்ட் சிம்ப்சன்' பொம்மை வாங்கித் தரப்பட்ட குழந்தைகள் அடங்காதவர் களாகிவிடுவார்கள், கடைகளி லிருந்து திருடுவார்கள் தாங்கள் விரும்பியதையெல்லாம் லகுவாகப் பெற்றுப் பழகிப்போய்விடுவதால்', என்றார் அப்பா. ஆகவே 'பார்ட் சிம்ப்சன்' பொம்மைக்குப் பதிலாக, பின்புறத்தில் துளையுள்ள, அருவருப்பான சீனக்களிமண் பன்றியை வாங்கித் தந்தார், இப்போது நான் சரியாகி விடுவேன், அடங்காதவனாக மாட்டேன்.

இப்போது ஒவ்வொரு நாள் காலையிலும், எனக்குப் பிடிக்காத போதும், ஒருவேளை கோகோ பானம் குடிக்க வேண்டியிருந்தது. அப்படியே கோகோ வாங்கினால் ஒரு 'செகல்' தரவேண்டும். தோலின்றி வாங்கினால் அரை 'செகல்' இக்காசுகளைப் பன்றியின் பின்புறம் போட்டுவந்து குலுக்கி -னால், அது கலகலக்கும். நிறைந்து விட்டால் கலகலக்காது, சத்தம் வராது. அப்போது உனக்கு 'பார்ட் சிம்ப்சன்' பொம்மை வாங்கித் தருவேன்-இதுதான் அப்பா சொல்வது, இது ஒரு பாடமாக அமையும்.

உண்மையில் இப்பன்றி புத்தி சாலியே, தொடும்போது இதன் மூக்கு சில்லென்று இருக்கும், நாணயத்தைப் போடுகையில் புன்னகைக்கும் சுவாரஸ்யமானது என்னவென்றால், நாணயத்தைப் போடவில்லை யெனினும் புன்னகைக்கவே செய்யும் இதற்கு ஒரு பேரிட்டேன், எங்கள் பகுதியில் ஒரு காலத்தில் வாழ்ந்த பெஸாசன் என்பவரின் பெயரால் அழைத்தேன், அப்பாவால் அப்பெயர்ப்பட்டியை உரித்தெடுக்க இயலாது. பெஸாசன் எனது மற்ற பொம்மைகள் போலில்லை, மிக அமைதியானது, விளக்குகள், ஸ்பிரிங்குகள் மற்றும் உள்ளே கசியும் பேட்டரிகள் இல்லாதது. ஒரே ஒரு விஷயத்ததைதான் கவனிக்க வேண்டும். மேசையிலிருந்து தாவிடாதபடி கவனித்துக் கொள்ள வேண்டும். 'பெஸாசன், கவனமாயிரு நீ சீன களிமண்ணால் செய்யப் பட்டவன்' என்று நான் கூறும்போது புன்னகைத்து என் கையில் நான் வைத்துக் கொள்ளும் வரை பொறுமையாய் காத்திருக்கும். அது புன்னகை செய்யும்போது எனக்கு உற்சாகமாகிவிடும். அதற்காகத்தான் ஒவ்வொரு நாள் காலையிலும் தோலுடன் சேர்ந்த கோகோ பானத்தை குடிக்கிறேன். நாணயத்தை அதன் பின்புற வழியில் போட்டு, அதன் புன்னகை

படிப்பகம்

www.padippakam.com

துளியேனும் மாறாதிருப்பதைக் காண்கிறேன். பின்னர் அதனிடம் கூறுகிறேன் 'பெஸாசன் உன்னை நான் நேசிக்கிறேன். அம்மா, அப்பாவைவிடவும், உன்னை அதிகமாக நேசிக்கிறேன். எது வந்தாலும் சரி, கடைக்குள் புகுந்து கொண்டாலும் சரி. எப்போதும் உன்னை விரும்புவேன். மேசையிலிருந்து நீ தாவினால் தெய்வம் காக்கட்டும்.

நேற்று அப்பா வந்து மேசையிலிருந்து பெஸாசனை எடுத்து காட்டுத்தனமாய் குலுக்கினார். "அப்பா அவனுக்கு வலிக்கப் போகிறது" கவனம். ஆனால் அவர் குலுக்கிக் கொண்டே இருந்தார். "சத்தம் வரவேயில்லையே, சத்தம் வரவேயில்லை என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? நாளை உனக்கு 'பார்ட் சிம்ப்சன்' பொம்மை கிடைத்து விடும்". "சந்தோஷம், பார்ட்சிம்பசன் கிடைப்பது சந்தோஷம். ஆனால் பெஸாசனை ரொம்பவும் குலுக்கினால் அவனுக்கு வலிக்கும்." என்றேன். பெஸாசனை மேசையில் வைத்து விட்டு அம்மாவைப் பார்க்க போனார் அப்பா. ஒரு கையில் அம்மாவை இழுத்துக் கொண்டும், மறு கையில் சுத்தியலை எடுத்துக் கொண்டும் ஒரு நிமிடத்தில் வந்து விட்டார்.

"நான் சொன்னது சரியா, பொருட்களின் அருமை இவனுக்கு தெரியும், இல்லையா பையா? என்றார்.

"நிச்சயமாக, ஆனால் சுத்தியல் எதற்கு?" என்றேன். உனக்காகத்தான் என்றவர் என் கையில் சுத்தியலை வைத்தார். "கவனம்" என்றார், "கவனமாயிருப்பேன்" என்றேன். சில நிமிடங்களில் சலித்துப் போன அப்பா, "நடக்கட்டும் பன்றியை உடைத்து விடு" என்றார். "என்ன பெஸாசனையா?" என்றேன். "ஆம் பெஸாசனையேத்தான். உடைத்துவிடு பார்ட் சிம்ப்ஸன் உனக்கு தகுதியானதே, கடுமையாய் உழைத்திருக்கிறாய்" என்றார்.

தன் முடிவு வந்துள்ளதைப் புரிந்து கொள்ளும் பெஸாசன், சீனக் களிமண் பன்றியின் சோகமான புன்னகை செய்தான். பார்ட் சிம்பசன் நண்பனின் தலையில் சுத்தியால் அடிப்பதா? எனக்கு சிம்ப்சன் தேவையில்லை. அப்பாவிடம் சுத்தியலை தந்தேன். "பெஸாசனே எனக்குப் போதும்" உனக்குப் புரியவில்லை. இது பாடம் புகட்டுவதுதான். உனக்காக நான் உடைக்கிறேன்" என்றார் அப்பா. அப்பா சுத்தியலை உயர்த்திவிட்டார், அம்மாவின் இறுகிய விழிகளையும் பெஸாசனின் சோர்வான புன்னகையினும் நோக்கினேன், நான் ஏதாவது செய்யவில்லையெனில் அவன இறந்து போவான். அவர் காலை பிடித்துக் கொண்டு "அப்பா" என்றேன். "என்ன யோவி?" சுத்தியலை உயர்த்திய கையுடன் அப்பா கேட்டார். "எனக்கு இன்னொரு நாணயம் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

நாளைக்கு கோகோ குடித்த பின் இன்னொரு 'செகால்' தரவேண்டும். அதன் பின் உடைக்கலாம்" என்று உறுதி அளித்தேன். "இன்னொரு செகால்?பையனின் விழிப்புணர்வை வளர்த்திருக்கிறேன், பார்த்தாயா?" புன்னகைத்த அப்பா, கத்திகளை மேசையில் போட்டார். "ஆம். விழிப்புணர்வுதான். நாளைக்கு" என்றேன். என் தொண்டையில் கண்ணீா துளிகள் நின்றன.



அவர்கள் போனதும் பெஸாசனை கட்டிக்கொண்டு, அழுது தீர்த்தேன். எனது கைகளில் நடுங்கிய பெஸாசன் ஒன்றும் சொல்லவில்லை. அவன் காதுகளில் "கவலைப்படாதே நான் உன்னை காப்பாற்றுவேன்" என்று கிசுகிசுத்தேன். இரவில் அப்பா தொலைக்காட்சி பார்த்துவிட்டு தூங்கச்செல்லும் வரை காத்தி-ருந்தேன். அமைதியாய் எழுந்து பெஸாசனுடன் நழுவினேன். ஒரு முள்ளுக்காட்டை எட்டும் வரையும் இருளில் நெடுநேரம் நடந்தோம். தரையில் பெஸாசனை வைத்து விட்டு "பன்றிகளுக்கு பூமி மீது எப்போதும் உற்சாகமே, அதிலும் குறிப்பாக முள்ளுக்காடுகள் என்றால் கொண்டாட்டம்தான" என்றேன். பதிலுக்காக, நான் காத்திருக்க பெஸாசன் ஒன்றும் சொல்ல வில்லை. விடைபெறுவதற்காக அவன மூக்கை தொட்டபோது சோகமாக நோக்கினான். மீண்டும் தான் என்னை காணபோவதில்லை என்பதை அறிவான்.

குறிப்பு

(எட்கா் கெரெட் (கி.பி. 1967) டெல் அவிவைச் சேர்ந்த எகரெட் ஒரு சிறுகதை ஆசிரியர், திரைப்பட கர்த்தா, பத்திரிக்கை கட்டுரையாளர் மற்றும் காமிக்ஸ் எழுத்தாளர்.)

படிப்பகம்

www.padippakam.com

ஜி. சரவணன்



பார்த்தாவுக்கு... எழுதாத கடிதம்...

ரொம்பவும் குளிராயிருந்தது. சில்லென்றிருந்த தண்ணீரை கைகளால் அள்ளி அள்ளி கைகளையே கழுவிக் கொண்டிருந்தேன். நெடுநேரம் இப்படிச் செய்த பிறகு முகம், கை, கால்,

படிப்பகம்

www.padippakam.com

கழுவி ஓசையின்றி வீட்டில் நுழைந்து தலைவாரிக்கொண்டு . வீட்டினுள் நுழைந்தேன். அம்மா இன்னும் எழுந்திருக்கவில்லை. அம்மா எப்போது எழுந்திருப்பாள் என்று ஒருபோதும் கண்டறிய முடிவதேயில்லை. அனைவரும் விழித்தெழுகிறபோது வீட்டின் பெரும்பகுதி வேலைகளை முடித்துவிட்ட மாதிரியான களைப்பில் தென்படுவாள். இதற்காகவே இரவெல்லாம் கொஞ்சம் தூங்குவதும், எழுந்திருக்கிற நேரம் வந்திருக்கிற மாதிரி திடீரென்று விழித்து பார்ப்பதுமாய் சரியானபடி தூங்காமல் அம்மாவுக்கு முன் எழுந்தாயிற்று. ஆனாலும், கிளம்புகையில் வாசல் வரை வந்து அம்மா வழியனுப்பி வைத்தாள். இனி, திரும்பவும் ஊருக்கு வரும் நாள் குறித்த எந்த அபிப்ராயமும் சொல்லாதது அம்மாவுக்கு வருத்த மளித்திருக்க வேண்டும். ஆனாலும் சந்தோஷ உணர்வோடு அவளால் இந்நேரம் பேச முடிந்தது. சிலுசிலுவென்று தழுவி பரவிய குளிரில் விரைந்தேன். இன்னும் ஒரு மணி நேரத்தில் பேருந்தை பிடித்தாக வேண்டியஅவசரம் நடையிலிருந்தது. சென்னையில் இத்தனை குளிரில்லை. ஊரிலிருந்து வந்ததிலிருந்து நண்பர்களை பார்க்கவும், ஊர்சுற்றுவதுமாய், இருந்ததில் ஆனந்தா பற்றி பார்த்தாவிடம் பேச முடியவில்லை. பார்த்தா எழுதியிருந்த கடிதத்தில் நீ ஊருக்கு வந்தால் கட்டாயம் ஆனந்தா போடும் ஒரு கோலத்தை பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார். தேடித்தேடி எதையும் ரசித்துப் பார்க்கிற எனக்கு ஆனந்தாவின் கோலமும் அது உள்ளடக்கிய அற்புதமும் நிறைவைத் தரும் என்றும் குறிப்பிட்டிருந்தான்.

தொடர்ந்து இரண்டு, மூன்று நாட்களாய் ஆனந்தாவின் கோலம் பார்த்திருந்த அவளையும், அவள் கோலம் போடும் நிகழ்வையும், பார்க்க இயல்பாய் எழுந்த ஆர்வத்தில் அடுத்த தெருவுக்கு எதிர் சந்தில் நுழைந்து ஆனந்தா வீட்டிற்கு போக உத்தேசித்தேன். வழி நெடுக பெண்கள் கோலம் போட்டுக்கொண்டிருந்தனர். சில வீடுகளின் வாசலில் கோலம் போட வசதியாக சிம்னி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ரெண்டு, மூன்று பேராய் சேர்ந்து கூட்டாய் கோலம் போட்டுக் கொண்டிருந்த வீட்டின் சிறிய பெண் ஒன்று வண்ணக் கலவைகளை கையில் வைத்துக்கொண்டு இந்த இடத்தில் இந்த நிறமாவது தான் போடவேண்டுமென்று அடம் பண்ணியது. கோலம் போடுவதை சற்றே நிறுத்தியபடி தலை நிமிர்த்தி பார்த்த யாரும் இந்நேரத்தில் பேருந்து நிறுத்தம் போகாமல் வேறு பாதையில் செல்வது குறித்து கேட்காதது நிம்மதியாயிருந்தது. யாரேனும் கேட்கிற பட்சத்தில் ஆனந்தா வீடு வரைக்கும் போவதாக கூறிவிட முடியுமா? தெரியவில்லை. பரமேஸ்வரன் மாமாவீடு, வருகிறவரைக்கும் படபடப்பாகவே இருந்தது. அத்தையோ, சுசியோ, வாசலில் கோலம் போட்டுக்கொண்டி

படிப்பகம்

www.padippakam.com

ருந்தால் கண்டிப்பாக கேட்பார்கள். ஊருக்குத் திரும்பிப் போகிற வழியில் பெட்டியைத்தூக்கிக் கொண்டு எங்கே இந்த பக்கம் என்று கேட்டால் என்ன என்று சொல்வது? புரியவில்லை. வெளியார் வேலைக்குச் சென்றுவிட்ட பிறகு சாதாரணமாகவே சந்தேக உணர்வுகளோடு பேசுகிற ஆட்களுக்கு பதில் சொல்லி தப்புவது பெரும்பாடாகி விடும்.

சுசிதான் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். ரொம்பவும் மும்முரமிருந்தது. வாத்தியக் கருவிகள் கோலத்தில் நாதஸ்வரப் பகுதியை கோடுகளால் இணைக்க இங்கும் அங்கும் தாவி நளினம் காட்டினாள். ஓசையின்றி கடந்தாகி விட்டது. இந்நேரம் சுசிக்கு மார்கழி மாதத்திற்கே உரிய இசைப்பாடல் ஞாபகத்திற்கு வந்திருக்குமா! அறியமுடியவில்லை.

தூரத்தில் இருந்து பார்த்தபோதே ஆனந்தா வாசலில் நீர்த்தெளித்துக் கொண்டிருந்தாள். அவள் வீட்டுக்குள் திரும்ப நுழையவும், விருவிருவென சென்று எதிர்வீட்டு சந்து முன்னையில் நின்று கொண்டேன். முன்பே இந்த இடத்தை பார்த்து வைத்திருந்தது வசதியாக இருந்தது. பின்புறம் அடைக்கப்பட்ட சந்தில் மறைவுக்கு தென்னங்கீற்றுகள் நட்டிருந்தது. நின்று கொள்ள வசதியாகவும், பயமின்றியும் இருந்தது, அங்கங்கே பனிநீர் சொட்டியதில் சில், சிலலென்று பட்டு நெளிய வேண்டியிருந்தது. திருடன் மாதிரி இப்படி வந்து என்ன காரியம் செய்யப்போவது என்று நினைத்து சிரிப்பாயிருந்தது.

பெட்டியை ஓரமாக வைத்திருப்பதை யாரும் பார்த்துவிடுவார்களோ என்ற பயத்தை மட்டும் தவிர்க்க முடியவில்லை.

வெகுநாட்களாய் வேலை நிமித்தம் வெளியூர் சென்றதிலிருந்து சொந்த ஊரே அந்நியமாகிப் போனதான உணர்வு. இவ்விடம் மன தைரியத்தை குறைக்கச் செய்திருந்தது. பக்கத்து வீட்டில் திடீரென்று விளக்கெறியவும் பதட்டமானது. வாசல் பெருக்கிக் கொண்டிருந்த ஆனந்தா லஷ்மி, லஷ்மி என்று குரல் கொடுத்தாள்.

குரல் கேட்ட அத்தனை சீக்கிரமாய் இதற்காகவே காத்திருந்த மாதிரி பத்து வயதிருக்கும் ஒரு சிறு பெண் அக்கா என்று சொல்லிக் கொண்டே ஓடி வந்தாள் தாடையில் இரு கைகளையும் வைத்தபடி முழுங்கால்களையும் குறுகிக்கொண்டு குளிருக்குத் தோதாக உட்கார்ந்து கொண்டாள். பனிக்காக தலையில் ஒரு துண்டை சுற்றியிருந்தாள். அவளிடம் என்ன கோலம் போடலாம் என்று ஆலோசித்தாள். அவளும் வாத்துக் கோலம், பொம்மைக் கோலம், காய்கறிக் கோலம் என்று கையை அங்குமிங்கும் அசைத்து உருவம் காட்டிக்கொண்டிருந்தாள். சற்றான யோசிப்புக்குப்பின் இன்றைக்கு வண்ணத்துப்பூச்சிக் கோலம் தான் என்று ஆனந்தா முடிவுரைத்தாள்.

எரிச்சலாய் இருந்தது இவளுக்கு கோலம் போடும்போது என்ன துணை

படிப்பகம்

www.padippakam.com



வேண்டியிருக்கிறது. ஒரு வாண்டுக் கண்ணை கூப்பிட்டு வைத்துக் கொண்டு கோலம் போடுவதைப் பற்றி ஆலோசனை நடத்துகிறாள். இவளுக்கு ஒரு சிறுபெண் யோசனை இந்நேரம் தேவையிருக்கிறது. இத்தனை பிரமாதமாக கோலம் போடுகிறவள் பெரும் அறிவாளியாக இருப்பாள் என்று எண்ணிக் கொண்டிருந்தது தவறானதா என்ன?

தினம்தினம் இவள் போடுகிற கோலத்தைப் பார்க்கிற யாரும் நின்று நிதானித்து லயித்த பிறகே நகர முடியும் என்பதான திறமைக்காரியாய் இருக்கிறாள். இவளின் முகத்தையும், கோலமிடும் விரல்களையும் பார்க்கவே இத்தனை பிரயாசைப் பட்டு வந்து ஒளிந்து கொண்டபடி நிற்பதை அவள் அறிவாளா?

எல்லாவிடத்திலும் எல்லோ -ருக்கும் மனசை உணர்த்துகிற மாதிரியான எந்த கருவியும் இல்லாதது எத்தனை துயரமானது. உணர்வுபூர்வமான கருத்துக்களையும் சிலரிடம் சொல்லமுடியாமல் போவது எத்தனை துரதிர்ஷடமானது.

ஆனந்தா சிறுவயதில் பச்சை நிற பாவாடையும், சந்தன நிற சட்டையுமாய் பள்ளிக்குப் போவாள். வட்ட முகமும் நெளி முடியில் ரெட்டை ஜடையும், குள்ள உருவமுமாய் பூக்கொல்லைக்கு நடுவே நிற்கும் பொம்மை கணக்காய் மற்ற பெண்களோடு நிற்பாள். வருஷங்களுக்குப் பிறகான அவளின் தோற்றத்தைப் பார்க்க தேவையில்லை. அதைவிடவும் மன உருவத்தில் அவளின் தோற்றம் வசீகரமான தாயிருக்கவுமில்லை.

ஊரிலிருந்து வந்த இரண்டு நாட்களில் பார்த்தாவின் கடிதத்திலிருந்தும் பிரசித்தமானதாக பையன்கள் பேசிக் கொள்வதிலிருந்தும் ஆனந்தாவின் கோலம் குறித்து நீண்ட எதிர்பார்ப்பு கிளம்பி யிருந்தது. அதன்படியே ஆனந்தாவின் கோலம் அறிந்த பிறகு அவளின் விரல்கள் மீதான மயக்கம் உண்டானது.

நின்றுகொண்டிருந்த இடத்தில் மெலிதான வெளிச்சம் வரத்துவங்கி விட்டது. ஆனந்தா தரையில் பரவும் வண்ணத்துப் பூச்சிக்கு சிறகை விரித்துக கொண்டிருந்தாள். கால்களை அகட்டி நின்று குனிந்தபடி கோலம் போடுவதில் மட்டுமே லயித்திருந்தாள்

தாவணியின் ஒரு பகுதியை தலையில் படரவிட்டிருந்தாள். அது அடிக்கடி நழுவுவதும், கொஞ்ச நேரத்

படிப்பகம்

www.padippakam.com

திற்கு பிறகு சரி செய்வதுமாயிருந்தாள். பனியின் கடுமையும், அதுகுறித்த அச்சமும் அவளிடம் துளியுமில்லை என்றே சொல்லலாம்.

இந்நேரத்தில் அங்குமிங்கும் திரும்பிப்பார்க்க அவள் கற்றிருக்க வில்லை. மிகுந்த சிரமங்களுடன் வளைந்து நெளிந்து அவள் முகம் பார்க்க நானே பிரயத்தனப்பட வேண்டியிருந்தது.

அந்த வீட்டின் முகப்பையும், வாசலுக்கு சற்றே தள்ளியிருந்த வேப்ப மரத்தையும், வரிசையாய் நின்ற பழங்கால தூண்களையும் கோலத்தின் இடையே மறைந்த புள்ளிகள் மாதிரி காணாமல் போக்கி விட முயற்சித்தும் இயலவில்லை. அங்குமிங்கும் அசையும் அவளுக்கு நிழலாடும் உருவத்திற்குமிடையில் பிரமாண்ட வீடும் வேப்பமரமும் பிரக்ஞையில் வந்து அவ்வப்போது இடையூறாயிருந்தது.

விளக்கில்லாத வெளிச்சத்தில் தெரிந்த அவளின் முகம் பிரகாச மானதாயி ருந்தது. சந்தன நிறத்தில் பளபளக்கிற மாதிரியிருந்தது. யாவரும் வர்ணிக்க முடிகிற அழகு அவளிடமிருந்தது எனலாம்.

ஒவ்வொரு வண்ணத்துப் பூச்சிக்கும் வெவ்வேறு நிறம் கொடுத்திருந்தாள். நாளெல்லாம் பறந்து திரிந்து ஆயாசமாய் ஒய்வெடுக்க தரையில் பரவிய நிலையில் சிறகு விரித்துக் கிடக்கிறது மாதிரி வரைந்திருந்தாள். தரையில் விரல்களிலும் கோலத்திலும் இப்படி சாகசம் புரிய முடியுமா? என ஆச்சர்யமாயிருந்தது. வண்ணத்துப் பூச்சிக்கே உரிய நிறக்கலவையும், நெளிவுகளும் இத்தனை பொருத்தமாய் அவளின் மனஅடுக்குகளில் நிறைந்திருந்தது வியப்பாயிருந்தது. இதுவரை பார்த்திராத நிறக்கலவையில் கோலமிட்டிருப்பதாகவே பட்டது.

வண்ணக்கலவையிட்ட பிறகு இரண்டாவதாக வெள்ளைக் கோடுகளை திரும்பவும் போட்டாள். விரல்களி லிருந்து விழுதுகளாய் இறங்கிய



வெண்ணிறக் கோடுகள் தரையிரங்கிய உணர்வில் சந்தோஷங்கொண்டது மாதிரியிருந்தது. முடிந்த பிறகு நாற்புறமும் சுற்றி நின்று கவனித்துக் கொண்டே லஷ்மியைப் பார்த்து நல்லாயிருக்கா... என்று அபிப்ராயம் கேட்டாள். குளிர் தீராத அவள் தலையை அசைத்தபடி அழகா இருக்கு என்றாள்.

சின்னச்சின்னப் புள்ளிகள் கொஞ்சங் கொஞ்சமாய் கோலத்திற்குள் மறைந்த ஒவ்வொரு கணமும் கவனித்திருந்து விட்டு, ஓயாமல் பாராட்டத்தயாராய்

படிப்பகம்

www.padippakam.com

நின்று கொண்டிருந்த என்னால் எந்தக் கருத்தும் சொல்ல முடியாமல் போனதைவிடவும் இப்போதைய வருத்தம் வேறில்லை. எது குறித்தும் அக்கறை இல்லாதவளாய், கோலம் போடுவதை சகலத்துக்கும் சாசுவதம் என்றிருக்கும் ஆனந்தாவை விடவும் இப்போதைக்கு அந்தச் சிறுமியை சிநேகம் கொள்ள முடிந்தால் அதுவே போதுமானது எனத் தோன்றியது.

வெளிச்சம் நிறைந்து படர்வதற்குள்ளாக பதுங்கிடத்திலிருந்து வெளியேறி நிதானமாய் கவனித்தேன். நான்கு முனைகளில் விரிந்த வண்ணத்துப்பூச்சிகளின் நடுவில் ஆனந்தாவின் விரல்கள் வளைந்து நெளிந்தன. அந்தச் சிறகுகளில் பரவியபடி கோர்த்து அணைத்திருந்தன. தரையில் விரித்திருந்த அவளின் விரல்கள் சிறகாகி அசைந்தன. வண்ணக்கலவையின் வசீகரத்தில் ஆனந்தா சிரித்துக் கொண்டிருந்தாள்.

சிறுவயதில் ஓடி ஓடிப் பிடித்து சேகரித்த பட்டாம்பூச்சிகள் ஞாபகத்துக்கு வர, பேருந்து பிடிக்கும் அவசரத்தில் நடந்தேன். பெரும்பாலான வீடுகளில் கோலம் போட்டு முடித்திருந்தனர். வாசலில் யாருமில்லாமல் சில வீடுகளில வெறுமையாயக் கிடந்தது கோலம். நான்கைந்து பேராய்க் கூடி தெருவை அடைத்து கோலம் போட்டுக் கொண்டிருந்தனர் ஒரு வீட்டில். கோடுகளால் பின்னிய சிக்கல் கோலமே அதிக வீடுகளை வசங்கொண்டிருந்தன. ஆனாலும் கவனிக்கத்தக்க அளவில் மார்கழி மாதக்கோலம் இருக்க வேண்டுமென்பதில் எல்லா வீடுகளுக்கும் ஒரு அபிப்ராயம் இருந்தது.

வீட்டில் அம்மா அடிக்கடி போடும் ஸ்வஸ்திக் கோலத்திற்கு என்ன அர்த்தம் என்று தெரியவில்லை. பேருந்துக்கு காத்திருக்க வேண்டியது. அவஸ்தையாயிருந்தது. அங்கிருந்த தூங்கு மூஞ்சி மரத்தைப் பார்க்கையில் வினோதமான உணர்வு பற்றியது. வருஷங்களாய்ப் பார்த்துப் பழகிய மரம் இப்போது புதிதாய் முளைத்த மாதிரியும், வருத்தத்துடன் என்னை வழியனுப்ப வந்து நிற்பது மாதிரியும் இருந்தது. குளிரும் அதிகாலை என்பதால் ஆட்கள் அதிகமில்லை.

சோர்ந்த நிலையிலிருக்கிற மரத்தைப் பார்க்கையில் ஊர் ஞாபகம் பெருகியபடியே இருக்கிறது. மரத்திற்கு பக்கமாய் நிற்கும் இந்நேரம் ஒரேவித உன்மத்த மனநிலையே அவ்விடத்தில் நிலவியது. இனி எந்த வருஷத்தில் எந்த நாளில் ஊருக்கு திரும்பமுடியும் என்பது அறியாத நிலையில் பயணப்படுவதை இந்த மரம் ஒருவேளை அறிந்தி-ருக்கக்கூடும்.

வெகுவாய் விரட்டியடிக்கப்பட்ட மாதிரியான அந்நியத்திலிருக்கும் நிலையில் பார்த்தாவின் கடிதம் தெரிவிக்கும் செய்தி-களும் கொண்டு வந்து சேர்க்கும் கலகலப்புமே சொந்த ஊர் என்றாகி விட்டது. ஆனந்தாவின் கோலம் குறித்து தகவல் சொன்ன பார்த்தா என்னை எத்தனை புரிந்து வைத்திருக்கிறான் என்றெண்ணி வியப்பாயிருந்தது. பார்த்தா-வுக்கு கடிதம் எழுத வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

நானிருக்கும் ஊரில் இங்கு எந்த வீட்டிலும் கோலம் போடுகிறவர்கள் இல்லை. ஒரு சில வீடுகளில் பெயருக் கென்ற சின்னதாய் கோலம் போடு -கின்றனர். பெரும்பாலான வாசல்களில் வண்ணக்கோலமில்லை. பெண் பிள்ளைகள் நிற்கவில்லை.

அனாதையாய் கிடக்கும் தெருக்களில் வாசல்களும் அப்படியே விக்கித்தி ருக்கின்றன.அடுக்கு மாடிக்குடியிருப்புகள் பெருக்கத்தில் கோல மாவு விற்கிறவர்கள் வேற்றூருக்கு இடம் பெயர்ந்து விட்டனர்.

இந்த ஊரில் கோலம் போட யாருக்கு நேரமிருக்கிறது என்று கேட்பார்கள். பல வீடுகளில் கோல மாவு இருப்பதேயில்லை. காலை நேரப் பனியில் கோலம் போடுவது அவசிய மில்லாதது என்பார்கள். எங்கு அலைந்தும் கோலம் போட்ட வீடும், தெருவும் அகப்படுவதேயில்லை.

எல்லாம் கிடைப்பதாக சொல்லப் படுகிற ஊரில் கோலமும் கோலமாவும் கிடைக்கிறது. ஆனாலும் கோலம் கோடுகிற பெண்கள் அரிதாகிப் போனது தான் துயரமானது என்றெல்லாம் பார்த்தாவுக்கு எழுத நினைத்த கடிதம் பாதியில் நின்று போகும்படி பேருந்து வந்துநின்றது.

எதையும் ரசித்துப் பார்க்கவே நனைக்கிற எல்லோருக்கும் ரசிக்க வேண்டியதெல்லாம் அத்தனை சரியாய் கிடைக்கிறதில்லை என்று பார்த்தா விடம் சொல்லி வருத்தப்படச்செய் வதில் என்ன இருக்கிறது.

பார்த்தாவின் ரசனைப்படி மார்கழியில் கோலமும் பனியிடை கோலமிடும் பெண்களும் அழகானதாயி ருக்கிறார்கள்.அபூர்வமானதாயிருக்கிறார்கள்.

எல்லா ஊரிலும் அவர்கள் அப்படி யானவர்களாகவே இருப்பார்கள். என்ற பார்த்தாவின் நினைப்பும் அதே அர்த்தத்தில் இருப்பதே நிறைவாயிருக்கும். அவனுக்குக் கடிதம் எழுதும் அவசியமும், மனநிலையும் இப்போதைக்குத் தேவையில்லை என்றே தோன்றியது.

புள்ளிகள், கோலங்கள் ஏதுமற்ற சாலையில் வேகம் பிடித்து விரைந்தது பேருந்து சிலீரென்ற காற்றை உள்ளிழுத்தபடி.

படிப்பகம்

www.padippakam.com

டினோசர்-94



அஜயன் பாலா

கதை சொல்லிக்கான சில உரிமைகளுடன் இக் கதையின் மூலாதார ரகசியம் குறித்து அடியேன் பிரஸ்தாபிக்க வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாகத் தங்களின் அனுமதி வேண்டித் தண்டம் சமர்ப்பித்து நான் சொல்லப் போகும் இச் சம்பவத்தைக் கூர்ந்து செவி கேட்குமாறு நிர்பந்திக்கிறேன்.

சில நாட்களுக்கு முன் சவிதமாய் மவுண்ட் ரோட்டில் கைவீசி நடக்குங்கால் சட்டென எதிர்பட்டு 'அடடே' எனக் கையைப் பிடித்துக் கொண்டார் அந்த நண்பர். உடும்புப்பிடி என்பார்களே அப்படி ஒரு பிடி. மனுஷனுக்குக் கொஞ்ச நாள் மிலிட்டரி சகவாசம் உண்டு போல.

"உம்மைத்தான் பாக்கணும்னு நெனச்சுண்டிருந்தேன்" எனக் கூறி சம்பிரதாயமான சில அசல குசல விசாரிப்புகளை முடித்துக் கொண்டு 'சடக்' கென இடுப்பிலிருந்து ஒரு கத்தியை உருவினார் ஆசாமி, வாசகர்கள் யாரும் பயப்பட வேண்டாம். நான்

படிப்பகம்

www.padippakam.com

இங்கே கத்தி எனக் குறிப்பிடுவது நிஜக் கத்தியை அல்ல.

எனக்குக் கதை சொல்லும் ஞானம் அத்தனைப் போறாது என்றும், தன் -விஷ்டத்திற்கு வெற்று கற்பனைகளை வார்த்தைகளாகக் கொட்டிவிட்டால் கதையாகிவிடுமா என்றும் அங்க -லாய்த்துக் கொண்டார். இரண்டு மாதங்களுக்கு முன் என் பத்திரிகை அனுபவம் குறித்து இலக்கியச் சஞ்சிகையொன்றில் நான் எழுதிய கதை குறித்துதான் மனுஷ் இப்படி விளாசித் தள்ளுகிறார் என்பதை நொடியில் ஜீரணித்துக் கொண்டேன்.

பதிலுக்கு நானும் யதேஷ்டமாய் ஒரு சிரிப்பு சிரித்துக் கொண்டு 'ஆங்கானும்' என்றபடி ஒரு காப்பி சாப்பிட்டுக்கொண்டே பேசினா இன்னும் ஜோரா இருக்குமே எனப் போட்டு வைத்தேன்.

'ஓ அதுக்கென்ன?... என்றபடி இடது கைச் சுட்டு விரலைக் கட்டை விரலுடன் மேல் சட்டைப் பாக்கெட்டில் நுழைத்து நோட்டம் விட்டபடி கடைக்குள் என்னைப் பின் தொடர்ந்தார்.

சூடாக இருந்த காபித் தம்ளரைக் கையிலெடுத்துக் கொஞ்சம் குனிந்தார் போல் உதட்டண்டை எடுத்துச் சென்றபோது,"உமக்கெல்லாம் கொஞ்சம் கூட சமூக அக்கறையே இல்லை" என ஒரு போடு போட்டார்.

மனுஷன் எந்த வகையான ஆசாமி என்பதை இனம் கண்டுகொண்ட சந்தோஷத்துடன் நானும் மேலே சொன்னதைப்பொருட்படுத்தாமல் தம்ளரைக்காலி பண்ணிக் கொண்டி ருந்தேன்.

பில்லைக் கொடுத்த மனுஷன் மீதிச் சில்லறைக்காகக் காத்திருக்கும் சமயத்தில் இடுப்பிலிருந்து இன்னொரு கத்தியை உருவினார். இதுவும் நிஜக் கத்தியல்ல என்பதை வாசகர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

"சாண்டில்யனுடைய ஜலதீபம் படித்திருக்கிறீரா..."

என்ன இந்த ஆசாமி சமூக அக்கறை என்கிறான், சம்பந்தமே இல்லாமல் சாண்டில்யன் என்கிறான் ஒரே குழுப்பமான ஆசாமியாய் இருப்பான் போலிருக்கே... இன்னைக்குத் தீர்ந்தோம் என மனசுக்குள் நினைத்த -வாறு

என்ன சொன்னீ சாண்டில்யனா?.. என நான் கேட்க,

படிப்பகம்

www.padippakam.com

என்ன உம்கருச் சாண்டிலயனைத் தெரியாதா?

மனுஷர் உண்மையிலேயே அதிர்ச்சியில் உறைந்து விட்டார். சுத்தமாகத்தெரியாது என்று சொன்னால் செத்தே போய்விடுவார் போலக் காட்சியளித்து அவருடைய முகம்.



"ஓ! இந்த ராஜாக்களைப் பத்தியெல்லாம் கதை எழுதுவாரே அவரைச் சொல்றீங்களா" - என நான் சுதாரித்த அடுத்த நிமிடம்,

மனுஷனுக்கு முகம் ஜிவு ஜிவு எனச் சிவப்பாக ரத்தம் கொட்டியது.

"ஹா... சரித்திரம் உமக்கு அத்தனை இளக்காரமா?.... அது எழுதறது அப்படி ஒண்ணும் லேசுபட்ட காரியமில்ல தெரியுமாடா உமக்கு?.. முடிந்தா நீ ஒரு சரித்திரக் கதை எழுதிப் பாரும் அப்பத் தெரியும் உம்ம லட்சணம்... மேல்முச்சு, கீழ்முச்சு இழுத்துக் கொண்டது அன்னாருக்கு.

சரி.. சரி.. என்ன சொல்லிட்டேன், இதுக்குப்போய் இவ்வளோ கோபப் படறீங்களே... என ரெண்டு எட்டு ஜகா வாங்கி சல்பேட்டா சலாம் போடாத குறையாய்.

நான் ஒன்னும் தப்பாப் பேசிடலையே சாண்டியல்யனா என்று கேட்டேன் அதுக்குப் போய் இப்படி டென்ஷனானா எப்படி..?

இப்ப உமக்கு என்ன, ஒரு சரித்திரக் கதை எழுதிக் காமிக்கனும் அவ்வளவு தான...

ம்... என்றபடி குழந்தைபோல் முகத்தை தூக்கிக் கொண்டார்.

ம்... சொன்னால் மாத்திரம் போதாது, எவ்வளவு பந்தயம்னு சொல்லனும்.

அந்தச் சமயத்தில் வீட்டு வாடகைப் பிரச்சினை சம்பந்தமா அடியேனுக்கு ஒரு ஐநூறு ருபாய் அவசரமாகத் தேவைப்பட்டது. ஆசாமிக்கு ஒரு சரித்திரக் கதை எழுதி காண்பித்தால் கதைக்கு கதையுமாச்சு, ஐநூறுக்கு ஐநூறுமாச்சு. ஆசாமியும் மறுப்பேது -மில்லாமல் ஒத்துக் கொண்டார். அவர் ஒத்துக் கொள்வார் எனத் தெரிந்துதான் அவரைப் பந்தயத்திற்கே நான்அழைத்து இருந்தேன்.

ஐநூறு ரூபாய்க் கனவு, பின்னங்காலைப் பிராண்ட... அவசர அவசரமாய் வீடு வந்து சேர்ந்து, பேனா பேப்பர் சகிதமாய் மொட்டை மாடிக்குச் சென்று மூச்சிழுக்கப் பார்த்ததுதான் மிச்சம்.

ராஜா, ராணி... குதிரை

ராஜா, ராணி... ஜாக்கி

ச்சே... என்ன எழவுடா இது இங்கேயும் இந்தச் சீட்டாட்டம் வந்து

படிப்பகம்

www.padippakam.com

கழுத்தை அறுக்கணுமா கமலத்துக்குத் தெரிஞ்சால் அவ்வளவுதான் குர -வளையை நெரிச்சிடுவாள்.

எத்தனை முறை யோசித்தாலும் இதைத் தவிர மனசில் வேறெதுவும் தோன்றக் காணோம் நாளைக்கே எழுதிக் காண்பிப்பதாகச் சவால் வேறு.

ராஜா, ராணி, குதிரை... இந்த மூன்றுதான் திரும்பத் திரும்ப ஓடிக்கொண்டிருந்ததே ஒழிய ஒரு ராஜ பேரிகையோ, பல்லக்கோ, எதுவுமே தோன்றக் காணோம். சம்பந்தமே இல்லாமல குதிரைக்குப் பதில் அவ்வப்போது, விநோத பிராணி டினோசர் வேறு வந்து வந்து சென்றது. அப்போதுதான் மின்னலடிச்சது போல் மனசுக்குள் சட்டுனு ஒரு ஐடியா

கொஞ்ச வருஷத்துக்கு முந்தி மெட்ராசில் 'ஜுராசிக் பார்க்' படம் ரிலீசாகி சத்யம் தியேட்டர்ல தூள் கிளப்பிக்கிட்டிருந்தப்போ அப்ப இருந்த சமூக அரசியல் சூழலை வெச்சு ஒரு கதை எழுதனும்னு ஐடியா பண்ணியிருந்தேன்.

சரித்திரக் கதைக்கு ராஜாக்கள் மட்டும்தான் இருக்கணுமா? ஏன் முதல் மந்திரி ஜில்லா கலெக்டர், போலிஸ் இன்ஸ்பெக்டர் எல்லாம் இருக்கக் கூடாதா? அஞ்சு வருஷம்னாலும் ஐநூறு வருஷனாலும் கடந்து போன காலம் எல்லாமே சரித்திரக் கணக்கு தானே இப்படியாக எனக்கு நானே சமாதானம் செய்து கொண்டு அந்த கதையை எழுத ஆரம்பித்தேன்.

நதி மூலம் ரிஷி மூலம் ஆகியவற்றைத் தொடர்ந்து கதை மூலம் என்றும் மூணாவதாக சேர்த்துக் கொள்ளலாம். அந்த அளவிற்கு ஒப்பானதான இந்த ஜீவ பிரம்ம வேதாந்த ரகசியத்தை ஒரு நெருக்கடியின் காரணமாக உங்களிடம் சொல்லியிருக்கிறேன் சகாக்களே...

ஆகவே நீங்களும் படம் வெளியான 94ஆம் வருஷத்து மெட்ராசை மனசில் சித்திரமாக வரைந்து இக்கதைக்குள் பிரவேசித்து வாசகானுபவம் பெறுவீரானால் அதுவே அடியேனின் விண்ணப்பமும் எனக் கூறி கோடானு கோடி தண்டம் நமஸ்து.

வருஷம் 1994

சென்னை சத்யம் தியேட்டர் வாசல் நகரத்திலிருக்கும் முக்கால்வாசி உல்லாச பிரியர்களுக்கு மௌண்ட் ரோட்டில் இருக்கும் சத்யம் தியேட்டர் சர்வ பிரசித்தம் காலேஜ் கட்கோஷ்டிகளுக்கு



படிப்பகம்

www.padippakam.com

கிட்டதட்ட இது ஒரு கோடை வாசஸ்தலம் மாதிரி.

சாதாரண இங்கிலீஷ் படத்திற்கே கூட்டம் கூட்டமாய் ஜீன்ஸ்கள் கும்மியடிக்கும் தியேட்டர் இது. ஸ்பீல் பெர்க் டைரக்ட் செய்து உலகையே உலுக்கிக் கொண்டிருக்கும் ஜீராசிக் பார்க் படமென்றால் கூட்டத்திற்கு சொல்லவா வேணும். படம் ரிலீசாகி இருபது நாளானப்பிறகும் அன்றைய பதினோரு மணி காட்சிக்காய் தியேட்டர் வாசலில் கூட்டம் முதல் ஷோ போல ரொம்பி வாசல் ரோடு வரை வழிந்து கொண்டிருந்தது. ஆனால் தியேட்டார் உள் வாசலோ இன்னும் திறந்த பாடில்லை. வழக்கமாக இந்த நேரத்திற்கெல்லாம் பீஹாரில் இந்த வெள்ளம் ஓடி வத்தியிருக்க சமயம்.

லேட்டுக்கு காரணம் ஏதாவது அல்ப விஷயமாக இருக்கும் என ஜனக் கூட்டமும் நாகரிக பேணி கிடைத்த அவகாசத்தின் காதல் செடி வளர்த்துக் கொண்டிருந்தனர் விஷயம் தெரியாமல். ஆனால் அதே சமயம் தியேட்டர் மாடியில் ஒரு பிரளயமே நடந்து கொண்டிருந்தது.

மேனேஜர் டென்ஷனில் கையை பிசைந்து கொண்டிருந்தார் என்ன நடக்க போகிறதோ என அவரையே பார்த்தபடி ஊழியர்களும் வரிசையாக ஒடுங்கியபடி நின்று கொண்டிருந்தனர். ஒன்னா,ரெண்டா, எத்தனை கூட்டம். அத்தனை பேரையும் சமாளிப்பது என்ன அத்தனை சாமானியமா என்ன?

இத்தனை கூட்டமும் நான்கு நாட்களுக்கு முன்னமே டிக்கட் ரிசர்வ் செய்து காத்திருப்பது படத்தில் வரும் டினோசர்களை பார்க்கத்தான்.

அவ்வளவு ஆசையாக பார்க்க வந்து படத்தில் ஒரு டினோசர் கூட இல்லாவிட்டால் அத்தனை கூட்டமும் ஆத்திரத்தில் என்ன செய்யும் என்பதை நீங்களே ஆலோசித்துக் கொள்ளுங்கள்.

நடந்த விஷயம் இதுதான்.

காலையில் போரடிக்குது என சும்மானாச்சும் படத்தின் கடைசி ரீலை ஓட்டிப்பார்த்த ஆபரேட்டருக்கு பகீரென்றது. காரணம் ஒரு டினோசர் கூட காட்சியில் வரவில்லை. வெறும் மனுஷர்களும் மரங்களும் மட்டுமே நகர்கிறதே தவிர பைசாவுக்குகூட ஒரு டினோசரையும்படத்தில் காணோம்.

படிப்பகம்

www.padippakam.com

அடுத்த நிமிஷம் வீட்டிலிருந்த மேனேஜருக்கு விவகாரம் தெரிவிக்கப்பட அவர் அலறி புடைத்து ஓடி வந்து படத்தை முழுசாக ஒட்டிபார்ப்பதற்குள் காலை காட்சிக்கு தியேட்டர் முன் இத்தனை கூட்டமும் தயாராய் கூடிவிட்டது.

அத்தனை டினோசர்களும் எப்படி கம்பி நீட்டிஇருக்கும்னு ஒரு ஊழியர் அப்பாவியாய் கேட்கப் போக, முதல்ல இந்த ஜனங்ககிட்ட இருந்து நாம எப்படி கம்பி நீட்டறதுன்னு ஒரு வழிய பாருங்கப்பான்னு எரிந்து விழுந்தார். இதற்குள் இந்த கம்பி விவகாரம் எப்படியோ வெளியே காத்திருந்த கூட்டத்திற்கு பரவிவிட்டது. பெரிய கலவரமே நடக்க போகிறது என மேனேஜரும், ஊழியர்களும் பயந்து கிடக்க, நடந்ததோ தலைகீழ்.

வெளியே காத்திருந்த கூட்டத்திற்கு இந்த செய்தி படத்தை காட்டிலும் அதி சுவாரஸியமான ஆச்சர்யமான விஷயமாகவே பட்டது. தகவல் காதுக்கு எட்டிய அந்த ஒரு நொடியில் தாங்களனைவருமே ஒரு குழந்தை பருவத்தை அடைந்து விட்டதை போல ஒரு மாதிரியான சந்தோஷத்தை ருசித்தனர்.

டினோசர் சினிமாவிலிருந்து காணாம போயிடுச்சா? ஒரு விஷேசமான புதிரின் சுவை இந்த செய்திக்குள் இருப்பதாகவே அவர்களுக்குத் தோணியது. எல்லாம் ஒரு சில நிமிஷங்களுக்குத்தான். தகவல் ஆதார பூர்வமானது எனத் தெரியவந்த பிறகுதான் கூட்டத்தினரின் அடிவயிற்றுக்குள் ஒரு கண்ணாடி டம்ளர் சிலீரென உடைந்தது.

டினோசர்கள் காணாமல் போன விவரம் குறித்து பலரும் பல மாதிரி பேசிக் கொண்டிருக்க, அரசியல் ஞானஸ்நானம் பெற்ற ஒரு சிலர் இந்த சம்பவத்தில் டி.என். சேஷனுக்கு ஏதோ விதத்தில் தொடர்பிருக்கிறதெனத் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். அவர்கள் கூற்றில் ஓரளவு உண்மை இருந்தாலும் சம்பவத்துக்கு முழு பொறுப்பும் அவர்தான் என கூற முடியாது. நடந்த விவரம் இதுதான்.

கடந்த இரண்டு தினங்களுக்குமுன் தேர்தல் கமிஷன் அதிகாரியான டி.என் சேஷன் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு தேர்தல் சின்னமாக டினோசரை ஒதுக்கியதிலிருந்தே அரசல் புரசலாக அதுபற்றி கண்டனங்கள் எழுந்துகொண்டிருந்தன.

அதிலும் வரும் தேர்தலில் எப்படியும் ஆட்சியை பிடித்து விடுவோம் என உறுதியாக நம்பிக்

படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருந்த ஒரு பெரிய கட்சிக்கு சேஷனின் இந்த திடீர் நடவடிக்கை மிகுந்த கோபத்தையும் ஆத்திரத்-தையும் உண்டு பண்ணியது.

ஜுராசிக் படம் வெளியான தொட்டு பட்டி தொட்டி எல்லாம் டினோசர் பற்றியே பேச்சாக இருக்கும். இந்த சமயத்தில் டினோசரை சின்னமாக கொண்ட எந்த கட்சியும் தேர்தலில் வெகு சுலபமாக ஜெயித்துவிடும் என அவர்கள் உறுதியாக நம்பினர். தங்களை தீர்த்துகட்ட வேண்டி சேஷன் திட்டமிட்டு இந்த சதியை அரங்கேற்றியிருப்பதாக அந்த கட்சி உறுதியாக எண்ணம் கொண்டிருந்ததால், அந்த சதியை முறியடிக்க ரகசியமாக ஒரு ஆலோசனை கூட்டத்தை அவசரமாக கூட்டியது. இன்னும் இரண்டே நாட்களுக்குள் எந்த ரூபத்திலிருந்தாலும் அழித்து விடவேண்டியது. இதுவே அந்த கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்ட ரகசிய திட்டம்.

இதற்காக அங்கேயே ஒரு குழுவும் உருவாக்கப்பட பத்து நிமிடங்களுக்குள் தங்களின் அதிரடி செயல்பாடு குறித்த ஒரு பட்டியலையும் செயற்குழுவுக்கு அங்கேயே சமர்ப்பித்தது.

மேற்படி பட்டியலில் எக்மோர் கன்னிமாரா நூலகவளாகத்தில் மியூசியத்தின் எதிரே சர்வ பராக்கிர மமாய் வீற்றிருக்கும் இரண்டு டினோசர் சிலைகளையும் குண்டு வைத்து தகர்ப்பதுதான் அவர்களின் முதல் திட்டம்.

அதன்படி முந்தின நாள் மதியம் அந்த இடத்திற்கு வேவு பார்க்க இருவர் தங்களுடைய திட்டம் குறித்து ரகசியமாக பேசிக்கொண்டனர். இன்று இரவு 2 மணிக்கு இந்த இரண்டு டினோசர்களையும் வெடி வைத்து தகர்த்துவிடுவோம் என்பது அவர்களது பேச்சின் சுருக்கம்.

இந்த தகவல் எப்படியோ சிலைகளாக நின்றுகொண்டிருந்த இரண்டு டினோசர்களின் காதுகளிலும்விழுந்து விட ரெண்டும் அதிர்ச்சியில் உயிராகி-விட்டன.

ஆ இதென்ன புதுக்கதை... அதிர்ச்சியில் சிலைகள் எப்படி உயிராகும் என மகாபுத்திசாலித்தனமாய் நீர் கேட்டீரானால் பதில் இதுதான், மனுஷர்கள் மட்டும் அதிர்ச்சியில் சிலையாகலாம். சிலைகள் அதிர்ச்சியில் உயிராகக் கூடாதோ. நல்லா



படிப்பகம்

www.padippakam.com

இருக்கிறதய்யா உம் நியாயம்...

கொனஷ்டை பண்ணாமல் வாயைப்பொத்திக் கொண்டு கதையை மேலே படித்துச் செல்லவும்.

அதிர்ச்சியில் உயிராகி அந்த ரெண்டு டினோசர்களும் இன்று இரவுக்குள் எப்படியும் எஸ்கேப் ஆகிவிடுவதென முடிவெடுத்துக் கொண்டன.

நடுநிசி...

மியூசியம் எதிரே மஞ்சளான சோடியம் வெளிச்சத்தில் கொட்டும் பனியில் தேமே என நின்று கொண்டிருந்த ரெண்டு டினோசர்களும் சடக்கென கண்விழித்து சுற்றும் முற்றும் திரும்பி ஒருமுறை நோட்டம் இட்டன.

எங்கும் பேரமைதி.

பீடத்திலிருந்து காலை மெல்ல அகட்டி புல் தரையில் வைத்தபடி கீழிறங்கிய ரெண்டு டினோசர்களும் அடுத்த நான்காவது எட்டில் ரோட்டுக்கு வந்து இடப்பக்கமாகத் திரும்பி தப்பித்தோம் பிழைத்தோமென ஓட்டமெடுத்தன.

அதே சமயம் ஜுராசிக் பார்க் ஓடிக்கொண்டிருந்த மவுண்ட் ரோடு சத்யம் தியேட்டரில் இரண்டாம் ஆட்டம் முடிந்து ஊழியர்கள் அனைவரும் வீட்டிற்கு கிளம்பி, விளக்குகள் அணைக்கப்பட, கிட்டத் தட்ட அந்த பகுதியே இருளில் புதைந்த நேரம்.

தியேட்டரின் வலப்பக்கக் காம்பவுண்ட் கேட் பக்கமிருந்து ஒரே ஒரு டினோசரின் தலை மட்டும் வெளியே நீண்டு சுற்றும் முற்றும் பார்த்தது. ஆள் அரவம் எதுவும் இல்லை எனத் தெரிந்துகொண்டதும் எட்டிப்பார்த்த அது வெளியே வர அதனைத் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக விதவிதமான சைசுகளில் ஒரு ஊர்வலம் போல டினோசர்கள் வெளியே வரத் தொடங்கின. இத்தனை நாளாகத் தியேட்டருக்குள் இருந்து புழுக்கம் தாளவில்லை என்றும் ஒரு சேஞ்சுக்கு இந்த ஊர் எப்படி இருக்கிறது என சுற்றிப்பார்க்க ஆசைப்பட்டு வெளியே வந்ததாகவும் பிற்பாடு ஒரு சமயம் சொல்லிக் கொண்டன.

கிட்டத்தட்ட ஒரு பிரம்மாண்டமான ஊர்வலம்போல் அணிவகுத்த டினோசர்கள் தீப்பெட்டி சைசுகளில் இருந்த கட்டிடங்களை சர்வ அலட்சியமாக தாண்டியபடி மவுண்ட்ரோட்டுக்குள் பிரவேசித்தன. அவற்றின் இடுப்பு சைசுக்கு இருந்த எல்.ஐ.சி. கட்டிடத்தின் அருகே வந்ததும் எல்லா டினோசரும் சேர்ந்து ஆட்டம் போட ஆரம்பித்தன. உற்சாக மிகுதியில் சில குட்டி டினோசர்கள் தாராபூர் டவர் மேலேறுவதும் குதிப்பதுவுமாக விளையாடிக் கொண்டிருக்க...

அதே சமயம் எக்மோர் மியூசியத்திலிருந்து தப்பித்த ரெண்டு டினோசர்களும் மூச்சிரைத்தபடி அவசர அவசரமாச் சிந்தாதிரிப்பேட்டை மார்க்கமாக மவுண்ட் ரோட்டுக்கு வந்தன. ஒரு நிமிஷம் ரெண்டு கோஷ்டியும் ஒன்றையொன்று பார்த்து நின்றன. சூழலை புரிந்து கொண்ட மியூசியம் டினோசர்கள் முதலில் பேச்சைத் துவங்கி "நீங்கள் 'ஜுராசிக்

படிப்பகம்

www.padippakam.com

பார்க் டினோசர்கள் தானே?"

என சந்தேகத்துடன் ஒருவித நட்பு பாவனையில் கேட்க, இதர டினோசர்களுக்கு பெருமை தாங்க முடியவில்லை. ஆமாம்... ஆமாம்... என சந்தோஷத்துடன் கூச்சலிட்டன.

அவர்களின் இந்த உற்சாகத்தால் கடுப்பாகி போன மியூசியம் டினோசர்கள் ரெண்டும் "நல்ல எழவா போச்சு என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கு, உங்களால் தான் எங்களுக்கு இந்த நிலைமை, உயிரை கையிலே பிடிச்சிகிட்டு பயந்து போய் ஓடியாரோம் நீங்க என்னாடான்னா கூத்தடிச்சுக்கிட்டு இருக்கீங்க. என்ன அப்படி முறைக்கிறீங்க. நம்மள சுத்தமா ஒழிச்சிகட்ட ஒரு கும்பளே புறப்பட்டு இருக்கிறது. உங்களுக்குத் தெரியுமா, தெரியாதா?

தெரியலைன்னா சொல்றத கேளுங்க, என கூறி நடந்த சம்பவங்களைக் கூற, ஒரு ஆறே ஓடும் அளவிற்கு மற்ற டினோசர்கள் அனைத்தும் பயத்தில் சிறுநீர் மழையே பெய்தன.

உடல் வெலவெலக்க ஒரு டினோசர், இதுக்குத்தான் நான் அப்பவே சொன்னேன். தியேட்டருக் குள்ளேயே விளையாடலாம்னு. சொன்னாக் கேட்டாதான எனப் புலம்ப ஆரம்பித்தது.

உஷ் சைலண்ட். யாரும் சத்தம் போடாதீங்க என்ற ஒரு மியூசியம் டினோசர் கீழே கஜேந்திர விலாஸ் ஓட்டல் பக்கமாக விரலை நீட்ட, அங்கே சர்வர் ஒருவன் கொட்டாவி விட்டபடி மடித்துக் கட்டிய கைலிக்குள் மற்றொரு கையை நுழைத்தபடி இயற்கை உபாதைக்காக வேண்டி கீழே குத்துக்காலிட்டமர்ந்தான்.

ஒரேயடியாய் நம்மை ஒழித்துக் கட்ட வேண்டி பாம் எடுக்கத்தான் அமர்ந்துள்ளான். என எல்லா டினோசருக்கும் அது எச்சரிக்கை விடுக்க பயமும் பதட்டமுமாய் மற்ற டினோசர்கள் அனைத்தும் என்ன செய்வதெனத் தெரியாமல் அசுர வேகத்தில் ஓட ஆரம்பித்தன.

ஆர்பஸ் காலேஜ் பக்கமாக திரும்பிய டினோசர்கள் கூவம் பாலத்தினருகே வந்ததும், அந்த மியூசியம் டினோசர் எல்லா டினோசர்களையும் ஒரு நிமிடம் நிறுத்தி இதை விட்டால் தப்பிக்க வேறு வழியில்லை, எல்லோரும் குதியுங்கள் என உத்தரவிட மற்ற டினோசர்களும் "அபாயம், அபாயம்..." எனக் கூறிக்கொண்டே ஒன்றன்பின் ஒன்றாய்

படிப்பகம்

www.padippakam.com

தொப்... தொப்பெனக் கூவத்தில் குதித்தன. குதித்த பிறகுதான் ஜூராசிக் டினோசர்களுக்கு கூவத்தின் நாற்றம் உறைத்திருக்கிறது.

ஊர் இருட்டிற்குத் தேவையான கருப்பு திரவத்தை உலகத்திற்கே இனாமாக வழங்கும் ஒரே நதி இது. ஆபத்துக்கு பாவமில்லை, அட்ஜஸ்ட் பண்ணிக்கொள் மீதி கதையை நாளை... என உத்தரவிட மற்ற டினோசர்களும் கூவத்தில்... மெல்ல உறங்க ஆரம்பித்தன.

மறுநாள் காலை சத்யம் தியேட்டரில் நடந்த கூத்துதான் வாசகர்கள் துவக்கத்திலேயே படித்திருந்தது. முதலில் ஆச்சரியப்பட்டவர்களை மெல்லக் கிலி பிடிக்கத் தொடங்கியது. எல்லோரும் தங்களுக்குப் பின்னால் பிரமாண்டமாக ஒரு டினோசர் நின்றுகொண்டிருப்பதாக எண்ணி பீதியில் திரும்பிக் கூட பார்க்க மனமில்லாமல் பதட்டத்தில் கிருகிருக்க ஆரம்பித்தனர். இரண்டொரு நொடியில் ஒரு பிரளயமே அங்கு துவங்கியது. பெரும் கூச்சலுடன் மூலைக்கொன்றாய்த் தியேட்டரை விட்டுச் சிதறி ஓடியது. வானத்திலிருந்து நெருப்புத் துண்டுகள் விழுந்தாற்போல செய்திகளைக் கேட்ட மாத்திரத்தில மக்கள் பீதியில் அலற அடுத்த ஐந்தாவது நிமிடம் நகரமே பேய் பிடித்தார் போல் பதறியது.

பாதியில் நிறுத்தப்பட்ட வாகனங்களின் ஹாரன் சத்தம் கட்டிடங்களைக் கிடுகிடுக்க வைத்தன. போலீஸ் ஸ்டேஷன்களில் வயர்லஸ் அலறியது. தகவல் கோட்டைக்குப் பறந்தது. அரசு அலுவலகங்கள் பள்ளி, கல்லூரிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை பாதியிலேயே நிறுத்தப்பட்டு விடுப்பு அளிக்கப்பட்டன. தகவல் பசியால் வெறிபிடித்துக் கிடந்த தனியார் சேனல்களுக்கு இந்தத் தகவல் பெருந்தீனியாக இருந்தது. ஒரு டிராகுலாவுக்கான சந்தோஷத்துடன் தங்களிடமிருந்த பழைய டினோசர் ஸ்டாக்குகளை எல்லாம் எடுத்துப்போட்டு மக்களை மேலும் பீதியுறச் செய்தன.

எந்த நேரமும் டினோசர்கள் தங்களின் வீட்டுக் கதவைத் தட்டலாம் என்கிற பயத்தில் வீடுகளில் மக்கள் உறைந்து கிடக்க, நகரத்தின் இந்த ராட்சத மௌனம் தாளாமல் ஆடு, மாடு, கோழி, பூனை, நாய் போன்ற இதர ஜந்துக்களும், பீதியுற்றுக் கிடைத்த இடங்களில் பதுங்கிக் கிடந்தன.

இது ஒருபுறமிருக்க மற்றொருபுறம்



படிப்பகம்

www.padippakam.com

டினோசர்களைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டது. போலீசார் ஒரு பிரிவாகவும், தீயணைப்புப் படையினர், ஊர்க்காவல் குழுவினர் மற்றொரு பிரிவாகவும் பிரிக்கப்பட்டு பல்வேறு குழுக்களாக நகரத்தின் எல்லா மூலைகளுக்கும் அனுப்பப் பட்டனர். ஊர்க்காவல் படையினர் இந்தப் பணியைச் சவாலாக எடுத்துக் கொண்டாலும் டினோசர்களைத் தாங்கள் பார்ப்பதுபோல அவர்கள் கற்பனை செய்து பார்த்தபோது அது கற்பனைக் கெட்டாத பேரதிசயமாய் அவர்களுக்குத் தோன்றியது.

வேன்களின் கூரையிலிருந்து...... போன்களுடன் நகர்ந்து கொண்டிருந்த போலீசார் மறுஅறிவிப்பு வரும்வரை பொதுமக்கள் யாரும் வெளியே வரவேண்டாம் என எச்சரிக்கை விடுத்தவண்ணம் இருந்தனர்.

நகரமே இப்படி ஒரு கலவரத்தில் இருக்க இதைப் பற்றி கடுகளவு -மறியாமல் டினோசர்கள் கூவத்தில் உறங்கிக் கொண்டிருந்தனர்.

நேற்று இரவு ஓடிவந்ததின் களைப்புதான் அவைகளின் இந்த நீண்ட உறக்கத்திற்குக் காரணமாகும். உறங்கிக் கொண்டிருந்த டினோசர் ஒன்றின் மூக்கில் தவளை ஒன்று புகுந்து அழிச்சாட்டியம் செய்ய, அதை வெளியே தள்ளும் விதமாகக் கழுத்து நீள டினோசர் பலத்த உறுமலுடன் தலையைச் சிலுப்பிக் கொண்டு வெளியே நீட்டியது. அந்த நேரம் பாலத்தைக் கடந்து கொண்டிருந்த போலீஸ் வேனில்... போன் சகிதமாக எச்சரிக்கை செய்து கொண்டிருந்த ஒரு போலீஸ் சப்தம் கேட்டுத் திரும்பி பார்த்து அதிர்ச்சியில் விக்கித்து சைரன்கள் அலற அடுத்த சில நிமிடங்களில் நகரத்தின் மூலை முடுக்குகளில் திரிந்து கொண்டிருந்த போலீஸ் வாகனங்கள் அனைத்தும் கூவம் நதியை நோக்கிப் படை யெடுத்தன. டி.வி., ரேடியோக்களுக்கு விபரம் தெரிவிக்கப்பட அதன் மூலம்



விபரமறிந்த பொதுமக்கள் பெரும் திரளாகக் கூவம் நதிக்கரை நோக்கி வாகனங்களில் படையெடுத்தனர். தங்களைச் சுற்றிப் பெரும் கூட்டம் கூடுவதைக் கண்ட எல்லா டினோசர் களுக்கும் விழிப்புத் தட்டியது. முந்தின இரவு நடந்த சம்பவம் குறித்து அவைகளுக்கு அப்போதுதான் ஞாபகம் தட்டியது.

நரி வாயில் தப்பித்து புலி வாயில் மாட்டிக்கொண்ட கதையாக அனைத்து டினோசர்களும் என்ன செய்வதெனத் தெரியாமல் சுற்றும் முற்றும் பார்த்தனர். ஒருபுறம் டினோசர்களை எப்படி வெளிக் கொணர்வது எனத் தெரியாமல் போலீஸ் குழப்பிக் கொண்டிருக்க, இன்னொரு புறம் மக்கள் கூட்டம் வேறு அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

பாதுகாப்பிற்காக கரை முழுக்க

படிப்பகம்

www.padippakam.com

கட்டைகள் மூலம் கட்டைகள் அவசர அவசரமாக ஒரு தடுப்பு வேலியைப் போலீஸ்கள் உருவாக்கியதன் மூலம் ஓரளவு நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். ஆனாலும், கூட்டத்தையும், கூச்சலையும் அவர்களால், கட்டுப்படுத்த முடிய வில்லை. எங்கு பார்த்தாலும் மனிதத் தலைகள்.

கூட்டத்தினருக்கு டினோசர்களைத் தரிசிக்கும் ஆவல் கட்டுக்கடங்காமல் கொந்தளித்தது. திடுமென ஒரு திருவிழா போல் எக்கச்சக்கமான



கூட்டம் சேர்ந்துவிடவே அதற்காகவே காத்திருந்தவர்போல் டினோசர் பொம்மைகளையும், டினோசர் ஸ்டிக்கர் களையும் துரிதமாக அச்சிட்டு விநியோகித்தனர். சில புத்திசாலி நிறுவனங்கள் ஒரு பெரிய அட்டையில் டினோசரையும் அதன் கீழ் தங்களது நிறுவனத்தின் பேரையும் கொட்டையாக அச்சிட்டு இலவசமாக விநியோகித்தனர். கூட்டத்தின் நடுவே ஒரு மதயானையைப் போல் திடுமெனப் புகுந்து ஆட்டோவிலிருந்து ஒரு அலுமினிய டவராவும் சில கண்ணாடிக் குப்பிகளுமாக வந்திறங்கி பூப்போட்ட ரோஸ் நிறக் கைலியை மடித்துக் கொண்டு காதில் புகைந்த மலபார் பீடியுடன் சேட்டனொருவன் களத்திலிறங்க அடுத்த ஐந்தாவது நிமிடம் சேச்சியின் தலைமையில் அங்கு ஒரு டீக்கடை பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. குட்டன்கள் ஐநூறு பேர்... புறப்பட்டுப் பல திக்குகளுக்குச் சாயா சப்ளை செய்து கொண்டிருந்தனர் கூட்டத்தின் நடுவே எக்கி, எக்கி டினோசர்களைப் பார்த்தபடி. கரையிலிருந்த ஒரு கட்டிடத்தின் வாசலில் டவுசர் தெரிய வேட்டியை மடித்துக் கட்டிய அண்ணாச்சி ஒருவர் தலைக்கு ரூபாய் வீதம் வசூலித்துக் கொண்டு படிக்கட்டுகளில் வழியே மொட்டை மாடிக்கு அனுப்பிக் கொண்டிருந்தவர், அங்கிருந்து பார்த்தால் டினோசர்கள் 3D எப்பெக்டில் தெரிகிறதாம். மேலேறி பார்த்த மக்களும் டினோசர்களைத் தரிசித்த கட்டுக்கடங்காத சந்தோஷத்தில் இறங்குவதற்காகப் போடப்பட்டிருந்த ஏணியை விடுத்துக் கழிவு நீர் சிமெண்ட் குழாய்களைப் பிடித்துக் கொண்டு சர்..சர்..ரென கீழே குதித்தனர்.

இந்த திடீர் வியாபாரத் தந்திரத்தைக் கண்டு விக்கித்துப்போன பக்கத்துக் கட்டிட அண்ணாச்சியொருவர் கட்டணத்தைப் பாதியாகத் தலைக்கு ஐம்பது பைசாவாகக் குறைத்து தன் படிகட்டு கதவுகளைத் திறந்து விட்டார். போதாக்குறைக்குத் தன் கடையிலிருந்த கால் டவுசர் பையன்கள் இவர் மூலமாகத் தெருவிலிருந்து கொண்டு கூட்டத்தினரை நோக்கி கூவி அழைக்கச்செய்து கூட்டமனைத்தையும் தன் பக்கமாக ஈர்த்துக் கொண்டார்.

அதன் பொருட்டு இருவருக்கும்...

படிப்பகம்

www.padippakam.com

நடந்ததாகக் கூடக் கேள்வி.

கதையை இந்த இடத்தில் நிறுத்திச் சோம்பல் முறித்து கைகளை உதறிக் கொண்டு எழுதி வைத்த காகிதத்தையெல்லாம் வரிசையாக நம்பர் போட்டு வைத்தேன். டீக்குடித் தால் தேவலை போலத் தோன்றியது. வாசலுக்கு எட்டிப் பார்த்தால் ஒரு பயலையும் காணோம். சட்டைப் பாக்கெட்டைத் துழாவிபபார்த்ததில் பத்து ரூபாய் அகப்பட்டது.

சந்தோசத்துடன் சட்டையை மாட்டிக்கொண்டு தெருவில் இறங்கி நடந்தபோதுதான், எதிர்த்த அம்மாச்சு, டி.வி.எஸ். ஃபிப்டியை என்னைத் தொடறாப்பல நிறுத்தி மாமா ஏறிக்கோங்க, ஏறிக்கோங்க என்றான். என்னடாப்பான்னேன்.

சும்மா ஏறுங்கோ தோ மவுண்ட ரோடு வரைக்கும் போய்ட்டு வந்துட லாம்னான். நானும் எங்க போறான்னு தெரியாம ஏறி உட்கார்ந்தேன்.

படவாப்பயல் என்னையவே இங்க கொண்டு வந்து நிறுத்திப் புட்டான். கூவத்தைச் சுற்றி ஏகக் கூட்டம், எங்கயும் போயிடாதீங்க நான் போய் டோக்கன் போட்டுண்டு வந்திடறேன் சொல்லிட்டு வண்டியைத் தள்ளிகிட்டுப் போயிட்டான். ஓஹோ டோக்கன் கூடப் போட்டாச்சா என்ற படி நான் கொஞ்ச தூரத்திலிருந்த சேட்டனின் டீக்கடை நோக்கி எட்டு வைக்க முற்பட்டபோதுதான் ஆசாமியைப் பார்த்தேன். மனுஷன் சாண்டில்யன் வகையறா. என்ன டினோசரைப் பார்க்க வந்தீரா...

என்னாச்சு உம்ம சபதமெல்லாம். தோ எழிதிக் கிழிச்சுடறேன்னு சவால் விட்டுட்டுப் போனீரே என்னாச்சு.

அவமானம் பிடுங்கித் தின்றது. வழக்கம்போல் சமாளிப்பாக ஒரு இளிப்பு இளித்து வைத்தபடி தோ. நாளைக்குக் கொடுத்திடறேன் எனக் கூறிவிட்டு அம்மாச்சுவிடம் கூடச் சொல்லிக்காமல் பஸ் பிடித்து - வீடு வந்து சேர்ந்தேன்.

மொத - வேலையாய் பேப்பர் பேனாவை எடுத்துக் கொண்டு மீண்டும் கதையை விட்ட இடத்திலிருந்து எழுத ஆரம்பித்தேன்.

இப்படியாக டினோசர்களைச் சுற்றிக் கூடியிருந்த பிரம்மாண்டமான கூட் டத்தை முன் வைத்து பலரும் பல விதமாகக் கைவரிசைக் காண்பித்துப்



படிப்பகம்

www.padippakam.com

பாக்கெட்டை ரொப்பிக் கொண்டிருந்தனர்.

அன்று குட்டையாயிருந்த ஒரு உருவம் தலையில் முக்காடு ஒன்றைப் போட்டு முகத்தை மறைத்துக் கொண்டு ஒரு கூண்டு வண்டி சகித -மாக்க கரையில் யாருக்கும் தெரியாமல்



கழுகுபோல் காத்திருந்தது. அந்த உருவம் வேறு யாருமல்ல ஆடு, மாடு, கோழி, குதிரை, பாம்பு, பல்லி, பூரான் முதற் கொண்டு எறும்புவரை எல்லாவற்றையும் நடிக்கவைத்து புகழ்பெற்ற பிரபலச் சினிமா இயக்குநர் அவர்.

எப்படியாவது ஒரு டினோசரைத் தள்ளிக் கொண்டு சென்று தான் அடுத்து இயக்கப்போகும் "ஆடி அமாவாசை" திரைப்படத்தில் ஒரு டான்ஸ் ஆட வைத்து வசூல் மழையை ஏற்படுத்த வேண்டும் என்பது அவர் திட்டம். அந்த நேரம் பார்த்துக் கையில் டி.வி. கேமராவும் மைக்குமாக அலைந்து கொண்டிருந்த ஒரு சேனல் கும்பலின கண்ணில் அவர் பட்டுவிட நைசாக யார் கண்ணிலும் படாமல் மனுஷர் எஸ்கேப் ஆகிவிட்டார். கதை வளவளாவென நீண்டு கொண்டே போகிறார்போல்தோனவே கதையை எப்படி முடிப்பது எனத் தெரியாமல் ரொம்ப யோசித்து ஒண்ணும் பிடி படாமல் அப்படியே பேனாவால் மண்டையைத் த்ட்டிக் கொண்டிருந்த போதுதான் அனாத ரட்சகனாக அறைக்குள் பிரவேசித்தான் அந்தப் பையன்.

பக்கத்து தெருவிலிருப்பவன், சினிமாவில் அசிஸ்டண்ட் டைரக்டராக ரெண்டு, மூணு படங்களுக்கு வேலை செய்துவிட்டு தனியாகப் படம் பண்ணப்போறேன் பேர்வழின்னு அடிக்கடி என்னைப் பயப்படுத்துபவன். அவனை உட்கார வைத்து இப்படியெல்லாம் ஒரு கதை என எழுதினது வரை அவனிடம் வாய் வழியாக சொன்னபோது தலையைத் தலையை ஆட்டிக்கொண்டே எல்லாவற்றையும் கேட்டான். கதை குறித்து அவன் சொன்ன அபிப்ராயமெல்லாம் இந்தச் சமயத்தில் உங்களுக்குத் தேவையில்லை. வாய்வழியாக சொன்னவற்றைக்கீழே அவன் கதைக்குத் தன் சினிமாப் பாணியில் ஒரு முடிவைச் சொன்னான். அது எனக்குப் பிடித்துப்போகவே கோடி புண்ணியம்டா சாமி என அவனுக்குக் கும்பிடு போட்டுக். கொண்டே அவன் வாய் வழியாக சொன்னவற்றை கீழே கதையாக விடுபட்ட இடத்திலிருந்து தொடர்கிறேன்.

கூவம் நதிக்கரையில் இப்படி பலவகையான சுவாரஸ்ய சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கக் கோட் -டையில் முதல்வர் அலுவலகத்தில்

படிப்பகம்

www.padippakam.com

டினோசர்களை மீட்பது குறித்து தீவிர மாக ஆலோசிக்கப்பட்டது. ஆர்வ மிகுதி காரணமாகவும், நெருக்கமான இந்த நேரத்தில் தக்க ஆலோசனை சொல்வதன் மூலமாகவும் முதல்வரின் மனசில் கடற்கரைத் துயிலிடம் நீங்காத இடம் பிடித்து விடலாம் என்று ஆளாளுக்குப் பிரம்மப் பிரயத்தனம் மேற்கொண்டனர்.

எவரது ஆலோசனையிலும் திருப்தியுராத முதல்வர் அவர்கள் தன் உடன் பிறவாத நண்பரிடம் இது குறித்து ஆலோசிக்க, இருவரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தனர். டினோசர்களை மீட்க அதை உருவாக்கிய ஸ்பீல்பெர்க்கை இம்மீடியட்டாக மெட்ராஸ் வரவழைப்பது அவர்கள் திட்டம். முதல்வரின் நேரடிச் செயலாளர் மூலம் ஹாலிவுட்டுக்கு ஐ.எஸ்.டி. கால் பறக்க இரண்டொரு கைகள் மாறியபிறகு ஸ்பீல்பர்க்கே நேரடியாக லைனில் கிடைத்தார். விபரம் அறிவிக்கப்பட்டதும் முதலில் அதிர்ச்சி அடைந்த ஸ்பீல்பெர்க் தான் உருவாகிய டினோசர்கள் அப்படி எதுவும் முறைகேடாக சாத்தியமில்லை யென்றும் அதை வடிவமைத்த மென் பொருளின் விதிகளைத் தாண்டி அதனால் தன்னிச்சையாக இப்படிப் பட்ட செயல்களில் இறங்க முடியா தென்றும் தீர்க்கமாக எடுத்துரைத்தார். தொடர்ந்து நடந்த விவாத்தின் இறுதி யில் தான் அடுத்த ப்ளைட்டில் தான் மெட்ராஸ் வருவதாக வாக்களித்த ஸ்பீல் பெர்க் தான் வரும்வரை தன் டினோசர்களுக்கு எந்த ஆபத்தும் வரா -மல் காக்க வேண்டியது முழுக்கவும் அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் அப்படியேதும் நேர்ந்தால் பன்னாட்டு மன்றத்தில் தான் வழக்கு தொடருவேன் என்றும் மீண்டும் எச்சரிக்கை செய்தார்.

ஸ்பீல்பெர்க்கின் சென்னை விசிட் குறித்த தகவல் சென்னை முழுக்கத் தீயைக் காட்டிலும் வேகமாக பரவத் தொடங்கியது. இதுதான் இந்த பிரச் சினைக்கான ஒரே தீர்வு என சமயோஜி -தமாக முடிவெடுத்த முதல்வரை மக்கள் அனைவரும் ஒருமனதாகப் பாராட்டினர்.

ஆனால் அதே சமயம் கோடம்பாக் -கத்தில் மட்டும் இதுகுறித்து பலத்த கண்டன குரல்களும் ஆதரவு குரல்களும் அதிகமாக எழுந்தன. இயக்குநர்கள் குழு கையில் கறுப்புக் கொடி ஏந்தி மீனம் பாக்கம் ஏர்போர்ட்டை முற்றுகையிட்டது. தங்களது அஸிஸ்டெண்டுகள் மூலம் ஸ்பீல் பெர்க்கே திரும்பிபோ" போன்ற வாசகங்களை எழுதிய அட்டைகளைப் பிடித்தபடி ஏர்போர்ட் ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com

எங்கே? ஸ்பீல் பெர்க் வந்திருக்கிற ஒன்று, இரண்டு, . புரடியூசர்களையும் கவுத்து தமிழில் படம் பண்ணி நம்மை யெல்லாம் வீட்டுக்கு அனுப்பி விடு வாரோ என்கிற பயம்தான் அதற்கு காரணம் பிற்பாடு பி.ஆர். மூலம் தெரியவந்தது.

இதே சமயத்தில் ஸ்பீல்பெர்க்கைச் சந்தித்து எப்படியாவது அவரது அடுத்த படத்தில் ஒரு சான்ஸ் வாங்கி விடுவது என்ற கங்கனத்துடன் கண்ணைப் பறிக்கும் கவர்ச்சி ஆடைகளில் கூடியிருந்த கனவுக் கன்னிகளில் கூட்டம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இணை, துணை இயக்குநர்களின் கவனத்தை சிதறடித்தது.

இந்தத் திடீர் முற்றுகையின் காரணமாக ஸ்பீல் பெர்க்கிற்கென பிரத்யேமாக ஒரு வழி அமைக்கப் பட்டு கோட்டையை நோக்கிப் பயணிக்க ரகசியமான காரும், சுற்றிப் பாதுகாப்பு வாகனங்களும் தயாராகக் காத்திருந்தன.

தனக்காக பெருங்கூட்டம் வரவேற்கக் காத்திருக்கும் என எதிர் பார்த்து கையசைத்தபடியே ப்ளைட்டிலிருந்து இறங்கிய ஸ்பீல்பெர்க்கிற்கு விமான நிலையத்தில் யாரும் இல்லாததைக் கண்டு மிகவும் ஏமாற்றமாகிப் போனது. இதுபோன்றதொரு அவமானத்தை வாழ்நாளில் சந்தித்ததில்லை எனப் பொறுமிக் கொண்டே இறங்கியவரிடம் காவலர்கள் சூழலைத் தெளிவுபடுத்திய பிறகுதான் சற்று ஆசுவாசமடைந்து காணப்பட்டார்.

அடுத்த இருபத்தைந்தாவது நிமிடத்தில் ஸ்பீல்பெர்க் தனது சகாக்களுடன் கோட்டைக்குள் நுழைந்தார்.

கோட்டை வாசலில் ஹெலிகாப்டர் காத்திருக்க சற்று தூரத்தில் முதல்வரும் ஸ்பீல் பெர்க்கும், மைக்கேல் கிரிக்டனும் வடிவமைத்த கம்ப்யூட்டர் என்ஜினியரும் செக்யூரிட்டி படை சூழ வந்துகொண்டிருந்தனர்.

கூவத்திலிருந்த கூட்டத்தினரின் தலைக்குமேலே விர்... விர்.. ரென ஹெலிகாப்டர் பறந்து வானத்தில் சுழல ஹோசவென பெரும் இரைச்சல் எடுத்தது. தயாராக போடப்பட்டிருந்த ப்ரத்யேக ஹெலிபேடில் ஹெலிகாப்டர் தன் இறக்கைகளை சுழல விட்டவாறு ஹெலிபேடில் இறங்க அது கூவம் நதியில் ஹெலிபேடை சுற்றி வட்ட வட்டமாக சிற்றலைகளை எழுப்பியது.

ஹெலிகாப்டரில் இருந்து முதலில் ஸ்பீல்பெர்க் இறங்க அடுத்ததாக இறங்கிய முதல்வர் கூடியிருந்த கூட்டத்தினரைப் பார்த்து தன் வழக்கமான ஓட்டு கேட்கும் பாணியில் கையசைத்துக் கொண்டார்.

"டினோசரைக் காப்பாற்ற வரும் முதல்வர் அவர்களே வருக" என்பது போன்ற பேனர்களும் தட்டிகளும் கூவம் நதிக்கரை முழுவதும் காணப்பட போதாக்குறைக்குக் கட்சிக் கொடிகள் வேறு திருவிழா போல தோரணங்களாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. இதுமட்டு மல்லாமல் வானை முட்டும் முதல்வரின் ராட்சச கட்அவுட்டுகள் ஆங்காங்கே நிறுவப்பட்டிருந்தன.

"24வது வட்டத்தின் சார்பாக" என கூவிக்கொண்டே தொண்டனொருவன்

படிப்பகம்

www.padippakam.com

கரையில் இருந்து மாலையொன்றை வீச தொடர்ந்து ஏகப்பட்ட மாலைகள் வந்து விழுந்துகொண்டிருந்தன.

டினோசர்களை எப்படிக்காப்-பாற்றுவது என்ற யோசனையிலிருந்த ஸ்பீல் பெர்க் கூட்டத்தினரின் இந்தச் செய்கையால் திடுக்கிட்டுப்போனார். மேலும் ராட்சத கட் அவுட்டுகளை கண்டு பயந்து போன அவர் முதலில் அதை அகற்றும் படியும் இதைக் கண்டால் டினோசர்கள் மிரண்டு விடும் என்றும் எச்சரிக்கை செய்ய அடுத்த நிமிடமே அங்கிருந்த மாவட்டத்தை அழைத்து கடுமையாக டோஸ் விட்டார் முதல்வர். அடுத்த இரண்டொரு நிமிடத்தில் அனைத்துக் கட் அவுட்டுகளும் பேனர்களும் தொண்டர்களால் அகற்றப்பட, ஸ்பீல்பெர்க்கின் முகத்திலிருந்த திகில் குறைந்தது.

பிறகு தனது கம்ப்யூட்டர் ஆப-ரேட்டருக்கு கட்டளைகள் பிறப்பிக்க பபுள்காம் மென்றபடி அந்த ஆசாமி லேப்டாப்பைத் திறந்து டினோசர் களுக்கான மென்பொருளின் உதவி யோடு கூவத்தில் மூழ்கி கிடந்த டினோசர்களுடன் தொடர்பு கொள்ள உடனடியாக அவையனைத்தும் ஒரு சேர பதில் குரல் எழுப்பின.

தொடர்ந்தாற்போல் ஸ்பீல் பெர்க் எழுப்பிய கட்டளைகளை மதித்து வரிசையாக ஒரு ராணுவ அணி வரிசையைப்போல் ஒன்றன்பின் ஒன்றாக அவை தயாராக நின்றன. ப்ரத்யேகமாக உருவாக்கப்பட்ட வழியில் டினோசர்கள் ஒன்றன்பின் ஒன்றாய் அணி வகுக்க ஸ்பீல்பெர்க் அவற்றைச் சத்யம் தியேட்டர் வழி நடத்திச் செல்ல, கூடியிருந்த கூட்டமனைத்தும் 'டினோசர் வாழ்க, டினோசரைக் காப்பாற்றிய ஸ்பீல்பெர்க் வாழ்க' என படித்த கோஷத்தை மறக்காமல் கூச்சல் போட்டனர்.

எல்லாம் இனிதே முடிந்து அன்று இரவே சத்யம் தியேட்டரில் இரண்டாம் கட்டத்தைக் கண்டுகளித்த பிறகே ஸபீல்பெரக் விமானமேறினார். எல்லாம் சரி.

ஸ்பீல்பெரக்கிற்குக் கட்டுபட்டது எல்லாம் அவரது படத்தில் வந்த டினோசர்கள் மட்டும் தான். அதல்லாமல் மியூசியம் டினோசர் ரெண்டும் கூவத்தில் கிடந்ததே அவற்றின் கதி என்ன ஆனது என்று தான் யாருக்கும் தெரியவில்லை.

ஒரு வேளை நீங்கள் மியூசியம் பக்கமாக போவீரானால் டினோசர்கள் திரும்ப அங்கே வந்து விட்டதா எனப் பார்த்து எனக்குக் கடிதம் எழுதவும்.

இப்படியாக ஒரு வழியாக கதையை எழுதி முடித்தேன். ஐநூறு ருபாய் கிடைக்கப் போகும் ஆவலு டன் சாண்டியல்யன் ஆசாமியைத் தேடிப் பிடித்து கதையை ஒப்படைப்பதற்குள் நான் பட்ட மன அவஸ்தை இருக்கிறதே! அப்பப்பா

படிப்பகம்

www.padippakam.com

என்னை எதிரிலேயே உட்கார வைத்துவிட்டு மனுஷர் பொறுமையாகப்படிக்க ஆரம்பித்தார். முழுவதுமாகப் படித்து முடித்தபிறகுதான், "பெரிசா அள்ளி விட்டீர் சரித்திரக்கதை எழுதிக் காமிக்கிறேன்னு, எனக்குத் தெரியும் உம்மால முடியாதுன்னு"

'அடப்பாவி... மனுஷன் கல்லைப் போடறானே' என நொந்துகொண்டு, 'கடந்து போனதெல்லாம் சரித்திரக் கணக்கில் தான் வரும்' என என் லாஜிக்கைச் சொன்னேன். மனுஷன் கேட்டால்தானே?

தான் பிடிச்ச முயலுக்கு மூணு கால் என்பதில் கடைசி வரைக்கும் பிடிவாதமாக இருந்து விட்டார்.

ஆகவே நண்பர்களே எங்களுக்குள் இந்தப் பஞ்சாயத்தைத் தீர்த்து வைக்குமாறு அகநாடு வாசகர்களாகிய உம்மிடம் கோருகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com

தமிழின் அகற்சி வேண்டி புலம்பெயர் தமிழர் வாழ்வு

- ஓர் அறிமுகப் பரிசீலனை

- தெ. மதுசூதனன்



இன்று தமிழில் 'புலம் பெயர் தமிழர்கள்' 'புலம்பெயர் இலக்கியம்' 'புலம்பெயர் நிலை' என்று பேசும் பொழுது தவிர்க்க முடியாமல் ஈழத்தமிழர்களது அரசியல் போராட்டத்தின் தர்க்கவிளைவாய் உருவான போக்கின் விளைவாகவே பார்க்கவேண்டி உள்ளது.

ஆகவே ஈழத்தின் போராட்ட நெருக்கடிகள் தமிழர்களை வெளிநாடுகளுக்கு புலம் பெயரச் செய்கிறது. இவ்வாறு சென்றவர்கள் தமிழ்ச் சூழலில் புதிய வகையான வளங்களை தமிழுக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளனர். தமிழின் அகற்சிக்கு, புலம்பெயர் வாழ்வு, சாத்தியமான புதிய களங்களை திறந்துவிட்டுள்ளது. தமிழின் பன்முகப்பாடு மீதான உரத்த சிந்தனைகளையும், வேண்டி நிற்கிறது. ஆக புதிய அனுபவங்களும், படைப்பாக்க உந்துதல்களும் கருத்தியல்களும் ஆரோக்கியமான முன்னோக்கிய நகர்வுக்கு வழியமைக்கின்றன.

சமகாலத்தில் 'புலம்பெயர் தமிழர் வாழ்வு' எத்தகைய சமூக அசைவியக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன்வழி மேற்கிளம்பியுள்ள துலங்கல்கள் யாவை, மேலும் சில அவதானங்கள் மீதான கவனத்தைக் குவிக்கவும், சிந்திப்பதற்காகவுமே இக்

படிப்பகம்

www.padippakam.com



கட்டுரை முயற்சி செய்கிறது.

2

இலங்கையின் அரசியல் ஆட்சி வரலாற்றில் மக்கள் பிரதிநிதித்துவ முறை தோன்றிய காலந் தொடக்கம் இனங்களின் அடிப் படையில் தெரியப்படும். நியமிக்கப்படும், பிரதிநிதித்துவ முறையே காணப் பட்டது. இதனால் இலங்கையில் காலனித்துவத்துக்கு எதிராகத் தொழிற்பட்ட வரலாற்றுக் காரணிகள் காரணமாகவும் இலங்கையில் இனங்களின் அடிப்படையிலேயே தேர்தல் சனநாயகம் வளர்ந்து வந்தது.

ஆக இங்கே சனநாயகம் சிங்கள மக்களுக்கான சனநாயகமாக, ஏனைய சமூகப்பிரிவினரை, ஒடுக்குவதற்கான அரசயந்திரத்தை தக்கவைக்கும் சனநாயகமாகவே நடைமுறையில் இருந்தது.

-1956 இல் தனிச்சிங்களச் சட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

-1958 இல் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக பெரும் இனக்கலவரம் கட்டவிழ்க்கப்படுகிறது.

-படிப்படியாக அரச பயங்கரவாதம், நிறுவனமயப் படுத்தப்பட்டு சிங்கள பௌத்த பேரினவாதம் ஆட்சி செய்யத் தொடங்கியது.

படிப்பகம்

www.padippakam.com

இலங்கை வரலாற்றில் 1956 ஓர் பிரிநிலைக் கோடாகவே கணிக்கப்படுகிறது. ஆகவே இலங்கையின் எதிர்காலம் எதனை நோக்கி நகரப் போகிறது என்பதனை சமிக்ஞை செய்யும் குறியீடாகவும் 1956 அமைந்தது.

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை, தமிழ்த் தேசியம் என்பது 1972 இல் பின்னர் ஒரு வன்மையான வடிவத்தினைப் பெறுகிறது. 1980களின் பின்னர் 83கள் போராட்டத்தை மேலும் முனைப்படையச் செய்கிறது.

1983 ஜூலைக்குப் பின்னர் தமிழ் மக்களின் தேசிய விடு-தலைப் போராட்டம் சருவதேசப் பரிமாணம் பெறுகிறது. 1985களின் பின்னர் தமிழ் மக்களின் போராட்டங்களுக்குள் உள் முரண்பாடுகள், போராட்டங்கள் துல்லியமாகின்றன. தமிழ்ச் சூழலில் தமிழ் தரப்பினராலேயே சனநாயக மீறல், கருத்துரிமைப் பறிப்பு யாவும் தாராளமாக நிகழ்கிறது. தமிழ்ப் பேரினவாதப்போக்கு முசுலிம் மக்கள் மீது திரும்புகிறது. சொந்தப்பிரதேசங்களிலிருந்து, முசுலிம் மக்கள் தமிழ்த் தலைமையால் விரட்டியடிக்கப்படுகின்றனர்.

ஆனாலும் இலங்கை அரசினது தமிழ்பேசும் மக்கள் மீதான ஒடுக்குமுறையும், மிலேச்சத்தனமான தாக்குதல்களும், வன்முறைகளும் மிக மோசமாகவே கட்டவிழ்க்கப் பட்டுள்ளன. இப்போக்கு இன்னும் தொடர்ந்து கொண்டேதான் உள்ளன. ஆக தமிழ் பேசும் மக்கள் பல்வேறு யுத்தச் சுமைகளை சுமக்கின்றனர். தமிழர்கள் என்னும் ஒரே ஒரு தகுதிப்பாட்டின் காரணமாக தமிழ் பேசும் மக்கள் படும் வேதனைகளும், துன்பங்களும் அவர்களை ஓட ஓட விரட்டிக் கொண்டிருக்கிறது.

1956க்குப் பின்னர் இலங்கையில் தொடர்ந்து வாழ்வதால், தங்கள் வாழ்வில் முன்னேற்றங்களை காண முடியாது, என்னும் நிலைக்கு ஆங்கிலப் புலமையுடைய கல்விக் கற்ற குழாம் தள்ளப்பட்டது. இவர்கள் சமூகப் படிநிலையில் ஆதிக்க சாதியினராகவும் இருந்தனர். இதனால் இவர்கள் ஆங்கில மரபு தெரிந்த நாடுகளுக்கு பொருளீட்ட செல்லும் போக்குக்கு உந்தப்பட்டனர். 1958 இல் இலங் கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற பாரிய இனக்கலவரம், இவர்களது வெளியேற்றத்தை துரிதப்படுத்திற்று. 1956, 60களில் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வழிக்கறிஞர்கள். கணக்காளர்கள் போன்றோர் செல்லும்போக்கு காணப் பட்டது.

தொடர்ந்து 1960களின் பிற்கூற்றி-லிருந்து சாதாரண நிலையிலிருந்த மக்களும், மத்திய கிழக்கு நாடு-களுக்கு பயணப்படுகின்றனர். இதனால் நிறைய பணப்புழக்கம் ஏற்பட்டு சமூக வளர்ச்சியில் அபிலாஷைகள் நிரம்பப்பெற்று வாழ்க்கை

படிப்பகம்

www.padippakam.com

மேல்நிலைப்படும் போக்கும் தொடங்குகிறது. 1970களுக்குப் பின்னர் தமிழ் இளைஞர்கள் பலர் அரசியல் அரங்கில் முனைப்புடன் ஈடுபடும்போக்கு அதிகரிக்கத் தொடங்குகிறது.

சிங்கள அரசினது தொடர்ந்த ஒடுக்குமுறையும் கல்வி உரிமை பறிப்பும் நடைபெற தமிழ் இளைஞர்கள் பெரும் நெருக்கு வாரத்துள் தள்ளப்படுகின்றனர். 1980களுக்குப் பின்னர் தமிழ் மக்களது போராட்டம் ராணுவ வகையிலான போராட்டமாகவும் மாற்றமுறுகிறது. ஆக 1983களுக்குப் பின்னர்போராட்டம் தீவிரமடைகிறது. வடகிழக்கு அல்லாத பிரதேசங்களில் உள்ள தமிழர்கள் அங்குவாழ முடியாத நெருக்கடி ஏற்படுகிறது. அவர்களில் பெரும்பாலோர் வட கிழக்கு நோக்கி பயணப்படு கின்றனர். 1984இல் தமிழ் பேசும் மக்கள் வடகிழக்குப் பிரதேசங்களில் கூட வாழ்வதே பிரச்சினையாகிறது. இளைஞர்களின் உயிருக்கு உத்திர வாதமற்ற சூழல் உருவாகிறது. இப்படியான சூழலில் இம்மக்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர வேண்டிய நெருக்கடிச்சூழல் ஏற்படு -கிறது. பல்வேறு வெளிநாடுகளுக்கும், சாதாரண மக்கள் யாவரும் ஓடோடிப் போகும் நிர்பந்தம் ஏற்பட்டது. புலம்பெயர்த்து வாழ்வ -தற்கு தயாரான உளச்சூழலில் இவர்கள் உருவாக்கிக் கொண்ட வர்கள் அல்ல. ஆனால், அவ்வாறு வாழ்வதற்கு விரட்டப் படவேண்டி யவர்களாயினர் நிர்பந்திக்கப்பட்டனர்.

இதுவரை தங்களுடைய வீடு, கிராமம் என்ற எல்லைகளையே கடக்க முடியாதவர்களில் பலர் பிரித்தானியா, பிரான்ஸ், ஜெர்மனி, கனடா, அவுஸ்ரேலியா, ஸ்கண்டி நேவிய நாடுகளான நோர்வே, சுவீடன், டென்மார்க் ஆகிய நாடுகளுக்கும் புறப்பட்டனர். இவ்வாறு புறப்பட்டவர்களில் பலர் கல்வி நிலையில் 10 அல்லது 12 வகுப்புகள் வரைக்குள் மட்டுமே படித்தவர்கள். ஆங்கில மொழியுடன் பரிச்சயமற்றவர்கள். தமிழ் மொழி -யைத்தவிர வேறு மொழி தெரியாதவர்கள். ஆகவே புலம் பெயர்த் தமிழர் வாழ்வு படிப் படியாக ஏற்பட்டு இன்று தனிந்து வகைமைப்படுத்தி புரிந்து கொள்ள வேண்டிய நிலைமை வரை ஏற்பட்டுள்ளது. புலம்பெயர்ந்த



படிப்பகம்

www.padippakam.com

தமிழர் என்ற வகைப்பாடு ஈழத்துத் தமிழ் பேசும் மக்களின். அரசியல் விளைவின் தர்க்க ரீதியானது. தமது தாயகத்தில் இருந்து விடு பட்டு, ஓடி வேறு நாட்டில் தஞ்சம் புகுந்து புலம் பெயர்ந்து வாழ்தலே புலம் பெயர்தல் இவ்வாறு வாழ தலைப்பட்ட தமிழர்களையே 'தமிழ் கூறு நல்லுலகு' புலம் பெயர்ந்த தமிழர்கள் என அடையாளப் படுத்தியது.

3

பொதுவில் அகதியாக இருப்ப -தற்கு, மைல் தொலைவு அவசிய மில்லை. இரண்டு மைல்களே போதும்.

பழக்கப்பட்ட, பரிச்சயக்கப்பட்ட, மண்ணையும் மனிதர்களையும், பொருள்களையும், கிணற்றடி நீரையும், மரங்களையும் கோயிலை -யும் இழக்க வேண்டி நேரிடும் பொழுது, இழந்து அதன்பின் தொடர்ந்துவாழ்தல் வேண்டுமென்ற நினைப்பு உந்துதல் வேட்கையாவும் தொழிற்படுகின்ற பொழுது அகதி உருவாக்கப்படுகின்றாள். அதன் பின் அகதி வாழ்க்கை தொடர் கிறது. ஈழத்தில் தத்தமது ஊர்களுக் குள்ளேயே இழக்க வேண்டி -யதையும் இழந்து புலம் பெயர்த்து வாழும் வாழ்க்கையும் தொடர் கதையாகிறது.

<u>காட்சி 1.1</u>

1958ல் இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து வந்தவர் ஏ.சிவானந்தன் இவர் பல்கலைக்கழகம் வரை சென்று படித்தவர். அவர் தனது நிலையை இவ்வாறு குறிப்பிடுகிறார்.

சிவானந்தன்

"1958ல் சிங்கள - தமிழ் கலவரம் வெடித்தது எனது தந்தையின் வீடு தாக்கப்பட்டது. ஒரு வெற்றுத் துப்பாக்கியை வைத்துக் கொண்டு போலீஸ் போல போலி வேடமிட்டு ஒரு கும்பலிலிருந்து என் தந்தையை நான் மீட்கப் போனேன். தமிழர்கள் என்று இருக்க நேர்ந்த காரணத்திற்காக மட்டுமே மனிதர்கள் கொல்லப் -படுவதைக் கண்டேன். மனிதர்கள் உயிருடன் கொளுத்தப்பட்டார்கள். இந்த கொடுமைகளில் அஹிம்சைக்கு லண்டனுக்கு அர்ப்பணித்துக் கொண்டதாக சொல்லிக் கொள்ளும், சிங்கள பௌத்த அரசாங்கம் இது குறித்து மௌனமாக இருந்தது. பெரிய பதவிகளிலிருந்த படித்த மேதாவிகள், ஏதும் செய்யவில்லை. பத்திரிகைகளும், ரேடியோவும் நள்ளிரவில் உடைந்து போனது. எமது மக்கள் அவமானப்படுத்தப் பட்டதும், கேவலப்பட்டதும், என் நாசியில் எரிகிறது. இதை சகித்துக் கொள்ள முடியாது. எனது நாட்டி லிருந்து விரைவில் நான் வெளியேற விரும்பினேன். வேலையை விட்டேன். எதையெதை விற்க முடியுமோ அனைத்தையும் விற்றேன். இங்கிலாந்துக்கு என்னைத் தள்ளினேன்"

படிப்பகம்

www.padippakam.com

"இரண்டு முறை அக்னியில் பிரவேசம் சிங்களர்-தமிழர்கள் கலவரம் அங்கே வெள்ளை-கறுப்பு கலவரம் இங்கே. பிற்பாடு நான் கறுப்பன் என்பதை உணர்ந்தேன். ஓரங்கட்டிக் கொண்டு இருக்க முடியாது. நிறம், இனம், ஒரு பிரச்சினை. அது, என்னை நேரடியாக பாதிக்கிறது"

காட்சி 112 35

1984ல் 12 வரை படித்து 19 வயதில் ஜெர்மனியில் தஞ்சம் புகுந்தவர் பார்த்திபன். அவர் தனது நிலைமையை பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

பார்த்திபன்

"எல்லா வேலைகளையுமே நாங்கள் செய்ய முடியாது. வேலை செய்யற முறையிலே கனக்க 'கண்டிஷன்'கள் இருக்கு. முதலாவது ஒரு வேலையை கண்டு பிடித்தவுடனேயே அந்த வேலையைப் போய் செய்ய இயலாது. அதை எம்ளாய்மெண்ட் ஆபிசில் போய் நாங்கள் பதிய வேணும். அப்படியே பதிச்ச வுடனே அவுங்கள் வேலை இல்லா -மல் இருக்கிற ஒரு ஜெர்மனி ஆளை அந்த வேலைக்கு அனுப்புவாங்க. அவர் அந்த வேலையை பிடிக்காம போயி அல்லது அவரோட வேலையை பிடிக்கலேன்னு திருப்பி, கறுப்பான அந்த இடத்திற்கு வேலை இல்லாம இருக்கிற அய்ரோப்பிய 'நேஷனாலிட்டி' உள்ள இன்னொரு ஆளை அனுப்புவாங்க. அவருக்கும் அந்த வேலை பிடிக்காமலிருந் -தால்தான் நாங்கள் போகோணும். கூடுதலாக, எங்களை எம்பளாயிண் மெண்ட் ஆபிஸ்லே அனும திக்கிற வேலைகள் ரெஸ்டாரெண்ட்லே கோப்பை கழுவுகிறது, சமைக்கிறது, பன்றியின் பண்ணைகளை பார்க் -கிறது. பூக்கடைகளிலே பூ கட்றது, ரோட்டை கிளீன் பண்றது, கெமிக்கல் ஃபாக்டரிகள்லே வேலை செய்வது. ஜெர்மன் சமூகத்திலே இரண்டாம் தரக்குடி மக்களாக வாழ்றதிலே ஏகப்பட்ட சிக்கல். எங்களுக்கு வெளியிலே போறதுக்கே சிலவேளை மனசு வர்றதில்லை. அவர்கள் பார்க்கிற பார்வை, அதில தெரியிற கேலி, அருவெறுப்பு."

படிப்பகம்

www.padippakam.com

"உதாரணமாக நாங்க டிரெயின்லேயோ, கார்லேயோ போனால் பக்கத்திலே இருக்கிறவுங் கிட்டே அவுங்க கதைப்பாங்க. எங்கட நாட்டுக்கு வந்துட்டாங்க கறுவல்கள் திரும்பிப் போக வேண்டியதுதானே."

"இவுங்களாலே எங்களுடையது எல்லாம் போச்சு என திட்டு வாங்கள். அப்பப்ப பேப்பரிலே 'டி.வி.'யில செய்தி வரும். வெளிநாட்டு ஆக்காள வெளியில அனுப்புறதெண்டு இதனால நாங்க கூசிக் குறுவி, ஒவ்வொரு செகண்டும் எங்களுக்கு உணர்த்திக் கொண்டே இருக்கு."

"நாஜிகளின் செயற்பாடுகள் நம்மை அச்சுறுத்திக் கொண்டே இருக்கு."

இவ்வாறு வெவ்வேறு கால கட்டங்களில் புலம் பெயர்ந்த இருவரின் சிந்தனைகள் எதிர் நோக்கும் மன நெருக்கடிகள் யாவை என்பதை இவை தெளிவு படுத்துகின்றன. சிவானந்தன் மூன்றாம் உலகப் புலமையா-ளர்களுள் ஒருவராக சருவதேச சமூகத்தால் நன்கு மதிக்கப்படுபவர். ஐரோப்பிய சிந்தனை மரபுக்கு எதிராக மூன்றாம் உலகச் சிந்தனையின் மேதைமையை நிலைநாட்டிக் கொண்டிருப்பவர். Race and Class என்னும் பத்திரிக்கையின் ஆசிரியர்

பார்த்திபன் சிறுகதைகள் மூலம் புலம் பெயர்ந்த சூழலில் அறிமுகமாகி இருப்பவர் தூண்டில் என்னும் பத்திரி-கையை சில வருடங்கள் ஆசிரிய ராக இருந்து தொடர்ந்து நடத்தியவர்.

மேலும் இன்னும் பலரது சிந்தனைகளை, குரல்களை, உணர்ச்சிகளை அவர்களது கவிதை வரிகள் மூலம் புரிந்து கொள்வோம். இவை புலம் பெயர் மனிதர்களின் எண்ணப்போக்கை ஓரளவு வெளிப் படுபவை எனலாம். ஆனால் இன்னும் சிறுகதை, கட்டுரை போன்ற பல்வேறு இலக்கிய வகைமைகள் மீது கவனிப்புச் செய்யும் பொழுது தான் பலதரப்பட்ட குரல்களை புலம் பெயர் வாழ்க்கையின் பல்வேறு நெருக்கடித் தன்மைகளை அவற் றினுள் உழன்று வரும் மனங்களை -மனிதர்களை மேலும் மேலும் புரிந்து கொள்ள முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

4

மரணத்தை கையிலேந்தியவர்களுக்கு
வழிவிட்டுக்கரையொதுங்கி
எங்கள் வாழ்க்கையை தருகிறோம்
ஒரு நாளில் எல்லாமிழந்து
அகதிகளாய் வனவாசம் செய்கிறோம்

\- சேரன்

நிலாவே! இன்று நான்
பாடல் எழுத மாட்டேன்
ஒரு தற்காலிக வீட்டில்
சொந்தமாய் வாசலில்லை
உரிமையோடு பூப்பறித்து முகர
ஒரு மரமில்லை
நீ கூட எனக்கு ஓர் அந்நிய-
-நிலவுதான்
எனது வாசலில் விழுகின்ற-
-உன்னுடைய வெளிச்சமும்
இந்த அந்நிய வாசல் ஒளியும்
எனக்குள்ளே பேதத்தைக்கிளப்பி-
-மனநிலையைக் கெடுக்கிறது
நான் மூன்று தினங்களாய் அகதி

\- சோலைக்கிளி

நிலவு விழாத தேசம்
துண்டு துண்டாகிப் போனதொலைவு
பனிப்பூக்களில் மகரந்தம் கொள்ளும்

\- விஞ்ஞானம்

கன்னிப்பெண்கள் நீராடுவதை
சூரியக்கிழவன் ஒழிந்தொழிந்து-
-பார்ப்பதுபோல
யன்னல்களுகுள்ளால்
உறையணிந்த விரல்களைத்-
-துலாவவிடும் நான்
எங்கோ தூரத்தில் புள்ளியளவு
-பூச்சி தெரிகிறது
புயற்காற்று அதை தூக்கிவந்து-
-நிறுத்தியது
பூச்சி பூப்படைந்த பெண்ணாக-
-என்முன் தோன்றிற்று
மாபெரும் வெள்ளை
அழகியாய் அவள் தெரிந்தாள்
ஆசியனான எனக்கு அவளுடன்
கை குலுக்கும் பாக்கியம்

\- செல்வ மகீந்திரன்

அகதி என்ற
அத்தாட்சி பத்திரத்தோடு
ஐரோப்பிய வாசலில்.

புல்லுப் போட்டு
புண்ணாக்கும் வைத்தனர்.
பசி பறந்து போனது நிஜமே.
நாலா புறமும்
பலமான வேலிகள்
ஆம்!
சனநாயக நாட்டில்
சுதந்திர மனிதன்!!

நா. கிருபா

எவ்வித வரவேற்புமற்று
அடங்கியது காலம்
எவ்விதத் தலைப்புமற்று
இருந்தது என் வாழ்வு
அவ்வப்போ வரும் கனவுகளை
கலைத்தெழுந்து
யன்னலூடு எதையோ தேடித்
தொலைந்தன கண்கள்

\- பா.அ. ஜயகரன்

படிப்பகம்

www.padippakam.com

என் வாழ்வும்
ஏதோவொன்று கழிவதாகக்
கழியும்

நாட்களை மாதம் தின்னுதலுமாக
மாதங்களை வருடம்-
-தின்னுதலுமான
என் வாழ்வை காலம் திண்ணும்

புலம் பெயர் வாழ்வின்
அவலத்தை சொல்லி மாளாது

இங்கே மாறுதல்
இயற்கையை மேவி நடக்கும்.
- ந. முரளிதரன்-

பூக்கள் மலர்வதை
பட்சிகள் பாடுவதை
ஒரு சூரிய உதயத்தை
உயிர்ப்புள்ள தாய்மொழியின்
தெருப்பாடலை...
இந்த நாடோடிக்கு
இதெல்லாம் ஏது?
-சுபா-

என்னை பிராணிபோல்-
-பார்த்தனர் இவர்கள்
ஸ்வாற்ஸ் என்று-
-அடையாளப்படுத்தினர்
கீழ்மைத் தொனியில்
"நாட்டைத் தூய்மைப் -
-படுத்துவோம்
தமி...லன் றவுஸ்!!" என
கோசமிடுகின்றனர் கிட்லரின்-
-வாரிசுகள்
(ஸ்வாற்ஸ் - கறுப்பர்கள்,
தமிழன் றவுஸ் - தமிழர்களே
வெளியேறுங்கள்)

விறகடுப்பும்
கிணற்றடியும்
தும்புத்தடியும்
வேற்று மொழியாய்
என்னைப்பார்த்து கண்சிமிட்ட

நான்கு சுவரும்
அருவருப்போடு
முகந்தூக்கிக் கொண்டன
- சுமதி ரூபன்-

5

தொலை தூர தேசங்களுக்கு புலம் பெயர்ந்து தமது தாயகத்திற்கு மீண்டும் திரும்பிச் செல்லுதல் சாத்தியமே இல்லை என்றாகும போதுதான் புகலிடம் என்றால் என்ன? என்ற கேள்வியே முதன்மை பெறுகிறது. தேசத்துடன் தம்மை நெருக்கமாக்கிக் கொள்ள முடியாது. தொடர்ந்து பல ஆண்டுகள் அடைக்கலம் புகுந்த நாட்டில் வாழ்வது, அகதி என்ற முத்திரை குத்தப்பட்டு வாழ்வது, கொடிதிலும் கொடிதானது.

தமது வாழ்க்கைகள் பறிக்கப் பட்டு உயிரும் பறிக்கப்படும் நிலையிலும் எப்படியும் உயிரை யாவது காப்பாற்றி வாழ்ந்திடுவோம். என்ற உந்துதலில்

படிப்பகம்

www.padippakam.com

தமது மிஞ்சியுள்ள சக்திகள் அனைத்தையும் திரட்டி தொலைதூரம் விரட்டப்படுகின்றனர். இங்கே தமது நினைவுகள் துரத்த துரத்த அந்த நினைவுகளின் நீட்சியில் தமது வாழ்க்கையின் எதிர்காலம் பற்றிய கனவுகளுடன் மிதக்கின்றனர்.

வாழ்க்கை சுக்கு நூறாக சிதறடிக்கப்பட்டாலும் ஒரு தொன்மை -யான சமுதாயத்தின் பிரதிநிதிகள், 'தாம்' என்ற உந்துதல் தமது கூட்டு வாழ்வையும், கூட்டு நினைவையும் எப்படியும் பாதுகாக்க முற்படுகின்றனர். இழந்த தாயகத்தின் நினைவைத் தக்க வைத்துக் கொண்டு அல்லது தக்க வைத்துக் கொள்ளவே தமிழர்கள் விடாது முயலுகின்றனர். புலம் பெயர்ந்த நாட்டில் கூட நமது இழந்த நாட்டை பழகிப் போன பழக்க வழக்கங்களை அப்படியே பின்பற்றுவதன் மூலம் இழந்த நாட்டை தம்முடன் கையி லெடுத்து வந்து விட்டது போன்று உணர்கின்றனர்.

ஊர் பற்றிய நினைவுகள் ஒவ்வொருவர் வாழ்விலும், முக்கியத்துவம் பெற்றுவிடுகிறது. இங்கு ஊர் என்பது உயிர்ப்புள்ள ஆத்துமம். மக்களுடைய பண்பாட்டுக் கூறுகள், நம்பிக்கைகள், சடங்குகள், ஐதீகங்கள், சமூக அதிகாரப் படிநிலை எல்லாவற்றையும் இது சுட்டுகிறது.

ஜெர்மனியிலோ, பிரான்சிலோ, எந்த நாட்டில் வசிக்கும் பொழுதும் அதே "ஊர் மனநிலை" உயிர்ப்புடன் இயங்குகிறது.

ஆகவே ஊரைவிட்டு வந்த மக்கள் அனைவருக்கும் நினைவு என்பது பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு பொக்கிசமாகி விடுகிறது. தொடர்ந்து வாழ்க்கையுடன் போராடவேண்டியும் ஏற்படுகிறது. இதனால் ஒருபுறம் தஞ்சம் புகுந்த நாட்டில் அன்றாட வாழ்வின் தேவைகளை நிறைவேற்ற உயிர் வாழ உழைத்தாக வேண்டும். இதற்கு அரையும் குறையுமாக எப்பாடுபட்டாவது அந்த நாட்டு இரவல் மொழியைக் கற்றாக வேண்டிய நிர்பந்தம் ஊரில் இழிவாகக்

//



படிப்பகம்

www.padippakam.com

கருதிய வேலைகளை எப்பிடியும் பிடித்தாவது வேலை செய்ய வேண்டிய நிர்பந்தம் மறுபுறம் வெள்ளை ஆதிக்கத்தை எதிர் கொண்டு வாழவேண்டும். ஏலவே இனவெறித் தாண்டவம் உள்ள நாட்டில் கொடுமைப்பட்டு தப்பித்து வாழும் இடங்களிலும் இனவெறி, இனஇறுமாப்பு ஆகிய வற்றின் தன்மையுணர்ந்து சமயத் திற்கு ஏற்றாற்போல் நடந்து கொள்ளவேண்டும். இது கூனிக் குறுகி அவமானப்பட்டு மனம் வெதும்பி அவதியுற்று வாழ வேண்டிய நெருக்கடி. ஆகவே தஞ்சம் புகுந்த நாட்டில் ஒவ்வொரு கணமும் தான் அந்நியன் என்பதை உணர்ந்து வாழ வேண்டி உள்ளது. இந்த உணர்வு ஒவ்வொருவரையும் மிக மோசமாகவே தாக்குகிறது. இந்திலையில் தனது கடந்த கால லயிப்பில் மிதக்கவும், அந்த நினைவுகளின் சுமைகளை சுமக்கவும் மனம் விரும்புகிறது.

ஆனாலும், நினைவு துரத்திக் கொண்டே இருக்கும். நினைவுகள் மறக்கடிக்க முடியாமல் விழித்துக் கொண்டே இருக்கும். இதுவே ஒவ்வொரு வருக்கும் பாதுகாப்பு உணர்வாகவும், தொழிற்படுகிறது.

6

1983களின் பின்னர் படிப்படியாக புலம் பெயர்ந்தவர்களின் வாழ்வனு பவம் வித்தியாசமானது. ஆயுதக் கலாச் சாரத்தின் கொடுமையினையும் சனநாயக மறுப்பினையும், மக்கள் மீது இயக்கங்களின் ஆதிக்கத்தையும் நேரடியாகக் கண்டவர்கள் அவற்றி லிருந்து விடுபட்டு ஒழிந்து ஓடியவர்கள்.

அதாவது தங்கள் பௌத்த பேரின வாதத்தின் கோர முகங்க ளையும், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் விடுதலையின் பெயரால் உள் நுழைந்து விட்ட அராஜக சனநாயக மறுப்பு களையும், நேரடி அனுபவங்களை யும் பெற்று புலம் பெயர்ந்தோர் இவர்கள்.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடி வந்தவர்கள், வந்த இடங்களில் எதிர்கொண்ட துன்பங் -கள் எண்ணிலடங்கா நிறவெறி, பாசிசம் போன்றவற்றின் கோரங் களையும் எதிர்கொண்டு வாழ வேண்டிய நிர்பந்தம், இவற்றின் உருட்டித் திரட்டப்பட்ட அனுபவங் களின் பல் பரிமாணம் புதிய உணர்திறன்களை ஏற்படுத்து கின்றன. இதனால் வித்தியாசமான சமூக

படிப்பகம்

www.padippakam.com

பண்பாட்டு அரசியல் மொழி களங்களில் புலம் பெயர்ந்தவர்களது எதிர்கொள்ளல் வாழ்வபனுபவங்கள் புதிய சாத்தியங்களை வேண்டி உள்ளன. இத்தனைக்கும் மத்தியில் தமது நினைவுகளின் சுழற்சிக்குள் ஆழ்ந்து மிதந்து கரையேறுதல் தவிர்க்க முடியாது. இதனால் தமது நினைவுகளை பதிவு செய்ய வேண்டிய நிர்பந்தமும் பலரை அழைக்களிக்கிறது. சனநாயக மறுப்புச் சூழலில் வாழ்வதற்கு நிர்பந்திக்கப் பட்டவர்கள் தற்போதைய சனநாயகச் சூழலில் தமது குரல்களை ஓங்கி ஒலிக்கின்றனர். தொடர்ந்து விடாது பேசிக்கொண்டி -ருக்கின்றனர்.

இதுவரை எழுதுதல் என்னும் செயற்பாட்டில் இயங்காதவர்கள் கூட தமது நினைவுகளை அனுபவங் களை மொழி வழியில் கரைத்து வரவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இது வரை கலை இலக்கியங்கள் எதிலும் பயில்வும் பயிற்சியும் இல்லாதவர்கள் கூட எழுதுகிறார்கள். புதிய தலை முறை எழுத்தாளர்கள் தோன்றுகிறார்கள்.

ஏலவே ஈழத்தில் எழுத்துத் தொடர்புடன் தீவிரமாக இயங்கிய எழுத்தாளர்கள் பலரும் கூட புலம் பெயர்ந்து வாழக் கூடிய நிலை ஏற் பட்டது. இதனால் இந்த படைப்பாளர் களுடன் புதியவர்கள் இணையுவும் பகிர்ந்து கொள்ளவும், விவாதிக்கவும் வேண்டிய சூழல் உருவாகியது. பல் வேறு கலை இலக்கிய அமைப்புகள் தோன்றின. பத்திரிக்கைகள் பல தோன்றின. புதிய அனுபவங்களும், உணர்திறன் களும், கதையாடல் போக்கும் மெல்ல மெல்ல வெளிப் பட்டன.

பேச்சுக்கான களமாக 'இலக்கியச் சந்திப்புகள்' தொடர் நிகழ்ச்சியாகி, சிதறப்பட்டிருக்கும் பலரை இணைக் கத் தொடங்கியது. அவரவர் சிந்த னைக்கும், நினைவுக்கும், தேடலுக் கும் உரிய வாயில்கள் திறந்து விடப்பட்டன. புலமைத் தளங்களில் நிகழ்த்தப்படும் உரையாடல்கள் முனைப்பான விவாதப் பொருள் -களாக மாற்றப்பட்டன.

தமிழ்ச்சூழலில் தொன்னூறுகளில் ஏற்பட்ட சிந்தனைத் தங்களில் ஊடாட்டம் கொண்ட புதிய சிந்த னைகள் கருத்தியல்களான அமைப் பியல் பின் நவீனத்துவம் தலித்தியம் போன்ற வற்றின் ஊடுபாவு கூட புலம் பெயர் சூழலில் புதிய போக்குகளை ஏற்படுத்தி உள்ளன.

7

எழுத்தாளர், சோபாசக்தி புலம் பெயர் இலக்கியம் குறித்து...

"பக்தி இலக்கியம், தேசிய இலக்கியம், மார்க்சிய இலக்கியம் ஆகிய புனிதப் பெருங்கதையாடல் களின் வரிசையில் அண்மைக் காலங்களில் புலம் பெயர் இலக்கியம்

படிப்பகம்

www.padippakam.com

சேர்ந்து கொண்டு விட்டது. துக்ககரமான செய்தியை உங்களுக்கு நான் அறியத் தருகிறேன்" என்கிறார்.

மேலும் "புலம்பெயர் இலக்கியம் என்ற லேபிலின் கீழ் முற்றவெளி உரையாடலையும், முனியப்பர் கோயில் கண்டலையும், நினைத்து ஏங்கி ஏங்கி ரெஸ்டோராண்ட் கோப்பை குளிர் தனிமை ஆகிய வற்றை முக்கிய கச்சா பொருளாகக் கொண்டும், இழந்த சொர்க்கம், பக்காவாலி தமிழ் பண்பாட்டு செட்டப் ஆகியவற்றை முக்கிய இலக்குகளாகக் கொண்டு புனையப் படுபவையே புலம் பெயர் இலக்கியம் என்று வழங்கப்பட்டு வருகிறது"

"இதற்கு சமாந்தரமாய் எழுந்து வரும் இன்னொரு போக்கான தமிழ் அடையாள உதிர்ப்பு, புலம் பெயர்த்த காரணத்தால் நேரடி அடிமை குடிமை சாதி அமைப்பிலிருந்து தப்பித்துக் கொண்ட தலித்துகளின் குரல், தாயக நினைவை மீட்டியே பார்க்க விரும்பாத பெண்களின் எழுத்துக் கள் ஆகியவை இந்த புலம் பெயர் இலக்கிய பெருங்கதையாடலுக்குள் அமுங்கிப் போய்விடும் அபாயம் உள்ளது" என்கிறார்.

கவிஞர் சேரன் புலம் பெயர் சூழல பற்றிய தனது சில அவதானங் களை இவ்வாறு பதிவு செய்கிறார்.

"ஈழத் தமிழர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் தேசியத்தின் உள் முரண்பாடுகள், தெளிவாகவே பார்க்கக் கூடியதாக உள்ளன. தமிழ்த் தேசியம் என்பதன் இரண்டு கண்கள் சைவமும், தமிழும்தான் என்று வலியுறுத்துகிற முரசொலி, வெற்றிமுரசு, தமிழ்மகள், ஆகிய பத்திரிகைகள் ரொன்றோவில் வெளியாகின்றன. அதே நேரம் மதச்சார்பற்ற திராவிட தமிழ்த் தேசியத்தையும், வடமொழி பார்ப் பனிய எதிர்ப்பையும், கருத்திய லாக்கக் கொண்டு இயங்குகிற முழக்கம்" எனும் வாரப்பத்திரிகையும் வெளியாகிறது. இவ்விரண்டு போக்குகளையும் பிரதிப லிக்கிற இப்பத்திரிக்கைகளுக்குச் சோழர் காலமும், சோழனது வீரயுக -மும் தான் ஆதாரமாக உள்ளன. கூடவே இந்த பத்திரிக்கைகள் விடுதலைப் புலிகளின் அபாரமான

படிப்பகம்

www.padippakam.com

விசுவாசத்திற்காகவும் அவர்களைச் சோழனது வாரிசாக வழிபடுபவர் -களாகவும் உள்ளனர்"

"ஈழத்தேசியம் எனும் பெருங் கதைக்குள் சாதியம், பால், ஊர், பிரதேசம், வர்க்கம் போன்ற உள் முரண்பாடுகள் எந்த அளவுக்குச் சிக்கலாக இருக்கக்கூடும் என்பது பற்றிய விவாதங்கள் புலம் பெயர்ந்த சூழலில் வெளிப்படையாக தெரிவிக்கின்றன. ரொறன்றோவில் மட்டுமே யாழ்ப்பாணத்திலுள்ள முப்பத்தேழு ஊர்களுக்குச் சங்கங்கள் உள்ளன. இவற்றோடு மன்னார், முல்லைத்தீவு வவுனியாப் பிரதேசங்களை உள்ளடக்கிய வன்னிப் பிரதேசத்துக்கு ஒரு சங்கமும், திரிகோண மலைக்கு ஒரு சங்கமும் உள்ளன. தத்தமது ஊர்/ பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் நல்வாழ்வுக்கும் துணை செய்யவே இத்தகைய சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் ஈழ யுத்தங்களுக்கு முன்பான ஒரு சமூக கட்டமைப்பையும், கழிவிரக் -கத்தையும், அதிகாரப் படிநிலை அமைப்பையுமே இவை கனவு காணுகின்றன. இம்முரண்பாடுகளை இன்று இலக்கியம்தான் நுட்பமாகச் சுட்டிக் காட்டுகிறது"

இவ்வாறு புலம் பெயர்ந்த சூழல்களில் தமது வாழிடத்தை அமைத்துக் கொண்ட சோபாசக்தி சேரன், போன்றவர்களின் கருத்துக்கள் அமைகின்றன.

புலம் பெயர்ந்த வாழ்க்கை, இலக்கியம், எழுத்து, எனவும் தேசியம், தேசிய வாதம், தமிழ் அடையாளம் போன்றவை குறித்த வேறு புரிதல்களும் ஒருங்கே இணைந்து இயங்கும் புள்ளிகள் பல புலம் பெயர்வுப் பரப்பில் தோன்றி யுள்ளன. அங்கு நடைபெறும் விவாதச் சூழல்கள், எச்சில் உயிர், நிழல், அம்மா போன்ற இதழ்களில் இடம் பெற்ற கட்டுரைகள் எண் ணங்கள் யாவும் மேலும் இவற்றைத் துல்லியப் படுத்துகின்றன.

ஈழத்து இலக்கியத்தின் அறுவ டைகளின் விளைச்சல் பரப்பி லேயே இதுவரை வளம் சேர்ந்த புலம் பெயர் எழுத்துக்கள், அடுத்த கட்டத்தை நோக்கி நகரத் தொடங்கி யுள்ளன. புதிய வகையிலான எடுத்துரைப்புப் பாங்கு ஆப்பிரிக்க புனைவுகளின் நேரடி மொழி பெயர்ப்பு பிரான்சு, ஜெர்மன் போன்ற



படிப்பகம்

www.padippakam.com

மொழிகள் வழி தமிழுக்கு வந்தடையும் புதிய வளங்கள் என முற்றிலும் வேறான பண்பு வகையில் பயணிப்ப, தொடங்குகிறது.

8

பொதுவில் புலம் பெயர் இலக்கியம் என்பது நீண்ட வரலாறு உடையது. தேசங்களில் இருந்து புலம் பெயர்ந்து வாழ்பவர்களில் பலர் ஆங்கில மொழியில் தான் எழுதியுள்ளார்கள். ஆகவே ஆங்கில மரபு வழி நின்று புலம் பெயர் இலக்கியம் என்று பார்க்கும் போது அவை ஆழமான பார்வைக்குரியனவாகவே உள்ளன. இவ்வாறான எழுத்துக்கள் எழுத்தாளர்களுடன் நமது தமிழ் எழுத்துக்கள் எழுத்தாளர்களை ஒப்பிட்டு ரீதியில் பார்க்கும் பொழுதுதான் தமிழில் புலம் பெயர் இலக்கியத்தின் விளைச்சல்கள் எவை எவை. தனித்துவங்கள் எவை எவை என்பதை bjsp hf glpeJ கொள்ள முடியும்.

ஆனால் இவற்றுக்கான வாய்ப்புகள் இன்னும் உருவாக வில்லை.

ஆயினும், அவ்வாறான முயற்சி கள் தான் தமிழில் 'புலம் பெயர் இலக்கியம்' பற்றிய ஆழ்ந்த பார்வைகளை இனி வெளிப்படுத்த முடியும்.

நாம் எந்த சமூகத்தில் இருந்து, ஊரில் இருந்து சென்றோமோ அதே ஊரில் நிலவிய சமூகத்தில் நில்விய சமூக ஒவ்வாமைகளை அங்கும் பேணிக்கொண்டிருப்போமாயின் சாதியம், பால், பிரதேசம் வர்க்கம் போன்ற களங்களில் மோதுகைப் படும் முரண்பாடுகள் இன்னும் சிக்கலாக்கப்படும். ஆகவே புலம் பெயர் இலக்கியம் இதனை மறைத்துக் கொண்டு இயங்க முடியாது. இதனை வெளிப்படை யாகவே பேச வேண்டும். தமிழ் தேசியத்தின் முற்போக்கு பாத்திரத்தை வலியுறுத்திச் செயற்பட வேண்டும் புலம் பெயர் இலக்கியச் சூழல் இதற்கு களம் அமைத்து கொடுக்க வேண்டும்.

ஆனாலும் இலங்கையில் தமிழ் அடையாளம் தமிழ்த் தேசியம் திணிக்கப்பட்டுள்ளது. தமிழ் பேசும் மக்களின் அரசியல் எதிர்காலம் தமிழ்த் தேசிய அரசியல் வழியிலேயே சாத்தியப்படும் என்னும் நிலை உருவாக்கப் பட்டுள்ளது. ஆகவே தமிழ்த் தேசியத்தின் முற்போக்கு கூறுகள் குறித்து விவாதிப்பதும், பரிசீலிப்பதும் தேவையானதுதான்.

இந்நிலையில் தான் சேரன், சோபாசக்தி போன்றோரின் கருத்துக்கள் கேள்விகள் ஆழ்ந்த பரிசீலனைக்கும் எமது கவனத் திற்கும் உரியவை. சேரன் சுட்டிக்காட்டும் போக்குகளினால்

படிப்பகம்

www.padippakam.com

ஏற்படக்கூடிய விளைவுகள் ஆபத்துக்கள் மிக மோசமானவை. ஆகவே நாம் தமிழ்த்தேசியம் என்பதை ஒற்றைத்தன்மையில் தமிழ்ச் சமூகத்தில் விரவியுள்ள அனைத்து ஆதிக்க பிற்போக்குக் கூறுகளுடன் கணக்குத் தீர்க்காமல் தேசியம் கட்டமைக்கப்பட்டு முன்னெடுத்துச் செல்வதனால் மிக மோசமான விளைவுகளையே சந்திக்க நேரிடும். இத்தகைய ஆபத்தையும் நாம் புரிந்துகொள்ளத்தான் வேண்டும்.

இன்னொருபுறம், தமிழ் தேசிய அடையாளத்தையே மறுப்பது வரை நாம் செல்வது அந்த சமூகத்தின் தலைவிதியைப் பறிப்பதாகவே இருக்கும்.

ஆக இன்று புலம் பெயர் சூழலில் வாழும் சேரன், சோபா சக்தி போன்றவர்கள் தமிழ் பேசும் மக்களின் அரசியலை முற்றாகவே மறுத்து விவாதிப்பது தற்கொலைக்கொப்பான செயற்பாடாக இருக்கும். நமக்கு தமிழ் அடையாளம் திணிக்கப்பட்டுள்ளது. தமிழ் தேசியம் நமக்கான அரசியல் எதிர்காலத்தை நிர்மாணிக்கிறது. ஆகவே நாம் ஆகாயத்தில் நின்றுகொண்டோ, உயர்ந்த தந்தக்கோபுரங்களில் இருந்துகொண்டோ 'தேசியம்' குறித்து ஆய்வு செய்ய முடியாது. இன்றைய இலங்கைச் சூழலில் தமிழ் பேசும் மக்களின் இருப்பு, அடையாளம் என்ன என்ற ரீதியிலேயே நமக்கான சமூகப் புலமைத் தேவையை நிறைவு செய்ய முடியும்.

புலம்பெயர்ச் சூழல் இதற்கு சாதகமாகவே இருக்க வேண்டும்.

(வானவில் இலக்கியவட்டம் 'நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்' எனும் தலைப்பில் 2000 ஆகஸ்ட் 12,13ல் கன்னியாகுமரியில் நடத்திய கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை)

படிப்பகம்

www.padippakam.com

ஏன்?

எது எழுத்து?
எதற்காக?
யாருக்காக?

தேடலும்-புரிதலும், தொடர்ந்திருக்கும் மூன்றாம் யாமத்து பொழுதினிற், எழுந்து நின்று, அரும் பெறல் கிடைத்திட்ட மகிழ்வு நெஞ்சத்தி -னுள் உய்யும்.

விருட்டென்று வெளிச்சென்று உலாவிட வைக்கும். சுழற்றும். சுழற்றிய பின், ஓரிடம் நிற்கும். இருள் அடர்ந்த ஒதிய மரத்தின் அசைவு ஒலியில், இன்னும் ஊடகமாய் பரந்து நின்று, நிதானித்துச் சிரிக்கும். நொடிப் பொழுதில் தீர்வுக்கு வராதது குறித்து ஏளனப் பார்வை குத்திட்டு நிற்கும்.

ஒரு துகளில், தேடியதை பெற்றிட்ட போது, அசைவு அலுக்குலைவு இல்லை. உடலின் குளிர்வு ஓடிச் செல்வது நமக்குத் தெரிந்திருந்தும், இந்தச் சூடு நிறையட்டும். கண்களை கமுட்டி எழுந்தட்டும். விரல் இடுக்குகளில், நகக்கணுக்குகளில் பிழிந்தெடுக்கப் படும். வாய் பிளந்து, நுண்குவித்து, தலை அண்ணாந்து புகைப் போக்கியாய் வெளியிடும்போதும், சூடு, பின்னிழுக்கிறது. கையின் கக்கத்தில் நெடுவாடிச் செல்கிறது. பிடித்து வைத்து சுகம் கேட்கச் சொல்கிறது. இது வரையான அல வாட்டுதல் இல்லாமல், தொடர்ந்திடும் அலர்ந்த காதலே. ஆனாலும், அலுமம் சிறுதுளியும் இல்லையே. மிகச் சிறிதளவான வீட்டினுள் இருந்து சூடு பெற அரின் இருந்தது. இன்று இல்லை.

புறத்தியான் தந்திட்ட பந்தித்திரம் நீடித்திடவில்லை, ஆகவே நெருங் கிடற்கு அரின் உண்டு. தூசர் மூட்டையுடன், நீராவிட காத்திருக்கும் ஆடைக் கழியல்கள். சூடு போத வில்லை. ஆகவே படுசூரணத்தின் தயவினை நாடுவதே நன்மையாம். ஆனால், ஈங்குள்ள இலக்கிய அன்றினர் உரைசெய்யல் கடினம். நவீனத்தின் நன்னுநர் என்றே தம்மை போற்றுவர். இவர்களின் உலுக்கல், உலாஞ்சுதலில் இலக்கியம் இல்லை. அது, உலகாள்வோன் படைத்தகாலை அவத்தானித்தது. இத்தன்மையில், அகநாடு திங்களிதழ் அவசாரணம் என்பது பிராந்தியம் பட்டவர் புரிந்திடுவதற்கும், மட்டுமேயல்லாது, எம்மொழி இலக்கியத்தை ஆக்கியோன் பிராக்கியன் தான் என்பதை நமக்கு நாமே புலப்படுத்தவும்தான்.

\- ஆசிரியர்.

படிப்பகம்

www.padippakam.com

மண்துகள்கள்!

வின் பிளந்து கண்டிருக்கிறேன்
மின்னல் கீற்றாய்
மண் பிளந்து கண்டேன்
தேசத்தின் சுவற்றிலே
வயதை தொலைத்து
கண்ணீரில் தேடும் பெண்கள்
வாழ்வை இழந்து
பாதையில் நிழல் தேடும் ஆண்கள்
பூக்களாய் சுருங்கிய
குழந்தைகள்
மண்துகள்கள் 'வாக்கரிசி'
மடிந்து பட்ட
மாந்தருக்கு
நிலை கண்டு
தனியாய் வேடிக்கை
காணும் நாய்களின் உணர்வு
யாரை குறை
சொல்ல
உண்ணும் போதும்
கையேந்தி நிற்கும்
சிறுவர்களின் உள்ளங்கைகளில்
என் உள்ளங்கையை
வைத்து அவர்களுக்காக
அவர்கள் மடிந்தாலும்
மண்ணில் நிலை மாறுமா?

– மோஸ்கஸ் பிலிவானா

அகநாடு/பிப்ரவரி 2001

www.padippakam.com

இதயமார்ந்த வாழ்த்துக்கள்!

நீடித்த தரம்
குறைந்த
விலை

எஸ்
பி
எம்

ஸ்ரீ பாலாஜி மரைன் ஒர்க்ஸ்

மீன்பிடி படகு தயாரிப்பாளர்

எஸ். சுப்பிரமணியன்

எண். 2, டி.எஸ். கோயில் தெரு
ஆத்தூர், தூத்துக்குடி

படிப்பகம்

www.padippakam.com

Advertise on Internet
Reaching Millions in simple
www. tnagar.com

Balaji Internet Services Private Limited

11A, Mahalakshmi Street, T. Nagar, Chennai - 17.
Tel : 434 5558, 434 7521 Telefax : 432 2021

DAILY TRIP TO TIRUPATI

Chennai - Tiruchanur - Tirumala - Chennai

(Sameday Return)

- **Super Deluxe**
- **Pushback Seats**
- **A/c Coach**

Darshan
Mineral Water (Bisleri)
Quality Breakfast and Lunch

Fare Rs. 750/- (Per head all inclusive)

Book in Advance

Balaji Tours and Travels

11-A, Mahalakshmi Street, T. Nagar, Chennai - 600 017.
Tel : 434 5558, 434 7521 Email : tours@tnagar.com

Regular Boarding Point

Opp. Siva Vishnu Temple, T. Nagar, Chennai - 600 017.

Time : 5.15 a.m.

Also available Internet Ticket Booking facility at www.tnagar.com

படிப்பகம்